தமிழ்த் தென்றல்

15-5-19[illegible]1

DIGITIZED

211, N47
N51.5.11
209351

சுகவாழ்வு

சுகந்த நிறைந்த

3001 ஜவ்வாது பத்திகள்

இன்பம் தரும்

இனியமணம் நிறைந்த

301 ஜவ்வாது பத்திகள்

நறுமணத்திற்கு

நற்கியாதி வாய்ந்த

31 ஜவ்வாது பத்திகள்

ஆரோக்கிய வாழ்விற்கு

"ஆசாத்" பாக்கட் பத்திகள் & ஹிந்த் குழாய் பத்திகள்.

தயாரிப்பவர்கள்:

S.V. முருகேசன் & பிரதர்ஸ்

மதுரை & பெங்களூர் சிடி

...பர மன்றம் :-

...ERFUME PARADIS...

...மிழ்

...ந்திட்டோம்!

...மொழிக் காளையீ!

...ர். 24, வெங்கலக் கடைத் செ...

...மொழி யாகிய — நந்தமிழ்

...ப்பாளர்கள் :—

...V. முருகேசன்

மதுரை, பெங்க...

20935

ஓர் நற் ... ப்தி

எங்கள் சொந்தப் பார்வையில்
தயாராகும்
வெள்ளைக்குதிரை மார்க்
கிழங்கு மாவு
புதிய வெள்ளை, மேலான நைஸ்
உள்ளது. ரவை ருசி மிகுந்தது.
சவ்வரிசி மிகவும் சிறந்தது.
P.R. & Co. மார்க்கைப் பார்த்து வாங்கி
உபயோகியுங்கள்.

WHITE HORSE BRAND
SUPERIOR QUA...

— எல்லா இடங்களிலும் கிடைக்கும் —

P. R. & CO.,
68 - A, Suramangalam Main Road,
SHEVAPET :: SALEM.
Prop: P. Rangasamy Naidu

ரிஜிஸ்டர், No 3010.

மந்திக்தோப்புமணிகட்டிச்சுவாமிக
கைமுறை அனுபோக
சர்வரோக
சஞ்சீவித்தைலம்
ஸ்நானம் செய்து சுகமடையுங்கள்
எல்லா ஊர்களிலும் எமது ஏஜண்டுகளைத் தேர்ந்து
...வல்நாடார் அன் ஸன்ஸ்
...ச்சுவாமிகள்சித்தவைத்தியசாலை உசில...
...ம்பத்தமூர்த்தி தெரு, மேலமாசி வீதி, மது...

நந்தமிழ் கற்றுயர்வோம்!

இசைப்பாடல்

பாடலாசிரியர்: நல்லிசைக்கவி அ. இளங்கோவன்

இசையாசிரியர்: சங்கீத பூசணம் G. புத்திரிகாமணி பாகவதர்

இராகம்: சிம்மேந்திரமத்திமம்] [தாளம்: ஆதி

எடுப்பு

நந்தமிழ் கற்றுயர்வோம் — நன்றாய்
நந்தமிழ் கற்றுயர்வோம்!

தொடுப்பு

செந்தமிழ்ச் செல்வரே! தென்றமிழ் நாட்டீரே!
"எந்தமிழ் எந்தமிழ்" என்றுநாம் பாராட்டி — நந்தமிழ்

முடிப்பு

வண்டமிழ் நாடு கொண்டுநம் இன்பத்
தண்டமிழ் ஆட்சியும் கண்டுயர் வுண்டு
பண்டுள சிறப்பும் உண்டெனக் காட்டிக்
கொண்டு குலாவிட மண்டுபுகழ்பெற — நந்தமிழ்

அயல்மொழி மீது மயல் மிகக் கொண்டு
செயல் மறந்திட்டோம்! உயல் துறந்திட்டோம்!
கயல்விழிக் கன்னியீர்! புயல்மொழிக் காளையீர்!
நயமொழி யாகிநம் சுயமொழி யாகிய — நந்தமிழ்

20935

தமிழ்த் தென்றல்

ஆசிரியர்: வே. வ. இராமசாமி

மணிநீரும், மண்ணும், மலையும், அணிநிழல்
காடும் உடையது அரண். — தமிழ்மறை

கொடி 5 | திருவள்ளுவராண்டு — 1982 வைகாசி க. (15—5—51) | பூ 11

உள்ளுறை

நேரு விலகுவாரா ? .... தலையங்கம் 5
வகுப்புவாரி நீதிக்கு அரண்! 10
மைத்துனி .... (தொடர்கதை) [illegible] 20
காலத்தின் கோலம் 29
கல்லும் பேசுகிறது .... [illegible] 33
மிருகமும் மனிதனும் .... [illegible] 41
கிராமத்தின் புனிதம் .... [illegible] 57



கதைகளில் வரும் பெயர்கள் கற்பனையே! கவிதை கட்டுரையாளரின் கருத்துக்களுக்கு ஆசிரியர் பொறுப்பாளியல்லர். தமிழ்த்தென்றலில் வெளிவரும் கட்டுரை, கதை முதலியன ஆசிரியர்க்கே உரியவை. ஆசிரியர் அனுமதியின்றி எவரும் அதைத்திரும்ப வெளியிடும் உரிமையுடையவராகார். [ஆசிரியர்.

நேரு விலகுவாரா?

"பஞ்சத்தின் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்து விட்டன. பஞ்சத்தை எதிர்த்து நாம் நடத்தும் போரில் நம்முடைய சக்தி, வலிமை முழுவதையும்உபயோகப்படுத்தி வெற்றி பெறவேண்டும்."

"ஆபத்து வேகமாக நம்மை நெருங்கிக்கொண்டிருக்கிறது. இதை உணர்ந்து ஆர்வத்துடன் எச்சரிக்கை ஏற்பாடு செய்யுங்கள். உங்களில் ஒவ்வொருவரையும் பாதிக்கப் போகும் தொல்லை இது. நமக்கும் அதற்கும் தொடர்பில்லை. ஏதோ தொலையில் உள்ள காரியம் என்று நினைத்து விடாதீர்கள்."

"எல்லாவற்றையும் விட நம் தாய் நாட்டின் மானத்தையும், தன்மானத்தையும் காப்பாற்றுவது இத்திரு நாட்டின் குழந்தைகளாகிய நம் கடமை."

இவ்வாறு இந்தியப் பேரவை முதலமைச்சர் நேரு அண்மையில் நிகழ்த்திய ரேடியோப் பேச்சில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் வெளியிட்டிருக்கும் எச்சரிக்கையை ஊன்றிக் கவனித்து, யாராவது நடவடிக்கை எடுத்திருக்கிறார்களா ?

சென்னையில் சில பகுதிகளில் பஞ்சமும், வேலையில்லாத்திண்டாட்டமும் அதிகரித்து விட்டதென நேரு வருந்துகிறார். இதையே ஓமந்தூராரும் முன்கூட்டியே எச்சரித்தார். ஆனால் அவ்வமயம் அவர் கூற்று ஏளனஞ் செய்யப்

பட்டது. நம் மாநிலத்தில் உணவுப் பஞ்சம் ஏற்படும் என்று யாராவது ஆதாரங்களுடன் கூறினாலும் அரசியலார் கேட்பதில்லை. அலட்சியஞ் செய்வதோடல்லாமல், தேர்தல் தந்திரமாக உணவுப் பிரச்சினையை உபயோகிக்கின்றார்களென்று கடுகடுத்து விடுவது வழக்கமாயிருக்கிறது.

நேருவே கூறிய பின்னாவது கண் விழிப்பார்களா? வெள்ளையர் காலத்தில், காந்தியடிகள் அரசியல் போராட்டத்தை நடத்தியபோது, அவருடைய வழிகளில் தமக்கு உடன்பாடு இல்லாதிருந்தாலும் நேருவும், பட்டேலும் அடிகள் தீட்டிய திட்டங்களின்படியே பணியாற்றி வெற்றி பெற்றனர். ஆனால் தற்சமயத்தில், நாட்டின் உணவு நிலைமை மோசமாயிருக்கிறது. அதோடு உலக அமைதிக்கும் பங்கம் ஏற்பட்டிருக்கின்றது. இதுபொழுது நேருவைச் சார்ந்த அன்பர்கள் யாது செய்து கொண்டிருக்கிறார்கள்?

காங்கிரசின் கட்சியில் பிளவு உண்டாக்காதீர்கள் என்று நேரு பதறுகிறார். ஆனால் நடப்பது என்ன? **எங்கும் வெளியேற்றுப் படலமும், வெளியேறும் பவனியுந்தான் காண்கின்றோம்.**

உயிர்நாடியான உணவு நெருக்கடியைப்பற்றி நேரு அபாயச் சங்கு ஊதிக்கொண்டிருக்கும்போது காங்கிரசாரும், மற்றாரும் வரும் பொதுத் தேர்தலை எண்ணி எண்ணி மயங்குகின்றனர்.

"1947ம் ஆண்டிலிருந்து மந்திரி சபைகளில் அங்கம் வகிக்கும் காங்கிரசு வாதிகளே இன்று மக்களுக்கு ஏற்பட்டுள்ள சங்கடங்களுக்கு காரணமாவார்கள்" என்று காங்கிரசிலிருந்து விலகிய **பேராசிரியர் ரெங்கா** பழி சுமத்துகிறார்.

"கடந்த 3, 4 ஆண்டுகளில் உணவு உற்பத்தியைப் பெருக்க நேரு சர்க்கார் ஒன்றுமே செய்யவில்லை. குளறுபடி கொள்கையில் நாட்டில் குழப்பத்தையேதான் உண்

— **தமிழ்த்தென்றல்**

டாக்கினர்" என்று சோஷலிஸ்ட்த் தலைவர் **டாக்டர் லோகியா** கண்டிக்கிறார்.

"நாட்டின் பொருளாதாரத்தையும், தொழில் வளர்ச்சியையும் பாழாக்கி விட்டார்கள். காங்கிரசுக்கு அழிக்கும் வலிமையுண்டே தவிர ஆக்கும் திறமை கிடையாது. காந்தியடிகளின் பெயரைச் சொல்லி ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவர்களை ஒழித்துவிட வேண்டும்." இப்படி சென்னை குடிஅரசு கட்சித் தலைவர்களும், பிற கட்சியாளரும் மார்பு தட்டிக்கொண்டிருக்கின்றனர். சல்லடம் கட்டுகின்றனர்.

இந்நிலையில் பொது மக்களின் கதியென்ன? அவர்களைப் பாய்ந்து வரும் பஞ்சத்தைப் போக்க இந்தியாவின் தலைவர்களெல்லாம் ஒன்று சேரக் கூடாதா? தம் நாட்டுக்கு அபாய நிலை தோன்றினால் மேனாட்டார் எவ்வித பேதமுமின்றி, எல்லாப் பிரிவினரும் ஒன்றுகூடி இணைந்து உழைக்கின்றார்களே; அந்தப் பண்பாடு நம் நாட்டில் உண்டாகாதா?

காந்தியடிகளின் தலைமையையும் ஒப்பற்ற தியாகப் பணியையும் காங்கிரசுத் தலைவர்கள் நன்கு பயன்படுத்தினர். ஒன்று கூடி உழைத்தனர். ஆனால் நேருவின் தலைமையையும் புகழையும் நாட்டு நலனுக்காக அவரைச் சேர்ந்தவர்கள் பயன்படுத்தக் காணோமே. தத்தம் செல்வாக்கையும், அதிகாரத்தையும் கெட்டி பண்ணிக்கொள்வதற்குத்தான் நேருவின் பெயர் உச்சரிக்கப்படுகிறது. நேரு ரேடியோவில் சொல்லியபடி ஆபத்தை உணர்ந்து பஞ்ச நிவாரண வேலையில் எந்தத் தலைவராவது ஈடுபட முன் வந்திருக்கிறாரா, அல்லது நேரு சொன்ன வழிகளில் பாடுபடுங்கள் என்று மக்களுக்கு வேண்டுகோளாவது விடுத்திருக்கிறார்களா?

ஒன்றுமில்லை. அரசாங்கமும், அமைச்சர்களும் அப்படித்தான்! இந்நாட்டு மக்களின் கதி இதுதானா, விழித்தெழ மாட்டார்களா?

— **தமிழ்த்தென்றல்**

அமெரிக்க நாடு எல்லா வளங்களும் உள்ள பெரிய நாடு. ஆகையால் அமெரிக்கர்கள் சராசரி எல்லோரும் நல்ல வருவாய் உள்ளவர்கள். ஆகவே அங்கு பணம் படைத்தவர்கள் கையில் ஆட்சி நடக்கிறது.

ஆங்கிலேய நாடு சிறிய தீவு. சென்னை மாகாணம் போன்ற அளவே. அங்குள்ள மக்களுக்கு வேண்டிய அநேக ஆகாராதிப்பொருள்களும், தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களும் வெளி நாட்டிலிருந்துதான் வரவேண்டும். உலக செல்வாக்கில் போட்டியிட கைத்தொழிலைப் பெருக்கி ஏற்றுமதி செய்து பொருளாதாரத்தை கெட்டிப் படுத்த வேண்டியவர்களாகயிருக்கிறார்கள். ஆதலால் அரசாங்கம் தொழிலாளர்கள் கையிலிருக்கின்றது.

ரசியா பரந்த நாடு. பெரும்பாலும் விவசாயத்தில் ஈடுபட்டது. நிலத்தை உழுது பயிரிட்டு வளப்பத்தைப் பெருக்கும் மக்களை வசப்படுத்திக்கொண்டவர்களின் ஆதிக்கத்தில் அரசாட்சி நடைபெறுகிறதென்று சொல்லலாம்.

ஆனால் நம் நாடு! பாரத நாடு; புண்ணிய பூமி. பல்வேறு இனங்களையும், கலாச்சாரங்களையும் கொண்ட உபகண்டம். ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக அந்நியர் படையெடுப்புக்காளாகி அடிமையாக்கப்பட்டுத் தன்னை மறந்திருந்து, பித்தம் தெளிந்தது சில ஆண்டுகளாகத்தான். விவசாயமே தலையானத் தொழிலாகக் கொண்டதாகயிருந்தும், உணவுக்கு வெளிநாட்டை எதிர்பார்த்து பரிதவிக்கும் நாடு. அன்றாட சோற்றுக்குக்கூட வழியில்லாத நடைப்பிணங்கள் நிரம்பிய நாடு. **ஆனால் உலகத்தில் உள்ள தனிப்பெரும் பணக்காரர்களில் பெரும்பாலோர் இங்கேதான் இருக்கிறார்கள். நம் நாட்டில் உள்ள தேவ ஆலயங்களுக்கும், மத அதிபர்களின் மடங்களுக்குமுள்ள செல்வமும் வருவாயும், மற்ற நாடுகளில் கிடையா.**

பொருளாதாரத்தில் இவ்வளவு முரண்கொண்ட அற்புதமான பூமி. ஏன்? இங்குள்ள பொதுமக்கள் பாம

ரர்கள். கண்ணிருந்தும் குருடர்கள். மண்டையில் மூளையிருந்தும் பகுத்தறிவில்லாதவர்கள். மூட நம்பிக்கையில் பழுத்தவர்கள். **ஆகவே இவர்களை ஏய்த்துப் பிழைக்கும் கூட்டம் அரசாட்சியில் ஆதிக்கம் பெற்றிருக்கிறது.** மக்கள் பஞ்சத்தால் வாடி வதங்கினால் இக்கூட்டத்துக்குக் கவலை ஏற்படுமா? மக்களாட்சிக்குப் பதிலாக மக்கள் பேரால் ஆட்சி நடத்தப்படுகிறது. அதுதான் மற்ற நாட்டுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடு.

இந்திய வரலாற்றைக் கூர்ந்து படித்துப் பார்த்தால் நாட்டு அரசாட்சிகளெல்லாம் நிலத்துக்கு உரியவர்களுக்கு விரோதமானவர்களின் ஆதிக்கத்துக்குச் செவி சாய்த்து மடிந்து போயிருக்கின்றனவென்பதைத் தெரியலாம். **ஆகவே நாட்டு மக்களுக்கு உய்வு வேண்டுமானால் அன்றாட அரசாங்க அலுவலில் உழன்று கிடப்பதை விட்டு, டாக்டர் ஜான் மத்தாய் கூறியபடி, அமைச்சர் பதவியிலிருந்து விலகி மக்கள் நல்லவராக நாட்டை நடத்திச் செல்ல நேரு முன் வர வேண்டும்.**

தமிழ் வெல்க!

1951 ம் வருடம்
நமது நாட்டில் மக்களின் எண்ணிக்கை.
(CENSUS - 1951)

ஆண்கள் **183,384,807.**
பெண்கள் **173,506,817** என்று உத்தேசமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இப் புள்ளி விபரத்தில் ஜம்மு, காஷ்மீர் பிராந்திய மக்களும், அஸ்ஸாம் மாகாணத்தில் உள்ள மலைப் பிராந்தியத்திலுள்ள மக்களும் சேர்க்கப்படவில்லை. உலக மக்களின் எண்ணிக்கை ரீதியில் சீனாவுக்கு அடுத்தபடியாக நம் நாடுதான். இது உலக மக்களின் எண்ணிக்கையில் 15·1 சத விகிதமாகும். 1941-வருட மக்களின் எண்ணிக்கைக்குப் பின் 420 லட்சம் அதிகரித்துள்ளது.

விருதுநகர் மக்களின் எண்ணிக்கை.

	1951
ஆண்கள் :	23,453
பெண்கள் :	23,003
	46,456

வகுப்புவாரி-நீதிக்கு அரண்!

"என்னுடைய சொந்த உணர்ச்சி — எண்ணங்கள் எப்படியோ இருக்கலாம். பொறுப்புள்ள அமைச்சர் என்ற நிலையில் நோக்கும்போது, வெறும் இலட்சியங்களை மாத்திரம் கவனித்தால் போதாது. உண்மையில், நடைமுறையில் என்ன நிகழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதை நினைவில் இருத்திக் கொள்ளல் வேண்டும். எங்கள் (மலையாள) மாவட்டம் வளமற்றது. மக்கள் எல்லோரும் ஏழைகள். ஆகையால் வாழ்க்கையில் இடம் பெற்று வாழ எல்லோரும் படித்திருக்கிறோம். இந்த வகுப்புவாரி உத்தரவு இல்லாவிட்டால், எங்களுக்கு (நூறுக்கு நூறு படித்திருக்கும் மலையாளிகளுக்கு) நன்மை உண்டாகும். யாருடனும் போட்டியிட முடியும்."

"சில மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கும் சங்கடத்தில் மட்டும் இந்தச் சிக்கல் இல்லை. நாட்டில் உள்ள நிலைமை என்ன? அது சமுதாயத்தை எப்படிப் பாதிக்கிறது? அதன் மூலம் நாட்டின் நலம் என்னவாகும் என்பதை ஆராய வேண்டும்."

"தகுதி — பொருத்தம் என்ற சொல் இச் சபையில் இன்று நடந்த பேச்சுக்களில் சிறப்பாகக் குறிப்பிடப்பட்டது. ஒவ்வொருவரும் அதற்கு ஒரு அளவுகோல் வைத்திருப்பதாகத் தெரிகிறது. பொதுவாக "தகுதி" என்றால்

பள்ளிப் படிப்பு முடிவுத் தேர்வில் ஒருவன் அடைந்த எண்கள் எத்தனை என்பதுதான். இதுதான் பொது மக்களின் எண்ணம்.

"ஐயா, 75 மார்க்குகளுக்கும், 74 மார்க்குகளுக்கும் பேதம் என்ன? ஒரு கேள்வித்தாளைத் திருத்தியவரின் மனப்போக்கைத் தவிர என்ன காரணம் இருக்கமுடியும்? விடைத் தாள்களை திருத்தும்பொழுது, (நானே வாத்தியாராக சில நாட்களிருந்து இவ்வேலையில் ஈடுபட்டிருக்கிறேன்) மன நிலைமை எப்படியிருந்ததோ, அதற்குத் தகுந்தாற்போல் மார்க்குகளும் விழும். உணவு அருந்துவதற்கு முன்போ, உண்ட பின்போ, ஏதாவது சிறு தொல்லை ஏற்பட்டிருந்தாலோ, அல்லது இல்லையோ, விடைத் தாள்களைத் திருத்துவதையும் பாதிக்கின்றது. இது இயல்பு. ஆகவே எண்கள் நிறையாகவோ, குறைவாகவோ இருப்பதை வைத்து தகுதி, திறமையைக் கணிப்பது நேர்மையில்லை."

"திறமையிருந்தும், வகுப்புவாரி உத்தரவின் காரணமாக அநேக மாணவர்கள் சேர்க்கப்படாமல் போகிறார்கள். இச்சங்கடத்தை நீக்குவதற்கு அதிகப் பள்ளிகள் திறக்க வேண்டுமென்று கூறப்பட்டது. சரியான யோசனை. ஒப்புக்கொள்கிறேன். ஆனால், அதற்குப் பணம்? கடன் வாங்கியாவது செய்யலாம் என்றால், கட்டடங்கள் ஒரே நாளையில் முளைத்துவிடுமா? பல ஆண்டுகள் செல்லுமே! நாளை ஜூலை மாதத்துக்குள் மாணவர்களைச் சேர்க்கும் சங்கடம் வந்துவிடுமே. அதற்காகத்தான் கண்முன் நடப்பதைக் கவனிக்கவேண்டுமென்று சொல்கிறேன். மர நிழலில் நடத்தலாமே என்று ஒரு அன்பர் கூறுகிறார். மரம் வெய்யிலைத் தாங்கிக்கொள்ளும். மழை பெய்தால் அதுவும் உதவாது. இந்நிலையில் என்ன செய்வது?"

"சென்ற ஆண்டில் இன்ஜினீயரிங் கல்லூரியில் எப்படி நடந்ததென்று கவனிப்போம். அரிசனங்களுக்கு

ஒதுக்குவதை யாரும் எதிர்க்கமாட்டார்களென்று நம்புகிறேன். மார்க்குகள் மாத்திரம் கவனித்தால், சென்ற ஆண்டில் ஒரு அரிசன்கூட சேர்ந்திருக்க முடியாது. ஒரே ஒரு முகம்மதியருக்கு மட்டிலும் இடம் கிடைத்திருக்கும்! இந்நிலையை சபை உறுப்பினர்கள் விரும்புகிறார்களா?

"நீதி மன்றத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்று உறுதிபாடுள்ளவன் நான். அத் தீர்ப்பில் சொல்லியபடி அரசியல் சட்டம் பிரிவு 29 (2)ன்படி மதம், இனம், சாதி, மொழியின் காரணமாக யாரையும் எப்பள்ளியிலும் அனுமதிக்க மறுக்கக்கூடாது. ஆனால் பிரிவு 46ன் கீழ் என்ன சொல்லுகிறது: 'அரசாங்கம் தனிக் கவலையெடுத்து, வலிமையற்ற மக்களுக்குக் குறிப்பாக செடியூல்டு சாதிகளுக்கும், இனங்களுக்கும், பொருளாதாரத்திலும், கல்வியிலும் வசதி செய்து கொடுக்கவேண்டும். அதோடு அவர்களை சமுதாய அநீதிகளிலிருந்தும், சுரண்டலிலிருந்தும் காப்பாற்ற வேண்டும்' என்று திட்டமாக அறிவுறுத்துகிறது.

"இது அரசியல் சட்டத்திலுள்ள முரண் அல்லவா? ஆகவே சென்னை நீதிபதிகளின் கருத்துப்படித் திருத்தப்பட வேண்டாமா? நூறுக்குநூறு மார்க்குகள் பெற்ற மாணவர்கள் நான்கு பேர்கள் இருக்கலாம். இடமிருப்பது இரண்டு பேருக்குத்தான். அப்போது இரண்டுபேர் இடமில்லாமல் போக வேண்டியதுதான். இடம் குறைச்சலாய் இருக்கும்போது குறை கூறிப் பயன் என்ன? சட்டத்தைத் திருத்தப்படாது என்ற மனோபாவந்தானென்னவோ! ஒரு வகுப்புக்கு இடம் பத்திரமாக இருந்தால் போதுமா?

"ஒரு பீமராவுக்கு இடம் கெட்டி—ஆனால் மற்றவர்களுக்கு எவ்வளவு அநீதி? ரயில் வண்டியில் மூன்றாம் வகுப்புக்குள் ஒருவன் நுழைந்து தனக்கு ஒரு இடம்

கிடைத்தவுடன் தான் உட்கார்ந்து கொண்டு, பிறரை உள்ளே வரக்கூடாது என்று தடுப்பதுபோலல்லவா இருக்கிறது, பீமராவின் நோக்கம்! இந்த அநீதி நாட்டில் இன்னம் நீடிக்கவிட்டால், வருங்காலத்தில் ஏற்படும் இன்னல்களையும், போராட்டங்களையும் எண்ணி பெரிதும் கலங்குகிறேன். பிராமணரல்லாதார் தமக்கு இடம் ஒதுக்கி வைக்க வேண்டுமென்று கேட்பது இழிவுதான். அவர்கள் முட்டாள்கள், படித்து மற்றவருடன் போட்டியிட லாயக்கற்றவர்கள்தான் என்று காட்டுகிறது. எனினும் சமுதாயத்தில் கண்முன் நிலவும் நிலைமையை மறக்கலாமா!"

"மேலும் இந்தத் தீர்மானத்தின்மீது பேசிய பீமராவ், கோவிந்தாச்சாரி போன்ற அன்பர்கள் நமது தொன்று தொட்டுவந்த பழமைகளைக் கைவிட்டுவிடக்கூடாது என்று எச்சரித்தார்கள். ஆனால் அவைகளை அப்படியே நிலைநிறுத்தி வருவதில் சங்கடங்கள் இருக்கின்றனவே. காலப்போக்கினால் மாற்ற வேண்டியது எவ்வளவோ இருக்கிறது.

"உதாரணம் சொல்கிறேன், கேளுங்கள். என்னுடைய வாலிப் வயதில் பவபூதி என்னும் ஆசிரியர் இயற்றிய உத்தர் இராமாயணத்தைப் படித்திருக்கிறேன். மிகவும் பெயர்பெற்ற நாடகம். அதில் ஒரு கட்டம் வருகிறது. என்னவெனில்: காட்டுக்குப் போய்வந்து மற்ற சம்பவங்களெல்லாம் நடந்த பிறகு இராமர் அரசாட்சி பண்ணிக் கொண்டிருக்கிறார். அக்காலத்தில் ஒரு சிசு இறந்து விட்டது. இராமபிரானுக்கு வருத்தமும் கோபமும் வந்து விட்டது. 'என்னுடைய ஆட்சி வழுவில்லாததாச்சே அப்படியிருக்க எப்படி ஒரு குழந்தை மரணம் அடையமுடியும்?' என்று கேட்கிறார். உடனே மக்கள் நாலா பக்கமுஞ் சென்று தேடிப்பார்த்ததில் ஒரு "சூத்திரன்" ஆண்டவனை நோக்கித் தவம் பண்ணிக்கொண்டிருக்கிறான். ஆதலால் அச்சிசு இறந்தது என்று கண்டுபிடித்துச் சொல்கிறார்கள். உடனே அத்தவத்தோனைக் கொல்ல ஆவேசத்

துடன் ஸ்ரீ ராமர் புறப்பட்டுப் போகிறார் கையில் உருவிய வாளுடன். அந்தப் பரம பக்தனோ தலைமீது நின்று கடுந் தவம் பண்ணிக்கொண்டிருக்கிறான். இராமபிரான் அவன் தலையை வெட்டுவதற்கு ஆயத்தமானார்; ஆனால், அவர் கரமோ நகர மறுத்துவிட்டது. ஆச்சரியமுற்ற இராமர் தன் வலது கையைப் பார்த்து கூறுகிறார்: "ஏ, வலக் கையே; என்மீது ஆசையும் காதல் பெருக்கமும் கொண்ட மனைவியாகத்திகழ்ந்த சீதை,கர்ப்பிணியாக இருந்தபோது, அவளைக் காட்டுக்குத் துரத்தினேன். அவ்வளவு நெஞ்சழுத்தம் எனக்கு இருந்ததே. அப்போது எனக்கு இருந்த உரம் இப்போது இல்லையா? வலக் கையே, கூசப் படாதே. வெட்டு" என்றார். 'சூத்திரன்' கொல்லப்பட்டான். அதுதான் கதை.

"மேலும் நான் சிறு பிள்ளையாயிருக்கும்போது "நீதிசாரம்" படித்திருக்கிறேன். அதில் ஒரு சுலோகத்தில் சொல்லப்பட்டிருப்பதைக் கேளுங்கள்: **"குளித்த குதிரை; மதம் பிடித்த யானை — காமவெறி கொண்ட காளை — எழுதப் படிக்கத் தெரிந்த சூத்திரன்" இவர்கள் விலக்கப்படவேண்டியவர்கள் — கிட்டத்தில் போகாதே"** என்று நீதிசாரம் சொல்கிறது.

"ஐயா! இதுதான் நமது இந்திய நாகரீகம்! இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்டவை! இரண்டாயிரம் ஆண்டுகளாக ஒரு பிரிவினர் தலைமுறை தலைமுறையாக தாம் படித்து தம் அறிவைப் பெருக்கி வந்திருக்கின்றனர். ஏனையோர் படிக்காமலும், அறிவிலிகளாகவும்இருக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டு வந்திருக்கின்றனர். இப்பேர்ப்பட்**டவர்களைத்தான் படித்து முன்னேறியவர்களுடன் போட்டியிடக் கூறுகிறீர்கள் இது நியாயமா?"**

"தலைவர் அவர்களே; அந்தக் காலத்தில் நான் படித்தால் என் நாக்கு அறுபட்டிருக்கும். ஆனால் இப்பொழுது நாகரீகம் வளர்ந்துவிட்டது. நல்லவேளை முன்மாதிரியில்லை.

ஆகையால் கொஞ்சம் இரக்கம் காட்டப்படவேண்டும். சமுதாயத்தில் பின் தங்கியவர்களைத் தூக்கிவிட வேண்டிய கடமை அரசாங்கத்தின் மீது சுமத்தப்பட்டிருக்கிறது. அதைத் தவிர்த்து எப்போதும்போல்தானிருக்க வேண்டும், சட்டத்தைத் திருத்தமுடியாது என்று சொன்னால் அந்தோ! பின்னால் என்ன விளையுமோ—அதை எண்ணித்தான் அஞ்சுகிறேன்."

"பீமராவ் பேசியபோது தகுதியைக் குறைகூறுவது, மார்க்குகளைச் சிறுமைப் படுத்தியதுபோலாகிறதென்றும், (தென் கன்னட மாவட்டத்தைச் சேர்ந்த) பெனிகால் ராமராவ், நரசிங்க ராவ் போன்ற நிபுணர்கள் கல்வியில் முதன்மையாக திகழ்ந்தமையால் முன்னுக்கு வந்திருக்கிறார்களென்றும், அவர்களைப் போன்றவர்களைத் தடுப்பது போலாகுமென்றும் வாதித்தார்."

"பெனிகால் குடும்பத்து அறிஞர்களைப் போன்றவர்களைப் படிக்காமல் தடுக்கவேண்டுமென்று யாரும் கூறவில்லையே. ஆர்க்காடு சர். A. இராமசாமி முதலியார் எந்தப் பரீட்சையிலும் முதன்மையாக (First Class) தேறியதில்லையாம். அப்படியிருந்தும் அவர் தாமாகவே முன்னுக்கு வந்து தற்சமயம் உலக அரங்கில் சுடர்விட்டெரியும் கீர்த்தி பெற்று நம் நாட்டுக்கும் புகழ் தேடிக் கொடுத்திருக்கிறார். பெனிகால் குடும்பத்தினருக்குக் கிடைத்த வாய்ப்பு மற்றவர்களுக்கும் கிடைத்திருந்தால் இன்னும் நூற்றுக் கணக்கான இராமசாமி முதலியார்கள் தோன்றியிருப்பார்கள். மற்றவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. உண்டாகவில்லை என்பதுதான் காரணம்."

"இப்பொழுது ஒரிசா மாநிலத்துக் கவர்னராக நியமிக்கப்பெற்றிருக்கும் V. P. மேனன் (முப்பத்தேழு ஆண்டுகளுக்கு முன் வேலைக்கு அலைந்து தேடி—தில்லி நகருக்குச் சென்றவர்) மெட்ரிக்குலேஷன் தேர்வுகூட எழுதவில்லை

யாம். ஆகவே எல்லாம் சமயமும், சந்தர்ப்பமும் கிட்டுவதைப் பொறுத்துத்தான் என்பது விளங்கும்."

"வகுப்புவாரி உரிமை முழுவதும் ஒழிந்துவிடவேண்டுமென்று கூறுவோரும், அந்த முறை அப்படியே யிருக்க வேண்டுமென்று சொல்வோரும், பழுத்த வகுப்புவாதிகள் என்பதில் ஐயமில்லை. ஆனால் இதற்கு சமரச உடன்பாடு வேண்டாமா? மக்கள் மனத்திலே கொதிப்பு ஏற்பட்டு அதன் காரணமாக விளையும் சங்கடங்களையும், குழப்பத்தையும் தடுக்கவேண்டு மென்பதே எங்கள் சர்க்காரின் விருப்பம். அந்த நோக்கத்தைக் கொண்டுதான் இந்தத் தீர்மானத்தை வரவேற்கின்றோம். பன்னெடுங்காலமாக படுகுழியில் தள்ளப்பட்டுக் கிடக்கும் தாழ்த்தப்பட்ட, கொடுமைப் படுத்தப்பட்ட மக்களை கைதூக்கிவிடவேண்டுமென்பதேதான் எங்கள் கருத்து. தொழிற்கல்வி நிலையங்களில் பன்னிரெண்டு இடங்களை ஒதுக்கி எங்கள் கையில் வைத்திருந்தோம். அந்தப் பன்னிரெண்டில் ஒன்பது பிராமணர்களுக்குக் கொடுக்கப் பட்டது. இப்படியிருந்தும் எங்கள் மீது வகுப்புவாத குறை கூறும்போது இவைகளை எடுத்துச்சொல்ல வேண்டியது ஏற்படுகிறது. எண்ணியிருந்தால் பன்னிரெண்டு இடங்களையும் பிராமணரல்லாதாருக்கே கொடுத்திக்கலாமே."

"வேறுபாடில்லாமல் எல்லா மக்களுக்கும் சமூக நீதியும் பொருளாதார நீதியும் வழங்கப்பட வேண்டுமென்று கோவிந்தாச்சாரி இயம்பினார். ஆம். உண்மையே. ஆனால் நான் மந்திரியாக இருக்கின்றபடியால் என் மகனுக்குக் கற்றுக் கொடுக்க எத்தனையோ ஆசிரியர்களை வீட்டிலேயே வைத்துக்கொள்ளலாம் பிற வசதிகளையும் செய்துகொடுக்க முடியும். இந்தப்படி ஒரு சாதாரண நபர் செய்துகொள்ள முடியுமா, தன் பையனுக்கு? அப்படியிருக்க ஒரு ஏழை ஆதித்திராவிடனால் என்ன வசதி செய்துகொள்ள முடியும்? இந்நிலையில் என்ன சமூக நீதியும், பொருளாதார நீதியும்

இந்த ஏழை மக்களுக்கு வழங்குவார் நண்பர் கோவிந்தாச்சாரியார்? இந்த ஏழை மக்களுக்குத் தம் வீட்டில் கிடைக்காத வசதிகளைப் பெற கல்லூரியில் என் மகனுடன் உட்கார்ந்து படிக்க வசதி செய்து கொடுக்க வேண்டாமா? அப்படிச் செய்தால் வகுப்புவாதமாகுமா?

"வகுப்புவாத மனப்பான்மை ஒழிய வேண்டியதுதான். ஆனால் அது யாரிடமிருக்கிறது? ஆராய்ந்து பார்த்தால் தெரியும். பிறரை வகுப்புவாதிகள் என்று எவர்கள் திட்டுகிறார்களோ, அவர்களே ஒன்றுக்கூடா வகுப்புவாத பேர்வழிகளாகயிருக்கிறார்கள்.

"கேளுங்கள். திருவாங்கூர் நாட்டில் ஒரு பகுதியில் யானைக்கால் நோய் அதிகமுண்டு. அங்கு அந்த நோய் கண்ட ஒருவன் தன் காலை மணலுக்குள் புதைத்துக் கொண்டு சாலையோரத்தில் உட்கார்ந்து கொள்வான். சாலை வழியாகப் போகும் ஒரு யானைக்கால் நோயுள்ளவனைப் பார்த்து "ஏய்! யானைக்கால்வாலா" என்று ஏளனமாகக் கூப்பிடுவான். தன் வீங்கியகாலை மண்ணுக்குள் புதைத்துக்கொண்டதினால், ஏன்ஐயா, அவன் நோயில்லாத கால் உடையவனாக ஆகிவிடுவானா? அதே போன்று, யார் முழுக்க முழுக்க பச்சை வகுப்புவாதிகளோ, அவர்களே பிறரை (அதாவது சம வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று வாதாடுவோரை)வகுப்புவாதிகள் என்று அழைத்தால் உண்மை மறைந்துவிடுமோ? இக்கூற்றுதான் குழப்பத்துக்கு தூண்டுகோலாகுமென்பதை உணரவேண்டும்.

"ஆகவே உண்மையில் நடைமுறையில், என்ன ஏற்றதாழ்வு, அநீதி, சந்தர்ப்பக்குறைவு முதலியன இருக்கின்றனவோ, அவைகளைக் களைந்து மக்கள் உள்ளத்தில் திருப்தியும் அமைதியும் நிலவவேண்டு மென்பதற்காகவே, காலத்துக்கேற்ப, அரசியல் சட்ட விதிகளை மாற்றியமைக்க வேண்டுமென்று விரும்புகிறோம். அதற்கு இத்தீர்மானம் பயன்படுமென்று எங்கள் அரசாங்கம் கருதுகிறது. ஆகை

யால் யாரும் எதிர்க்காமல் எல்லோரும் ஆதரிக்க வேண்டியது கடமையாகிறது".

மேலே பேசிய பேச்சுக்கள், ஜஸ்டிஸ் கட்சியின் தூணாக விளங்கிய ராமசாமி முதலியார் பேசியதல்ல; சாதி ஒழிய வேண்டுமென்று கட்டியங்கூறியிருக்கும் சுயமரியாதைத் தந்தை ராமசாமி நாயக்கர் வீசியதல்ல; தீண்டாமை, நாட்டின் சாபக்கேடென்ற காந்தீயத்தின் மணியாக விளங்கும் ராமசாமி ரெட்டியார் கொட்டியதல்ல; வேறு எந்த ராமசாமியும் அளந்ததல்ல.

வகுப்புவாதக் கட்சியென்றுசொல்லப்படும் ஜஸ்டிஸ் கட்சியைக் குழி தோண்டி புதைத்து, நாட்டை அரசாளும் வாய்ப்பு (உரிமையல்ல) கிடைத்த காங்கிரசாரால் நியமிக்கப்பெற்ற சட்டம், கல்வி இலாகா மந்திரி மாதவமேனன் உணர்ச்சியுடன், உள்ளக் கனிவுடன், உண்மையை உணர்ந்து பேசிய சொற்கள். அதுவும் வகுப்புவாரி உரிமை உத்தரவு செல்லாது என்று உயர்ந்த நீதிமன்றம் தீர்ப்பளித்த பிறகு காங்கிரஸ் வீரர்கள் வெறும் வாய்வீச்சு செய்துகொண்டிருந்தபோது, ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த **மேடை தளவாய்குமாரசாமி முதலியார் என்ற எமது நண்பர்,** மேற்சபையில்-"வகுப்புவாரி உரிமையை பாதுகாக்க வேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டுமென்று" ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்.

அதன் மீது வாதங்கள் நடைபெற்றன. பல சிக்கல்களுக்குப் பதில்கூறுமுகத்தான் மாதவமேனன் அருமையாகப் பேசியிருக்கிறார்.†

அவரை வாயார மனமாரப் போற்றுகிறோம். வாழ்த்துகிறோம். நம் தொகுதியில் தேர்தலுக்கு நின்றால் அவருக்கு முதல் ஓட் எம்முடையது என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

† குறிப்பு :— சென்னை ஆங்கிலத் தினசரியான "லிபரேட்டர்" பத்திரிகையில் வெளிவந்த திரு. மாதவமேனனின் முழுப்பேச்சின் விபரத்திலிருந்து தமிழாக்கம் செய்யப்பட்டது.

— தமிழ்தென்றல்

பிரமிக்கத்தக்க முன்னேற்றம்!

மதுரையிலேயே மிகப் பெரிய ஹோட்டல்.

ஒரே சமயத்தில்

400 பேர்கள் சாப்பிட இடவசதி அமைந்தது. பெண்களுக்கும், குடும்பத்துடன் வருபவர்களுக்கும் மாடியில் வசதியான இடம் உள்ளது. சுத்தம், நாவிற்கு ருசியுள்ள சிற்றுண்டிகள், சாப்பாடு, காபி இவைகளுக்கு இன்று பிரசித்திபெற்று விளங்குவது.

"நாகலக்ஷ்மி பவான்"

பிருமணாள் காபி & சாப்பாடு ஹோட்டல்

9—10, மீனாட்சி கோவில் தெரு,

(சென்ட்ரல் பேங்க் எதிர்)

மதுரை.

Prop:- நாகலிங்கம் ஸ்டோர்ஸ்

A. N. M.

— ராஜம்.

— தமிழ்த்தென்றல்

(தொடர் நாவல்)

மைக்குவனி

ஜீவா

பின்னர், சதானந்தம் பிள்ளையும் மாசிலாமணி முதலியாரும் நாற்காலிகளில் வந்து உட்கார்ந்தனர். அப்போதும் பிள்ளையவர்களின் செவிகளில் மங்கையர்க்கரசியின் மொழிகள் இனிமையாக ஒலித்துக் கொண்டிருந்தன; ஆதலால், அக்குரல் இனிமையிலேயே மனத்தை லயிக்க விட்டு மௌனமாயிருந்தார்.

மாசிலாமணி முதலியார் பிள்ளையவர்களின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார். எப்போதும் ஏதாயினும் 'தொணதொண'வென்று பேசிக்கொண்டிருக்கும் இயற்கையுடைய அவருக்கு இம்மௌன நிலையை நீண்டநேரம் பொறுத்துக் கொண்டிருக்கமுடியவில்லை. ஆகவே, அவர் பிள்ளையவர்களைநோக்கி மெள்ளப் பேச்சுக் கொடுக்க தொடங்கி, "என்ன அண்ணா, இருந்தாற்போலிருந்து தக்ஷிணாமூர்த்தி கோலம் கொண்டுவிட்டீர்கள். பக்தனொருவன் நான் காத்துக் கிடக்கிறேன், தங்களின் கருணைகடாட்சத்துக்கு. திருவாய் மலர்ந்து அருளுங்கள். சொல்லாமல் சொல்லும் தங்கள் மௌன நிலையை அடியேனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை" என்றார் நகைத்தவாறே.

முதலியாருடைய கையாண்டிப் பேச்சு, பிள்ளையவர்களை விழிப்புற வைத்தது. "ஏதோ யோசனையுண்டாயிற்று. அதிலேயே ஆழ்ந்து விட்டேன், முதலியார்வாள். வேறொன்றுமில்லை" என்று மங்கையர்க்கரசியின் பேச்சு நினைவிலிருந்து விடுபட முயன்றவாறே கூறினார்.

"என்ன யோசனையோ?" என்று முதலியார் கேட்கப் போகுஞ் சமயத்தில், பிள்ளையவர்கள் "அத்துடன், இன்றெல்லாம், கோனார் விவகாரத்தைப் பற்றியே எங்கும் யாருடனும் பேசவேண்டியதாய் விட்டது. எங்கோ எவனோ ஏதோ செய்துவிட்டுப் போக, அதற்கெல்லாம் நாம் கண்டவர்களுக்குப் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. 'ஊரான் உழுதுவிட்டுப் போக, பண்ணைக்காரன் தண்டவரி செலுத்த வேண்டியிருக்கிறது' என்று பழமொழி சொல்வார்களே! அதுபோல, மற்றவன் செய்யுந் தப்புத் தண்டாவுக்கெல்லாம் நாம் சமாதானஞ்சொல்லி மன்னிப்புக் கேட்க வேண்டியதாய் இருக்கிறது. இதையெல்லாம் பார்த்தால்........" என்று பேசிவருகையிலேயே, முதலியார் இடைமறித்து, "கேட்பவர்கள் கண்டவர்களைக் கேட்பார்களா? கேட்பதற்கு உரிமையுடையவர்களிடத்தில்தான் கேட்பார்கள். ஆகவே, இங்கு நடக்கும் காங்கிரஸ் விவகாரங்களுக்குச் சமாதானமோ அல்லது பதிலோ சொல்லும் கடமை உங்களுக்கு இருக்கிறது......." என்று கூறினார்.

"அதென்ன, அப்படிச் சொல்கிறீர்கள், முதலியார்வாள்! நானென்ன........."

பிள்ளையவர்களை மேலே பேசவிடாமல், முதலியார் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கி, "நீங்களில்லாமல், கேற்று பட்டம் பதவிகளுக்காக வந்தவனெல்லாமா பதில் சொல்வான்? தமிழ்நாட்டில் காங்கிரஸ் என்றால், நீங்கள், சிவசிதம்பரம், சுந்தரம், வரதராசன், கிருஷ்ணசாமி, சுப்பிரமணியம் ஆகிய ஐந்து பேர் தானே! காங்கிரசை தேசமகாசபை என்று கூறும்படியான பெருமையேற்படச் செய்தவர்கள் நீங்கள் அல்லவா! சுதந்திர தாகத்தையும் தேச பக்தியையும் தமிழ் மக்களுக்குக் காங்கிரஸ் வாயிலாக உண்டாக்கியவர்கள் நீங்கள் அல்லவா! காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றிருக்கும் இன்று வேண்டுமானால், பல்லா[illegible]யிரம் பேர் காங்கிரஸ்காரர் என்று செ[illegible]ல்லிக்கொண்டு முன்வரலாம். 'இம்செ[illegible]ன்றால் சிறைவாசம், ஏனென்றால் வ[illegible]வாசம்' என்றிருந்த அன்னிய அ[illegible]சாங்க அடக்குமுறைக் கொடுமையி[illegible]ல், நாட்டுமக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருந்த காலத்தில், சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் நீங்கள் அல்லவா! இன்று சட்டசபையங்கத்தினர்களாய், மந்திரிகளாய் இருப்பவர்கள் எல்லோருமா சுதந்திர வீரர்களாயிருந்தனர்? அவர்களை மக்கள் கேட்பதற்கு?

பிள்ளையவர்கள் கலகலவென்று நகைத்து, "பேஷ், முதலியார்வாள்! நன்றாகப் பேசுகிறீர்களே! வரப்போகும் பொதுத் தேர்தலில் உங்களைப் பிரசாரஞ் செய்ய வைத்தால், நீங்கள் ஆதரிக்கும் அபேட்சகர் கட்டாயம் வெற்றி பெறுவார்..........." என்று கூறினார்.

முதலியார் அவர் பேசுவதைக் காதில் வாங்கிக் கொள்ளாமலே, "அக்காலத்தில் உங்கள் பேச்சைக் கேட்டுத்தானே தமிழ் மக்கள் காங்கிரசை ஆதரித்தார்கள்? அது நடத்திய போராட்ட இயக்கங்களில் பெருவாரியாகக் கலந்துகொண்டார்கள்? போலீஸ் குண்டாந் தடிகளால் அடிபட்டு இரத்தஞ் சிந்தினார்கள்? துப்பாக்கிப்பிரயோகத்துக்கு இலக்காகி உயிர் இழந்தார்கள்? சிறைவாசம் ஏற்றார்கள்? இவ்வளவும் எதற்காக? தங்களுக்குக் காங்கிரஸ் சுதந்திரம் வாங்கிக் கொடுக்கும்? சுகவாழ்வு ஏற்படச் செய்யும் என்றுதானே! இவ்விதம் அவர்கள் எதையெதை எதிர்பார்த்துக் கஷ்ட நஷ்டங்களை அனுபவித்தார்களோ, அவற்றிற்கெல்லாம் நேர்மாறாக இன்று காரியங்கள் நடைபெற்றால், நாட்டுமக்களுக்குக் கோபமுண்டாகத்தானே

செய்யும்? அரசியல் சுதந்திரம் கிடைத்தும், வாழ்க்கையில் சுதந்திரம் கிடைக்கவில்லையென்றால், சுக வாழ்க்கை கிட்டவில்லையென்றால், இந்த அவலநிலையை எப்படி ஏற்பார்கள்? அடிமைகளாய் இருந்த காலத்தில் அனுபவித்தவாழ்க்கையின்பங்களைக் கூட இன்று அனுபவிக்க முடியாமல், துன்பத்தின்மேல் துன்பமாக, வறுமையும், பஞ்சமும்,வாட்ட அவதியுறும் நிலையை எப்படி சகிப்பார்கள்? எங்கும் கள்ள வணிகர்களும், பேராசைப் பேயர்களும் கொள்ளையடிப்பதற்கா, தங்களின் சுகவாழ்க்கையைச் சூறையாடுவதற்கா, இவர்கள் அந்தக் காலத்தில் உங்கள் பேச்சைக் கேட்டு, உங்களைப் பின்பற்றி வந்து, துன்பங்களையும் கஷ்டங்களையும் வலிய ஏற்றார்கள்? சுயநலக்காரர்களின்—சந்தர்ப்ப வாதிகளின் பதவிப்போட்டிக்காக—அவர்களுடைய சுகபோகங்களுக்காக — நாட்டு மக்களின் வாழ்க்கை பணயமாக வைக்கப்பட வேண்டுமா? என்ன! ஆகவே, தங்களுடைய இன்றைய துயரங்களுக்குக் காரணகர்த்தர்களாக இருக்கும் —சுயநல பிண்டங்களை— அவர்களை —ஏன் காங்கிரஸில் சேர்த்தீர்கள்? சட்டசபையில் அமர்த்தீர்கள்? மந்திரிகளாக்கினீர்கள்? என்று பொது மக்கள் உங்களைக் கேட்கத்தான் செய்வர்?,........"

சதானந்தம் பிள்ளை, "கேட்கட்டும்? கேட்காமல் போகட்டும். இன்று நடக்கும் பகற்கொள்ளைகளுக்கும் லஞ்சலாவணியங்களுக்கும் என்னைப் போன்ற பழைய காங்கிரஸ்காரர்கள் பரிகாரம் தேடியாக வேண்டும்; பதில் சொல்ல வேண்டும்........"

மாசிலாமணி முதலியார், "அண்ணா, நான் உங்கள் மீது குற்றஞ் சாட்டுவதாக எண்ணக்கூடாது. கோனார் விஷயமாக நீங்கள் சொன்னதைக் கேட்டதிலிருந்து, என் உள்ளம் கொதிப்படைந்திருக்கிறது. உங்களைப் போன்றவர்கள் விட்டுக்கொடுத்து, கண்டவர்களையெல்லாம் சட்டசபைக்கு அனுப்பியதனால் ஏற்பட்ட விளைவுதான் இது. சட்ட சபை, மந்திரி சபைகளின் கூத்து இப்படியென்றால், நகரசபை ஜில்லாசபைகளின் நடவடிக்கை இன்னும் மோசமாய் வருகிறது. நம்ம நகரசபையில் இன்று தலைவர் தேர்தல் நடக்கிறதல்லவா! அதைப் பற்றி ஒரு மாதத்துக்கு மேலாகவே அமளிப் படுகிறது. இத்தலைவர் தேர்தலில் நான்கு பேர் நிற்கிறார்களாமே! ஆனால் பெரிய கோடீஸ்வரர் குமாரரான அளகேசன்தான் தலைவராக வருவார் என்று எல்லோரும் உறுதியாகச் சொல்கிறார்கள், காங்கிரஸ் பெயரால் அங்கம்வகிப்பவர்களின் யோக்கியதையைத் தெரிந்துதான் கூறுகிறார்களோ! ஏனென்றால் அளகேசன் நகரசபையிலுள்ள முக்கால்வாசிப் பேர்களைத் தனது பணத்தால் விலைப்படுத்தித் தன் பக்கம் வைத்திருக்கிறாராம். இந்நேரம் தேர்தல் நடந்து விட்டிருக்கும். ஆமாம்; அண்ணா! இந்த ஸ்தலஸ்தாபனங்களில் கூடக் காங்கிரஸ் பெயரால் ஏன் அங்கத்தினர்களை அனுப்ப வேண்டும்? குப்பைத் தொட்டி வேலை, ரோடு போடுகிற வேலைகளைக் கவனிப்பதற்கு யாரா

ரெஜினா
மூட்டைப் பூச்சி
பவுடர்



நித்திரைக்குப் பாதுகாப்பு கொடுக்கிறது. ரெஜினா மூட்டைப்பூச்சிப் பவுடர் எங்கும் ஏராளமாக விற்பனையாகிறது.

தயாரிப்பவர்:
G. பழனியப்ப முதலியார், மதுரை.

இந்தியநாட்டு இளைஞர் முதல்
எல்லோருக்கும் திடகாத்திரமளிக்கவல்ல எமது

ஆர்.எம்.கே. பார்லி
குளுகோஸ் பிஸ்கோத்து தினுசுகளையே
உபயோகியுங்கள்.

ஆர்.எம்.கே. அன் சன்ஸ் பேக்கர்,
59. டவுன் ஹால் ரோடு, மதுரை.
ப்ரோப்:— ஆர்.எம். கருப்பண்ண பிள்ளை.

எமது கிளை:- 13, 14, திண்டுக்கல் ரோடு, (பழைய ஆஸ்பத்திரிக்கு எதிரில். மதுரை)
ஏஜண்ட்:- வி. கந்தசாமி, மெயின் ரோடு, சாத்தூர்.

யினும் போய்த் தொலையட்டுமே!... ......" என்று சலிப்புடன் சொன்னார்.

சதானந்தம் பிள்ளை ஏதோ பதில் சொல்லப் போகுஞ் சமயத்தில் சிவகுமாரன் அவசர அவசரமாக அங்குவந்து, "அப்பா! அப்பா! சமாசாரங் கேட்டீர்களா? அளகேசன்தான் தலைவராக வந்துவிட்டார். காங்கிரஸ் அபேட்சகருக்குப் பத்தே ஓட்டுகள்தான் கிடைத்தது........"என்று சொன்னான்.

சதானந்தம் பிள்ளையின் முகத்தில் துயர இருள் சூழ்ந்தது.

மாசிலாமணி முதலியார் துள்ளிக் குதித்து, "நான் அப்போதே சொன்னேனே! பார்த்தீர்களா? அண்ணா! இந்த அயோக்கியப் பயல்கள் துரோகஞ் செய்து விட்டிருப்பார்கள்......"என்றார்.

சிவகுமாரன், "காங்கிரஸ் மெம்பர்களில் பலபேர் அளகேசனுக்குத்தான் ஓட்டுப் போட்டார்களாம். சிலபேர் சபைக்கு வரவேயில்லை. சிலர் நடுநிலை வகித்தனர்... ......" என்று தேர்தல் முடிவு பற்றி விளக்கினான்.

சதானந்தம் பிள்ளை மெள்ளப் பேசத் தொடங்கி, "இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. மூன்று நான்கு ஆண்டுகளாகவே, இப்படித்தான் நடந்துவருகிறது. காங்கிரஸ் அபேட்சகர்களை அக்கட்சியங்கத்தினர்களே, காலைவாரி விடுகின்றனர்...... உம். இன்னும் என்னென்ன நடக்கப் போகிறதோ!" என்று கூறியவர், "ஆமாம். சிவகுமாரா! நீ நகரசபைக்குப் போயிருந்தாயா, என்ன!" என்று கேட்டார்.

"ஆமாம்; அப்பா! கல்லூரியிலிருந்து அப்படியே வேடிக்கை பார்க்கப் போனேன்" என்றான் சிவகுமாரன் உற்சாகமாக.

சதானந்தம் பிள்ளை, "உனக்கு இதெல்லாம் என்ன வேடிக்கை, சிவா! படிப்புண்டு; வீடுண்டு என்று போவதை விட்டு" என்று அன்பாகக் கடிந்து கொண்டார்.

சிவகுமாரன் அதற்கு ஏதோ சமாதானஞ் சொல்ல முயன்றான்.

இச்சமயத்தில் உள்ளறையிலிருந்து, "சிவா, சித்தி கூப்பிடுறாள், பார்! புத்தகங்களை வைத்துவிட்டு முகம் கால் கழுவிக்கொண்டு, காபி சாப்பிடப் போ" என்று திலதவதி கூப்பிட்டாள்.

"சரி. சரி. போ. இனிமேல் இந்த மாதிரி அக்கப்போருக்கு எல்லாம் போகாதே! உன் படிப்பு முடிகிறவரை......" என்று சதானந்தம் பிள்ளை சொல்லிக் கொண்டிருக்கையிலேயே சிவகுமாரன் தலையைக் குனிந்துகொண்டே உள்ளே போகலானான்.

அவன் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்த மங்கையர்க்கரசி, உணவு அருந்தும் மேஜை முன் சிவகுமாரன் வந்து உட்கார்ந்ததும், சிற்றுண்டியை அவனுக்குப் பரிவாகப் பரிமாறிக் கொண்டே, "வா, சிவா! இன்று என்ன இவ்வளவு நேரம்?.........இதுவரை ஒன்

றும் சாப்பிடாமல் இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?" என்று விஷயம் தெரியாதவள்போல் கேட்டாள்.

சிவகுமாரன் சிற்றுண்டியை வாயில் எடுத்துப் போட்டுக் கொண்டே ஏதோ யோசனையில் இருந்ததால், மங்கைக்குப் பதில் எதுவும் சொல்லவில்லை.

"என்ன சிவா, எதுவும் சொல்லாமல் இருக்கிறாய்? என்மேல் ஏதாயினும் கோபமா?" என்று கலைந்து முன் விழுந்திருந்த கிராப்பை நீவி விட்டுக்கொண்டே கேட்டாள் மங்கை.

"காபி கொண்டு வா, சித்தி!" என்றான் சிவகுமாரன் வேறெதுவும் சொல்லாமல்.

மங்கை காபியைக் கொண்டு வந்து வைத்துவிட்டு, "அப்பா ஏதோ கேட்டாரே! அதனால் வருத்தமாயிருக்கிறாயா, சிவா! என்னன்னடை சொல்லேன்" என்று அவனைக் கனிவோடு பார்த்தவாறே கேட்டாள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை, சித்தி........" என்று சிவகுமாரன் சொல்லுமுன்பே, மங்கையர்க்கரசி, "அப்பா ஒன்று சொல்கிறார் என்றால், நல்லதுக்குத்தான் சொல்வார். ஆதலால், அவர் கட்டுத்திட்டம் செய்கிறாரே என்று வருத்தப் படுவது கூடாது. நானும்தான் உன்னைக் கேட்கிறேன், படிக்கிற பிள்ளைக்கு இதற்குள் ஊர் விவகாரம் எதற்கு? ...."என்று விநயமாக வினவினாள்.

இதுவரை அறைக் கதவண்டை நின்று மங்கை தன் பிள்ளைக்குப் பரிவாக உபசாரம் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்த திலதவதி, "அப்படிக் கேளு, மங்கை! அப்படிக் கேளு. பிள்ளையாண்டன் இதற்குள்ளாகவே அப்பாவைப் போல, அரசியல் தலைவராகி விடப் பார்க்கிறான்........" என்று மகிழ்ச்சியோடு கூறினாள்.

"சும்மா இரு அம்மா! நீ ஒன்று..........." என்று கூறிக் கொண்டே எழுந்து போனான்.

போகும் சிவகுமாரனைத் தாயன்புடன் பார்த்துக் கொண்டே, "புலிக்குப் பிறந்தது - பூனையாய் விடுமா, அக்கா! சிவன் நம்ம அத்தானை விடப் பெரிய மனுஷனாக ஆகத்தான்

போகிருன்! நீ வேண்டுமானல் பாரேன்!.........ஆனல், அத்தான் சொல்வது போல, படிப்பு முடிகிற வரை, பொது விவகாரங்களில் கவனஞ் செலுத்தாமல் இருப்பது நல்லது. அதைத்தான் சிவனுக்கு நாம் ஞாபகப்படுத்தி அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்க வேண்டும்........" என்று கூறினள்.

திலதவதி சிரித்துக்கொண்டே, "சரி; சரி. நீயும் சொல்ல ஆரம்பித்து விட்டாயோ, இல்லையோ! இனிமேல் சிவன் உருப்பட்டாற் போலத்தான்........ தேச சேவை, மக்கள் தொண்டு என்று சொல்லி அவர் இப்படி கிடந்து தொல்லைப் படுவது போதாதென்று பிள்ளையும் பொதுசேவை செய்யப் பிஞ்சிலேயே புறப்பட்டு விட்டது........" என்று சொன்னள்.

இதே சமயத்தில், வெளி வராந்தாவில் மாசிலாமணி முதலியார், "இது நிசந்தான அண்ண! நம்ம சிவகுமாரன், சோஷலிஸ்டு கட்சி, கம்யூனிஸ்டு கட்சிக் கூட்டங்களில் கலந்து கொள்ளுகிருன். திராவிடக் கழகத்தில் சேர்ந்து, காங்கிரசைத் தாக்கிப் பேசுகிருன். என்றெல்லாம் கூடச் சொல்கிருர்களே! நீங்கள் காங்கிரஸ்காரராயிருந்து—அதுவும், நீண்டகாலக் காங்கிரஸ்காரராயிருந்து உங்கள் பிள்ளை எதிர்க் கட்சிகளில் சேர்ந்திருந்தால்..........." என்று சொல்வது திலதவதி காதில் விழுந்தது. மங்கையும் சிவகுமாரன் பெயர் அடிபடவே, திலதவதியுடன் சேர்ந்து ஒற்றுக் கேட்கலானள்.

சதானந்தம் பிள்ளை, "சேர்ந்திருந்தால் என்ன? அப்பன் முட்டாள்தனம் பண்ணினல் மகனும் முட்டாள் போக்கிலேயே போகவேண்டுமென்று எங்கேசொல்லியிருக்கிறது? நான் காங்கிரஸ்காரன் என்று பெயர் வைத்துக்கொண்டு வாங்குகிற கெட்ட பெயர் போதாதோ! சிவன் வேறு வாங்க வேண்டுமா?... நகர சபைத் தேர்தல் முடிவைக் கேட்ட பிறகு இனியும் காங்கிரஸ்காரனயிருப்பதா என்றே என்னைக் கேட்டுக்கொள்ள வேண்டியவனகிறேன். நாளை கோனர் பண்ணும் கூத்தினல் மந்திரி சபையின் வண்டவாளம் சந்தி சிரிக்கும்போது, காங்கிரஸ்காரர் என்பவர்கள் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாகவேண்டியதைத் தவிர, வேறு வழியில்லை. எந்த மூஞ்சை வைத்துக்கொண்டு பொது மக்கள் முகங்களில் விழிப்பது?......

சிடி பிளாக் மேக்கர்ஸ்
போட்டோ, லைன்,
3 கலர் பிளாக்குகள் செய்யுமிடம்.
No. 11, அந்திக்கடை பொட்டல், மதுரை.

காங்கிரசுக்கு ஒரு முழுக்கு போட்டு விடுவது என்றே..........."

"அப்படியெல்லாம் அவசரப்பட்டு ஒன்றும் செய்து விடாதீர்கள் அண்ண!" என்று அவருடைய ஆத்திர உணர்ச்சிக்கு அணை போட்டார் மாசிலாமணி முதலியார். "யாரோ சில அயோக்கியர்கள் தவறுபண்ணுகிருர்கள் என்பதற்காக, நல்லவர்களாகிய உங்களைப் போன்ருர் வெளியேறி விடுவதென்ருல் அப்புறம் என்ன இருக்கிறது? பொறுத்து இருப்போம். புல்லர்கள் கூட்டம் பூண்டோடு ஒழியப்போகும் நாள் நெருங்கிக் கொண்டிருக்கிறது. உங்களுக்குத் தெரியாத விஷயமா நான் சொல்லப் போகிறேன்..........." என்று ஆறுதல் கூறியவர், "நான் போய் வருகிறேன் அண்ண! நாளை பார்க்கிறேன்" என்று விடைபெற்றுக் கொள்ளலானர்.

ஆழ்ந்த சிந்தனையிலிருந்த சதானந்தம் பிள்ளை துணுக்குற்று எழுந்து, "போய்வருகிறீர்களா? வணக்கம் போய்வாருங்கள்" என்று கூறி வழியனுப்பினர்.

"ஐயோ, அத்தான் மனம் எப்படி நொந்து போயிருக்கிறது" என்று இரக்கத்தோடு கூறிக் கொண்டே உள்ளே போகலானள் மங்கை.

திலதவதி கணவன் இருக்கும் இடஞ் சென்ருள்.

(தொடரும்)

தமிழகத்தில் அனைவரும் விரும்பி அருந்துவது
எங்கள்
ஸ்ரீ மாப்பிள்ளை விநாயகர்
சோடா, கலர், கிரஷ் பானங்களே!
சுத்தமும் சுகாதாரமுமே எங்கள் நோக்கம்.
ஸ்தாபிதம்: 1909.
ஸ்ரீ மாப்பிள்ளை விநாயகர் சோடா கம்பெனி
மதுரை-திண்டுக்கல்-மணப்பாரை.

எலெக்ட்ரிக் மிஷினில் தயார் செய்த பியூர் காபியும், சிக்கரி கலந்த காபியும் 1, 3, 5, 7, 20 பவுண்டு டின்களில் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

எட்வர்ட் காபி ஒர்க்ஸ், காளியம்மன் கோவில்தெரு, விருதுநகர்.

போட்டோ மார்க்

சந்தனாதித் தைலம்

எங்களிடம் அநேகவித மூலிகையினால் தயார் செய்யப்பட்ட சந்தனாதி, அரைக்கீரைத் தைலமும், ஹேர் ஆயில்களும், வாரம் இருமுறை ஸ்நானம் செய்தால் கண் எரிச்சல், கண் மங்கல், கண்ணீர் வடிதல், சரீரத்தில் உஷ்ணம் முதலிய வியாதிகளை நீக்கி கூந்தலை வளரச் செய்யும்.

பொன்னி விலாஸ் சீயக்காய்பவுடரை உபயோகியுங்கள்.

Pro: V. M. சேர்மச்சாமி நாடார்,
எண்ணெய்க் கடை,
M. S. பட்டணம் பொடி ஏஜண்டு,
ஷாப் வியாபாரம், தெப்பத்திற்கு மேல்புறம், விருதுநகர்.

— தமிழ்த்தென்றல்

காலத்தின் கோலம்

வாழைப்பழத் தோலைக்

கண்ட இடத்தில் வீசி எறிவது நம்நாட்டு மக்களின் பழக்கமாயிருக்கிறது. அரண்மனைக்குள் இருந்து தின்றாலும் பழத்தை உரித்தவுடன் தோலை மூலை, கண்ட இடத்தில் போடுவார்கள். கடையிலிருந்துகொண்டு நடுத் தெருவுக்கு வீசி விடுவதையும் பார்க்கலாம். ரயிலில் போகிறவர்கள் தலையை வெளியே நீட்டிக் கொண்டிருந்தாலும், தோலைவண்டிக்குள் காலடியில் போடுவாருமுண்டு. அநேகர் பிளாட்பாரத்தில் வீசி விடுவது சாதாரண வழக்கம்.

இப்படி போட்டதை, கல்கத்தா பிளாட்பாரத்தில் மிதித்து வழுக்கி விழுந்து மிக்க வேதனைப்பட்ட மௌலானா ஆசாத் அவர்களை அகில இந்திய காங்கிரசு கமிட்டி உறுப்பினர்கள் ஞாபகத்தில் வைத்திருந்தால், தேநீர் விருந்திற்குப் பின் வாழைப்பழத்தோலை நினைத்த இடத்தில் போட்டிருக்க மாட்டார்

— தமிழ்த்தென்றல்

கள். நேருவும் குனிந்து அவைகளை பொறுக்கி எடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கும் ஆளாகியிருக்க மாட்டார். வெற்றிலை பாக்கு போட்டுக் கொள்கிறவர்கள், பீடி, சிகரெட்டு புகைக்கிறவர்கள், ஆரஞ்சுப்பழம் தின்பவர்கள், தாம் முதல் வகுப்பு ரயில் வண்டியில் பிரயாணஞ் செய்தாலும், எஞ்சியதை வண்டிக்குள் போடும் அருவருப்பான செய்கையைப் பார்த்துமனம் புழுங்கியிருக்கிறோம்.

'சுத்தம் சுகம்தரும்' என்று பள்ளிச் சிறுமிகள் இனிமையாகப் பாடுகிறார்கள். ஆனால் பெரியவர்கள் செய்கையோ சகிக்கமுடியாததாயிருக்கிறது.

சராசரி 60,000 குழந்தைகள்

உலகத்தில் நாள்ஒன்றுக்கு உற்பத்தி—இல்லை—பிறக்கிறதாம். உற்பத்தி என்று சொல்லப்படாது—ஏன் ? இது இயற்கையாம். இப்படி உலக மக்கள் எண்ணிக்கை பெருகிக்கொண்டு போவதைக் கண்டு ஒரு புள்ளி நிபுணர் மயங்குகிறார். விஞ்ஞானிகள் தேவையான உணவுப் பெருக்கத்துக்கு வழிதேட வேண்டுமென அங்கலாய்க்கின்றார்கள். மனிதன் தன் அறிவால் தோற்றுவிக்கும்பொருள்களை, இயந்திரங்களைசரியான நிலைமையில் இயங்கவும் மிளிரவும், வேண்டியதை அவ்வப்போது கவனித்து வருகிறான்.

ஆனால்இயற்கையின் வழியாகத் தோன்றும் குழந்தைகளை பராமரிப்பது அவன் கடமையாகக் கருதப்

படுகிறது. எனினும் இயற்கை அடிக்கடி அவனை ஏமாற்றி விடுகிறது. தொல்லைப் படுகிறான். சஞ்சலமடைகிறான். குறைந்த எண்ணிக்கையாகயிருந்தாலும் மழை பெய்யாவிட்டால் எல்லா சவுகரியங்களும் போய்விடுகிறதல்லவா? மானிட வர்க்கம் தன் அறிவைக்கொண்டு இயற்கையோடு போராடிக் கொண்டேயிருக்கிறது. போரோ வெற்றி, தோல்வியில்லாமல் நீடூழி நடந்து கொண்டேயிருக்கிறது. மனிதன் கொஞ்ச காலத்துக்காவது இயற்கையை அடக்கி மடக்கும் ஆற்றல் உள்ளவன் போல் தோன்றுகிறான்.

எடுத்துக் காட்டாகப் பார்க்கலாம். ஆற்றில்வெள்ளப் பெருக்கெடுத்தோடினால் சேதம்விளைந்து விடாமலும், உபயோகப்படும்வண்ணம், மடக்கித் தேக்கி வைப்பதையும் காண்கிறோம். அதேபோன்று அளவில்லாத, நிர்வகிக்க முடியாத எண்ணிக்கையில் மக்கள் பெருக்கமிருந்தால் ஓரளவுக்குத் தடுக்கமுடியாதா? உலகச் சண்டை, பூகம்பம், பிரளயம் இவைகள் வந்துதானா மக்கள் மடிந்து குறைய வேண்டும்? அழிப்பது எளிது. ஆக்குவது சுலபமல்ல. ஆகவே, ஆக்கவேலை முறையில்உற்பத்தித் தடைகளைக் கையாள்வதே சிறந்த பணி என்று கருதுகிறோம்.

குழந்தை குட்டிகளோடு அடுத்த வீட்டுக்காரப் பெண் சங்கடப்படுவதைப் பார்த்து பரிதாபப்படுகிறோம். சிலவேளை ஏளனமாகவும் எண்ணுகிறோம். ஆனால் நம் வீட்டுக்குள்ளேயிருப்பதைச் சிந்தித்தோமில்லை. மனைவிக்குத் தலைவலித்தாலுஞ் சரி, வயிற்றில் கோளாறு இருந்தாலுஞ் சரி, காச நோய் எச்சரித்துக் கொண்டிருந்தாலுஞ் சரி, தாங்க முடியாத துயரம் மனத்தைத் துன்பப் படுத்திக் கொண்டிருந்தாலுஞ்சரி, ஈராறு பிள்ளைகள் கூடி தொல்லை கொடுந்தாலுஞ் சரி, அன்றாட உணவுக்குக் கூட போதிய வருவாய் இல்லாதிருந்தாலுஞ் சரி, பெருகிய குடும்பத்தின் அளவுக்கேற்ற குடியிருப்பு வசதியில்லாதிருந்தாலுஞ் சரி, ஆடவர்கள் கவலைப்படுகிறார்களா? எல்லாம் சரியாய்ப் போம். இந்த வயதில் இப்படித்தான் என்று தங்கள்பாட்டைப் பார்த்துக்கொண்டு "இயற்கையாக" பிள்ளைகளைப் பெருக்கிக்கொண்டே போகிறார்கள். "பக்கத்திலிருக்கும் டாக்டர் 'பழனியாண்டவனை' அண்டினால் வழிசெய்து விடுவார். இயற்கை இன்ப வாழ்க்கைக்கு பங்கமிராது. பிள்ளைப்பேறு மட்டும் கட்டுப்படும் என்று ஒரு பக்தர் நம் பக்கத்திலிருந்து எழுது, எழுது" என்றுருத்திக்கொண்டேயிருக்கிறார்.

வடபழனிமலையானே, கண் திறந்து பார்ப்பாயா?

நெருங்கிவரும் பஞ்சத்தைத் தடுக்க

தன் ரேடியோ பேச்சில் முதலமைச்சர் நேரு வழிகள் சில காண்பித்திருக்கிறார். "பொதுமக்கள் சொந்தமுயற்சியில் சிறுசிறு திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். எங்கெங்கே முடியுமோ அங்கெல்லாம் உணவைப் பயிரிடுங்கள். கிராமங்களில் உள்ள தரிசு நிலங்கள், மற்றும்

— தமிழ்த்தென்றல்

தோட்டங்கள், சர்க்கார் கட்டிடகாம்பவுண்டுகள், வீடுகளைச் சுற்றியுள்ள வெளிப்பகுதி முதலிய சகல இடங்களிலும் உணவு பயிரிடுங்கள்."

"ஒவ்வொரு கிராமமும் சிறிய கமிட்டியை அமைத்துக்கொண்டு அதிலுள்ள ஒவ்வொருவரையும் காப்பாற்ற வேண்டும். கிராமத்தின் பொறுப்பை அக்கமிட்டிஏற்கவேண்டும். உணவு வேண்டியிருப்போருக்கு உபரி தானியம் வைத்திருப்போர் உதவி செய்ய வேண்டும்."

1949 ம் ஆண்டில் சில கிராமங்களில் உணவு பெருக்கும் சங்கங்களை ஏற்படுத்தினோம். அவைகளின் நோக்கங்கள் பின்வருமாறு:

1. ஒவ்வொரு கிராமத்துக்கும் தேவையான உணவு உற்பத்தி செய்தல்.

2. ஒவ்வொரு கிராமத்திலும் கம்போஸ்ட் உரம் தயார் செய்தல்.

3. உரத்துக்காக் கால்நடைகளைப் பெருக்க ஏற்பாடு செய்தல்.

4. விவசாயத்துக்கு வேண்டிய கருவிகளும், விதைப் பண்டங்களும் காலாகாலத்தில் சேமித்து வினியோகஞ் செய்தல்.

5. பொது மேய்ச்சல் தரை, குப்பைமேடு வாங்க ஏற்பாடு செய்தல்.

6. கிணறுகள், கண்மாய்கள், கால்வாய்கள், பாதைகள் முதலியன செப்பனிடுதல்.

7. பொதுக் காவல் ஏற்படுத்துதல்.

— தமிழ்த்தென்றல்

மேலே சொல்லிய நோக்கங்களை அடிப்படையாக வைத்து ஒவ்வொரு சங்கமும் கீழ்க்கண்ட ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. "1950 ம் வருடத்துக்குள் நம் கிராமத்துக்கு வேண்டிய அளவு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொள்வதென்றும், 10 சதவிகிதமாவது அதிகமாக உற்பத்தி செய்ய முயற்சிக்க வேண்டுமென்றும், அடுத்த ஆண்டில் ரேசன்முறை தேவையில்லாதவாறு செய்துகொள்வதென்றும் தீர்மானிக்கிறது."

ஆனால் எதிர்பார்த்த மழையில்லாமல் கிராமமக்கள் திண்டாடிவிட்டார்கள்.

சென்னை ரேடியோவில் பேசிய ஓமந்தூரார்

சில வழிகள் சொல்லியிருக்கிறார்: குறிப்பாக வரண்ட பிரதேசங்களில் கிணறுகளை வெட்டவும், ஆழப்படுத்தவும் ஏற்பாடுகள் செய்வதோடு, கோயமுத்தூரில் மலிவாகவும், இலாபகரமாகவும் வேலை செய்து வரும், சிறு போரிங் கருவிகளைக்கொண்டு கிணறுகளில் துளை போட்டு பாதாள ஊற்றுக்களை வெளியாக்கவும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

நம்மாகாணத்தில் உள்ள பல ஏரிகளில் குறைந்தது 5 மாதங்களுக்காவது தண்ணீர்தேங்குமாறு அவற்றின் கரைகளையும், கலிங்கல்களையும் உயர்த்த வேண்டும். அரசியலார் கவனித்து கலிங்கல்களை உயர்த்தினால்தான், சாதாரண வரு

டங்களிலாவது ஒரு போகமாவது பயிர் செய்ய முடியும்.

மழை குறைவுக்கு காடுகளின் அழிவையும் ஒரு காரணமாய்க் கூறலாம். 30 அடிக்கு மேற்பட்ட மரங்கள் மேகங்களை கவர்ச்சித்து 10 சதவிகித மழையை அதிகமாக்க வல்லவை என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்திருக்கிறார்கள்...... சிறுசிறு புதர்கள் நிறைந்த காடுகளில் கொடுக்காபுளி, மழைமரம் போன்றவை விரைவில் வளரும்... ...நிறைய மரங்கள் வைத்து வளர்க்கும் விவசாயிகளுக்குப் பரிசுகள் மூலம் ஊக்கம் தர வேண்டும். மா, புளி, நெல்லி, விளா, முந்திரி முதலிய மரங்கள் நீர்ப்பாசானமின்றியே பயன் தரக்கூடியவை. இவைகளை அதிகமாக வளர்த்தல், பஞ்சத்தைத் தடுக்க இன்ஷ்யூர் செய்து கொள்வது போலாகும். வேப்பு, புங்கை, கருவேல் வெள்வேல், ஓடைபோன்ற மரங்களை ஏரிக் கரைகளிலும், ஏரி உள்வாய்களிலும் வளர்க்க கிராமங்களுக்கு அனுமதியளிப்பதன் மூலம் செலவின்றியே அரசியலார் கிராமங்களுக்கு, உழுகருவிகள், விறகு இவற்றைத் தர முடியும். வெள்ளாடுகளை அடக்கினால்தான் காடுகளிலும் கிராமங்களிலும் செடி, மரங்கள் முதலியவை நிலைக்கும் என்பதை நன்கு உணர்ந்து, ஆடுகள் காடுகளை அழிக்காதவாறு கட்டுத் திட்டங்களை ஏற்படுத்த வேண்டியது அவசியம்.

உழவுக்கு நம் நாட்டுக் குடியானவர்கள் மாடுகளையே நம்பி வாழ வேண்டியுள்ளது. மேய்ச்சல் நிலங்களெல்லாம் விளைநிலங்களாக மாற்றப்பட்டதன் காரணமாக, பொதுவாக, இந்தியா முழுமையும் குறிப்பாக தமிழ்நாட்டில் மிகவும் மெலிந்த மாடுகளையே காண்கிறோம். தன்னையே போஷித்துக் கொள்ள வி்தியற்ற குடியானவன் தம் மாடுகளை போஷிப்பது எப்படி? ஆகையால் மத்திய, மாகாண அரசாங்கங்களும், விவசாயச் சங்கங்களும் சேர்ந்து, உலகத்தில் பல்வேறு நாடுகளில் வரண்டுபோன பிரதேசங்களில் செழிப்பாக வளரும் புல்வகைகளையும், தீவன மரவகைகளையும் கொண்டுவந்து, நம்நாட்டில் அதிகப் பாசன வசதியில்லாமலேயே உற்பத்தி செய்யவும், சிந்தி, காங்கேயம், நெல்லூர், அமிர்தமகால் முதலிய நல்லரக மாடுகளை அதிகமாக வளர்க்கவும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இந்திய முதலமைச்சர் நேரு பஞ்சம் வராமல் போர்க்கோலம் பூணவேண்டுமென்று எச்சரிக்கிறார். சென்னை முன்னாள் முதலமைச்சர் உணவு நிலைமைக்கு விமோசனம் என்ன என்று விவரித்திருக்கிறார். ஆகவே, ஓமந்தூராரையே நம் மாநிலத்தின் உணவுப் பெருக்கத்தில் ஈடுபடும்படி செய்ய (Director General of Food Production) என்ற ஒரு தனி அதிகாரியாக ஏன் நியமிக்கக்கூடாது? அவர் முன் வரமாட்டாரா? அல்லது அரசாங்கத்துக்கு அவ்வளவு துணிவு ஏற்படாதா? பொதுமக்களே சிந்திக்க வேண்டும் [66-ம் பக்கம் பார்க்கவும்]

— தமிழ்த்தென்றல்

ஏழாம் பேச்சு [கோவை கிழார்]

நாடகங்கள் எங்கே?

தமிழைப் பற்றிப் புகழ்ந்து பேசும் போதெல்லாம், வேறெந்த மொழிக்கும் இல்லாத—ஒரு சிறப்பு—அடை மொழியால் அதனைக் கூறுவது வழக்கு. அதுதான் முத்தமிழ் என்ற ஒரு அருஞ் சொல்.

ஔவையாரும், "சங்கத் தமிழ் மூன்று" என்று சொன்னதாகப் படித்திருக்கிறோம். அம் முத்தமிழ்கள் எவை என்றால் இயல், இசை, நாடகம் என்று சிறு பிள்ளையும் ஒப்புவிப்பான். வேறு மொழிகளில் இம்மூன்று நிலைகளும் இல்லையோ என்று கேட்டால், இல்லை என்று எவனும் கூறத் துணியான். பண்டை மொழிகளிலும், தற்கால மொழிகளிலும், மேல்நாட்டு மொழிகளிலும், கீழ்நாட்டு மொழிகளிலும் இம்மூன்று பகுதிகளும் உண்டு. அப்படியாயின் தமிழை "முத்தமிழ்" என்று சிறப்பித்துக் கூறவேண்டிய காரணம் என்ன என்று கேட்கலாம்?

முத்தமிழ் என்று சிறப்பித்துக் கூறும் பொழுதே, தமிழில் இருந்த மூன்று பாகுபாடுகளும் ஒரே அளவினவாக வளர்ந்து, ஒன்றுக்கொன்று குறைவுபடாத சிறப்பில் விளங்கின என்று ஊகிக்க வேண்டி வரும். வெகு பண்டைக் காலமான சங்கத்தார் நாளில் அந்தச் சிறப்பு இருந்ததினால், அக்கால அறிஞர்கள் தமிழை முத்தமிழ் என்ற சிறப்புப் பண்போடு வழங்கினார்கள். அக்காலத்தில் உலகில் வழக்களவில் இருந்த ஏனைய மொழிகளில் இம் மூன்று பாகுபாடுகளும் ஒத்த அளவில் வளர்ந்து இருக்கவில்லை போலும். தமிழ் ஒன்றே இயல், இசை, நாடகம் என்ற மூன்றையும் ஒரு மித்து வளர்த்து உயர்ந்த நிலையில் விளங்கிற்று என்னலாம்.

ஏனையவைகளில் இயல்மட்டுமோ, இசை மட்டுமோ, அல்லது நாடகம் மட்டுமோ வளர்ச்சி உற்று, மற்றவை குறைந்திருக்கக் கூடும். ஆகவே தமிழுக்கு ஒரு ஒப்பற்ற பெருமை இருந்ததினால், அதனை "முத்தமிழ்" என்ற சிறப்பு மொழியால் வழங்கி இருந்தார்கள். இம் மூன்று பகுதிகளிலும் மிகச் சிறந்த

— தமிழ்த்தென்றல்

நூல்கள் இருந்தன. அவைகளே முச் சங்கங்களில் இருந்து தமிழ் ஆராய்ந்த புலவர்களும் வல்லவர்களும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார்கள்.

அக்காலத்தில் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, பதினெண் கீழ்க் கணக்கு, போன்ற இயல் நூல்களே யன்றி, இசை நுணுக்கம், பேரிசை, சிற்றிசை, போன்ற இசை நூல்களும், பரதம், சேனாபதியம் போன்ற நாடக நூல்களும் தோன்றியிருந்தன. பிற்காலத்தில் இயல் ஒன்று மட்டும் நின்று ஏனைய இரண்டும் மறைந்தன. ஆனால் ஆட்டுக் குழுவில் ஒரு தடியை தாண்ட முதல் ஆடு குதித்தது போல், தடியெடுத்து விட்டும் மற்ற ஆடுகள் குதித்துக் கொண்டே செல்வதுபோல, சங்கப் புலவர்கள் மூன்று பாகுபாடுகளையும் கண்டு முத்தமிழ் என்று வழங்கியிருக்கப் பின் வந்த புலவர்கள் இசையும் நாடகமும் மறைந்த பின்னும் முத்தமிழ் என்ற சொல்லாலேயே வழங்கினார்கள் போலும்.

இதைப் பற்றி நமது கற்கள் எவ்வாறு பேசுகின்றன? அவற்றைக் கேட்போம்.

தென் நாட்டில் தமிழ் வளர்ந்து சிறப்புற்றது போல் வட நாட்டில் 'சமஸ்கிருதம்' என்னும் வடமொழி வளர்ந்தது. அதுதமிழுக்குப்போட்டியாக வளர்ந்ததுமன்றி தென்னாட்டிலும் புகுந்து பெரும் வேலை செய்தது.

அதிலும் இயல், இசை, நாடகங்கள் இருந்தன. வேறு பகுதிகளும் வளர்ந்தன. இயற்கவிகளும் நாடகங்களை இயற்றினார்கள். மௌரியர் காலத்திலேயே நாடகங்கள் தோன்றின. சந்திரகுப்தன் காலத்தில் முத்திராராட்சசம் என்ற ஒரு சரித்திர நாடகம் தோன்றிற்று. பிறகு பல அரசர்கள் காலங்களில் பல நாடகங்கள் ஏற்பட்டன. எல்லாரிலும் சிறந்த கவியாகிய 'காளிதாசன்' இரகு வம்சம்—குமார சாம்பவம்—என்ற இலக்கிய நூல்களோடு, "சகுந்தலம்" "விக்கிரமோர்வசியம்" முதலிய நாடகங்களையும் எழுதினான்.

அதுபோலவே தென்நாட்டு மக்களும் வடமொழியைக் கற்று வடமொழி காவியங்களை எழுதினார்கள். ஆகவே வடமொழியில் நாடக வளர்ச்சி குறையவில்லை.

பிறநாடுகளாகிய மேல்நாடுகளில், நாடகம் மிகச் சிறந்த பகுதியாகக் கொள்ளப் பட்டது. மிகப் பண்டைய காலத்தில் கிரேக்க நாட்டில் நாடகத்திற்கே உயர்ந்த பெருமை தரப் பட்டது. பிற்காலத்து ஐரோப்பிய மொழிகளிலும், நாடகம் உயர்ந்த நிலைமை உற்றது. ஆங்கிலத்தில் மிகப் பெயர் பெற்ற கவி, "ஷேக்ஸ்பியர்" என்ற நாடகக் கவிதான். தற்காலத்திலும் மிகச் சிறந்த எழுத்தாளன் "பெர்னாட்ஷா" என்ற நாடக ஆசிரியன் தான்.

ஷேக்ஸ்பியர் பெரும்பான்மையாக செய்யுளிலே நாடகம் எழுதினான். பெர்னாட்ஷா உரைநடையில் எழுதினான். ஆனால் கருத்துப் பெருமை, ஒழுங்கு உயர்ச்சி இவைகளே அவர்கள் நூல்களை உயர்த்

தின. பிரஞ்சு மொழியிலும் நாடக ஆசிரியர்களுக்கே மிகுந்த மதிப்பு இருந்தது. ஜெர்மனி மொழியிலோ கதே எழுதிய 'பாஸ்ட்' என்ற நாடகமே உலகப் பிரசித்தி பெற்றது. சமீப காலங்களில் இலக்கிய மேம்பாட்டுக்காகப் பரிசு பெற்ற நோபல் ஆஸ்தான கவிஞர்களிலே, பெரும்பான்மையானவர்கள் நாடக ஆசிரியர்களே. நமது பரத நாட்டு வங்கக் கவியாகிய இரவீந்திரநாதர் என்பவரும் ஒரு நாடகக் கவியே.

இந்த முறையில் நாடகப் பண்பாட்டை உலகம் பாராட்டுகிறது.

இனித் தமிழ்மொழி வளர்ச்சியில் நாடகம் பெற்றிருந்த நிலைமையை எடுத்துச் சிறிது கூறுவோம். சங்கத்தார் காலத்தில் நாடகத்திற்குத் தமிழிலே இயலைப் போன்று சமப் பெருமை இருந்தது என்று கூறப்பட்டது. ஆனால் பிற்காலத்தில் நாடகத்திற்கு அத்தனைப் பெருமை இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் அப்போது நாடக நூல்களைக் காணாத ஒரு நிலையே அதனை நிரூபிக்கிறது. சமண பௌத்த மேம்பாட்டுக் காலத்திலே இலக்கியமும் இலக்கணமுமே போற்றப்பட்டன. இலக்கியத்தில் ஐம்பெருங் காப்பியங்களும் ஐஞ்சிறு காப்பியங்களுமே சிறந்துவிளங்கின. இவைகளில் சிலப்பதிகாரத்தில் சில பகுதிகளை மட்டும் நாடகம் என்ற முறையில் ஒருவாறு பேச முடியும். மற்றவைகள் எல்லாம் இயலே ஆகும். காப்பியங்கள் ஏற்பட்ட காலத்தில் தமிழ் மொழியைப் பாராட்டி வந்தவை சமண பௌத்த சமயங்களே ஆகும். அச்சமயங்களிலே துறவறமே சிறப்பாகப் போற்றப் பட்டது. நீதிநெறியும் இலக்கணமுமே அவர்களுடைய இலக்கியக் குறிக்கோள்கள். ஆகவே நாடகத்தை அவர்கள் ஏற்கவில்லை போலும். அச்சமயத்தார்கள் தமிழிலே நாடகங்கள் எழுதினதாக ஒரு குறிப்பும் எங்கும் காணோம்.

சமண பௌத்தம் சீர்கெடச் சைவமும் வைணவமும் தலை நிமிர்ந்தன. சைவ வைணவப் புலமை கடவுள் வணக்கத்தையே சிறப்பாக ஏற்றுக்கொண்டது. ஆண்டான் அடிமைத் திறம் சிறப்புற்றோங்க அதற்கு ஏற்ற இலக்கியம் அன்புப் பாடல்கள்தானே! ஆக வளர்ந்தன. இதற்கு ஏற்றதாக இன்னிசைவளர்ந்தது. நெஞ்சை உருக்கும் இசையும் அதற்கேற்ற பண்களும் தோன்றின. நாடகம் மறைந்தே விட்டது எனலாம்.

சைவ வைணவ மேம்பாட்டுக்குப் பிறகு காவியக் காலம் ஏற்பட்டது. சோழர்கள் வெற்றியுடன் பொன்னி நாட்டை ஆண்டார்கள். தங்கள் பண்பாட்டைப் பிற நாடுக்கும் கொண்டு சென்றார்கள். பெரிய ஆலயங்களை எழுப்பினார்கள். வடநாட்டிலிருந்து வடமொழியையும் புரோகிதர்களையும் இறக்குமதி செய்தார்கள். அவர்களோடு நாடகமும் வந்தது என்று கூறலாம்.

ஆனால் அது தென்னாட்டு நாடகம் அல்ல, வடநாட்டு நாடகம் ஆகும். கம்பரும் ஒட்டக்கூத்தரும் வடநாட்டுக் கதைகளைத் தமிழிலே பாடத் தொடங்

கவே நாடகங்களும் வடநாட்டு முறையிலேதான் வரும் அல்லவா? அவைகள் எவை? என்ன காரணமோ தெரியவில்லை, அக்காலத்துத் தமிழ் நாடகங்கள் தமிழிலே நிற்கவில்லை. அவைகளைத் தமிழர் ஏற்றுக் கொள்ளவில்லையோ அறியோம். ஆனால் அப்படிப்பட்ட நாடகங்கள் இருந்தன என்று நமது கோயில் கற்கள் பேசுகின்றன. அப் பேச்சுக்களை வைத்துக் கொண்டுதான் அந்தச் சீரிய காலத்தில் நாடகங்கள் இருந்தன என்று கூற முடியும். அவற்றைப் பற்றி பின்னால் விரிவாகக் கூறுவோம்.

இனிச் சோழர் சாம்ராட்டியத்திற்குப் பிறகு நாடகச் சிறப்பு என்ன ஆயிற்று என்று கேள்வி எழும்பும். சோழரோடு தமிழ்நாட்டுச் சுதந்தரம் அழிவுற்றது. சுதந்தரம் போய் பிறருடைய ஆட்சியில் ஒரு நாட்டார் அடிமைப்பட்டுத் துன்புற்றால் மொழி வளர்ச்சி எப்படி இருக்கும் என்று கூறவும் வேண்டுமா? பதின்மூன்றாவது நூற்றாண்டிலிருந்து தமிழின் மணமே குறைந்து விட்டது. அது உலர்ந்த மலராகி விட்டது.

சில மடத்தார்கள் மட்டும் சமயத்தை விடாமல் பிடித்துக் கொண்டிருந்த முறையில் தமிழ்ச் சிறு நூல்களாகிய பிரபந்தங்களும் தலமகிமைகளாகிய புராணங்களும் தோன்றின. நெஞ்சில் உணர்ச்சியும்மகிழ்ச்சியும் வற்றிப்போனபின் நாடகம் எப்படி உண்டாகும்? ஆகவே நாட்டில் இலக்கிய நாடகங்கள் மறைந்தன. ஆனால் நாட்டுப்புறங்களில் பழைய வாசனை இருந்தது. வெளிநாட்டு அரசியல் கொடுமை நாட்டுப்புறங்களை மிகுதியாக பாதிக்கவில்லை.

ஆகவே அவர்களிடை நாட்டுப் பாடல்கள், நாட்டுக் கதைகள், நாட்டுப் பழமொழிகள், நாட்டுப் புதிர்கள், நாட்டுக் கூத்தாட்டங்கள் மறையாமல் இருந்தன. இக் கூத்தாட்டங்களே தெருக்கூத்துக்களாக பிரதிபலித்தன. நாட்டுப் பாடல்கள் பெரும்பான்மையாக நாட்டு வீரமக்களின் கதைகள் ஆகும். ஆனால் தெருக்கூத்துக்களோ வெளிநாட்டிலிருந்து வந்த கதைகளை ஆதாரமாகக் கொண்டு எழும்பினவை. பெரும்பாலும் வடநாட்டிலிருந்து இறக்குமதியான புராண இதிகாசக் கதைகளையே ஒட்டித் தெருக்கூத்துக்கள் முளைத்தன. அவைகளிலே அரிச்சந்திரன் கதை, நளன் கதை, இரணியன் கதை, வாணாசுரன் கதை முதலிய கதைகள் புகுந்தன. இவற்றை அடிப்படையாக வைத்துக்கொண்டு நாட்டுப் புலவர்கள் கீர்த்தனைகளை இயற்றிக் கூத்துக்கள் ஆடினார்கள். இவைகளே நாட்டு நாடகங்களாக மாறின. இவைகளேயன்றி குறவஞ்சி, யக்ஷகானம், நொண்டி நாடகம் முதலிய சில்லறைக் கூத்துக்களும் பாளையக்காரர்களின் ஆதரவினாலே முளைத்தன. இந்த வகையில் நாடகப் பகுதி சீர்குலைந்து, தமிழ்மொழியின் ஒரு சிறந்த பகுதி சீர்கேடு அடைந்தது.

இனி, தமிழர் பண்பாடு சிறப்புற்றிருந்த சோழ சாம்ராட்டியத்தில் (9—நூ12—நூ) நாடக இயல்

இரண்டு வகையாக இருந்தது என ஊகிக்கலாம். ஒன்று, பண்டைக்கால முறை; இரண்டு, வடமொழி முறை எனலாம். பண்டை முறை கூத்து என்ற முறையிலும், புதுமுறை நாடகம் என்ற முறையிலும் வழங்கி வந்தன என கற்கள் பேசுகின்றன. கூத்து என்பது சிலப்பதிகாரம் முதற்கொண்டு வழங்கி வந்தது. இதில் ஒரு பகுதி சாக்கைக் கூத்து என்பது. இக்கூத்தை ஆண்பாலரும் பெண்பாலரும் அரசவைகளிலும், ஆலயங்களிலும் நடத்தி வந்தார்கள். இதனைப் பற்றி (120/25, 250/26, 97/15, 8/289) என்ற கல்வெட்டுக்கள் பேசுகின்றன. அவைகளைப் பற்றி திருவாடுதுறை, திருவிடைமருதூர், திருவெற்றியூர்க் கல்வெட்டுக்களில் காணலாம். (1925—அறிக்கை பக்கம் 82 பார்க்க.)

இனி "சாக்கை கூத்து" என்பது குடமலை நாடாகிய சேர நாட்டில் இன்றைக்கும் ஆலயங்களில் (அம்பலம்) நடைபெறுவதைக் காணலாம். சில மக்கள் இக்கூத்தினை நடத்துவதே தொழிலாகக் கொண்டுள்ளார்கள். அக்கூத்தை ஆட மூன்று மக்கள் வேண்டும். ஆடவன் ஒருவன் 'சாக்கியர்' என்றும், மற்றொருவன் 'நம்பியார்' என்றும் பெண் ஒருத்தி 'நங்கையார்' என்றும் சொல்லப் படுவார்கள்.

இத்தகைய கூத்து பண்டைக் காலம் முதல் நாளது வரை மலையாள நாட்டில் நடந்து வருகின்றது. தமிழ் நாட்டிலோ சோழன் காலத்தில் மட்டும் நடந்து வந்தது. இப்போது மறைந்து விட்டது. 'சாக்கையர் கூத்தைப்' போல வேறு பல கூத்தாட்டங்களும் மலையாள நாட்டில் இப்போதும் நிகழ்கின்றன. அவைகள் முறையே கதைகளி, ஓட்டந்துள்ளல், கைகொட்டிக்களி முதலியன.

நம் நாட்டு ஆலயக் கற்கள் கூறுவிட்டால், சாக்கைக் கூத்து என்ற ஒரு ஆட்டம் சோழர் காலத்தில் இருந்தது என்று நாம் அறிய முடியுமா? கற்கள் பேச்சு எத்தனைச் சரிதப் பயன் உள்ளதாகி இருக்கின்றது பாருங்கள்.

இனி, சோழ நாட்டுப் புனிதத் திருத்தலமாகிய திருக்கடவூரில் சிவாலயத்தில் உள்ள ஒரு கல் மற்றொரு அருமையான செய்தியை எடுத்து ஓதுகிறது. அவ்வாலயத்தே 'நட்டுவநிலை' என்ற ஒரு தொழில் (மானியம்) இருந்தது. அதனை வேறு கற்கள் "நிருத்தபோகம்", "சாக்கைக் காணி" என்று கூறும். அதாவது நிருத்தம் புரிவதற்கு ஒரு நிலம் தானம் செய்யப்பட்டு அதன் வருமானத்தைக்கொண்டு ஒரு கலைஞன் கோயிலில் தினந்தோறும் நடனம் செய்வது ஆகும். (இப்போது உள்ள தேவதாசி இனம் என்பது போல் என்க).

கி. பி. 1201 ல் இந்த தொழிலுக்கு **பாரசவன் பொன்னன்** என்பவன் நியமிக்கப்பட்டான். அவ்வாறு நியமிக்கச் சொன்னவன் சோழனுடைய (குலோத்துங்கன் III) ஆஸ்தான புலவனாக இருந்த வீராந்தப் பல்லவரையன் என்பவன். அவ்வாறு நியமிக்கப்பட்ட புலவன்

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி லிமிட்.,

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள்

நெம்பர் 80 வரை நூல்கள்

நாங்கள் சப்ளை செய்வது

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள் மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

மானேஜர்கள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்.

பொன்னன் என்பான். 'கால விநோத நிருத்தப் பேரரையன்' என்ற பட்டம் பெற்றவன். இவன் கடவூர்க் கோயிலுக்கு அரசனால் நியமிக்கப்பட்டான். இவன் முத்தமிழும் வல்லவனாக இருந்தான். தன் தொழிலுக்கு ஏற்ற ஊதியமும் வழங்கப் பெற்றவன்.

ஆகவே அக்காலத்தில் கூத்து, நடனம், இவைகள் எவ்வாறு போற்றப்பட்டன என்று கடவூர் கற்கள் பேசுகின்றதை அறிகிறோம்.

மேலும் தஞ்சைப் பெருங் கோயிலில் பொறிக்கப்பட்டுள்ள ஒரு கல் அக்கோயிலைக் கட்டின இராசராஜன் I என்பவனைப் பற்றி **இராஜராஜேசுவர நாடகம்** என்ற நாடகம் இயற்றப் பட்டதாகக் கூறுகிறது. (5ii :: ii 306) அதே அரசனைப் பற்றி **ஸ்ரீ ராஜராஜ விஜயம்** என்ற ஒரு காவியமும் இயற்றப்பட்டிருந்தது. (1930—31. ப. 44) அதேபோல இந்த நாடகமும் அவ்வரசன் செய்த பெரிய தொண்டுகளைக் குறித்து பாராட்டுவது ஆகும். ஆனால் இந்த நாடகம் என்ன ஆயிற்றோ, யார் எழுதினார்களோ, ஏன் வழக்கு ஒழிந்ததோ அறியக்கூடவில்லை.

தஞ்சை வட்டம் திருப்பந்துறை நல்லூர் சிவாலயத்தில் உள்ள ஒரு கல்வெட்டு இந்நாடகப் பெயரைக் குறிக்கிறது அக்கோயிலில் நட்டுவப் பங்கு, மெய்மட்டிப்பங்கு என்பவைகளைப் பெற்றிருந்த ஒரு கலைவலானின் பெயர், '**ஆஸ்யன் விக்கிரமாதித்தியன் ஆச்சான்** ஆன **இராஜராஜ நாடகப் பெரியன்**' என்று கூறுகிறது. இதனால் இராஜராஜ நாடகம் எழுதினவனோ அல்லது நடத்தினவனோ இந்த கலைஞன் எனவும் அவன் நகைச்சுவையாக நடிப்பதில் வல்லவன் எனவும் அறிகிறோம். (தமிழ் பொழில் 22—152)

இவைகளால் சோழர் காலத்தில் நாடகங்கள் ஆக்கப்பட்டன என்ற செய்தி மட்டும் வெளியாகிறது. பின்காலத்தோர்கள் இந்தக் கலையை ஏன் தொடர்ந்து போற்றவில்லையோ அறியோம்.

ஆனால் ஒன்று கூற முடியும். அண்மையிலே தஞ்சையை ஆண்ட "சரபோசி மன்னன்" காலத்தில் முன்காலத்து நாடகக் கலையை அநுசரித்துத் தன் பேரால் ஒரு குறவஞ்சியை சிவக்கொழுந்து தேசிகரைக் கொண்டு இயற்றிக்கொண்டான். அந்த குறவஞ்சியைத் தற்காலத்திலும் தஞ்சைக் கோயிலில் ஆடுகிறார்கள். இதை நோக்கினால் "கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமதுவாகப் பாவித்து" ஆடினதை ஒக்கும் அல்லவா?

காளிமார்க் சோடாகலர்

விருதுநகர் : திருநெல்வேலி ; மதுரை.

— தமிழ்த்தென்றல்

மிருகமும் மனிதனும்

சுகி

"**ப**டுக்காளிப் பயலுவ; யாரு கிட்ட வாலை ஆட்டறான்? காலைத் தறிச்சுப் போடுவேன், ஆமா ஒரே தறி. என் வயலை மிதிக்க பூலோகத்துப் பிரம்மாவுக்கே அச்சம். இந்த சிவனாண்டிப் பயலுக்கு அவ்வளவு கொழுப்பா" என்று ஆவுடையப்ப பிள்ளை இறைந்து கொண்டிருந்தார். எதிரே நின்ற தலையாரித் தேவர், "ஆமா நீங்க சொன்னாப்பிலே ஆச்சா, சிவனாண்டிப்பய, மாப்பிள்ளை முதலியார் பேச்சைக் கேட்டு தண்ணீரைத் திறந்தா, உங்க பண்ணையாள், காத்தான் தீவட்டி புடிக்கவா இருக்கான்?" என்று பற்ற வைத்தார்.

"கூப்பிடுவே, அந்தப் பயலை!" என்று கூச்சலிட்ட ஆவுடையப்ப பிள்ளை, பல்குச்சியைத் தூர எறிந்துவிட்டு, தலையில் முண்டாசை இறுக்கிக் கட்டினார். தொலைவில், புதுமழை விழுந்து எள்ளுக்கு உழுதுகொண்டிருந்த காத்தானை "டேய் காத்தான், புள்ளை கூப்பிடுதாக" என்று சத்தம் கொடுத்தார் தலையாரித் தேவர். தேவரின் குரல் எட்டுத் திசையும் கேட்கக்கூடிய அப்படிப்பட்ட தொண்டை.

"இதோ வர்றேன்!" என்று எருமை மாட்டு ஏரை அப்படியே புழுதியில் நிறுத்திவிட்டு வந்தான் காத்தான். கோவணதாரியான, அவன் கருங்கல் உடம்பு வாலிபத்தின் கட்டுக்குலையாமல் கரணைகரணையாக இருந்தது. தலையிலே வேட்டியை முண்டாசு கட்டியிருந்தான்.

"என்ன நாயினாரு கூப்பிட்டீங்களா?" என்றான் பணிவோடு.

"ஏம்லே, நேத்து நடந்தது உண்மைதானா?"

"அட தேவரு நயினா வந்து சொல்லிப் போட்டாரோ. அட, நாளைக்கு இல்லே; நாளானக்கி வயலுக்குத் தண்ணி விலகறோம். இதுக்குப்போட்டு, ஒரு நடைநடந்து அவரு கிட்ட வந்து நீர் ஏன் மூட்டிக் கொடுக்கீர்?" என்று தலையாரி மீது பாய்ந்தான்.

"அட மூதி மூதி; புள்ளை கேக்காவ. என்மேலே ஏண்டா பாயறே. நாளை நிலம் பட்டுப்போயி, சாவியும் சண்டுமாப் போனா, உனக்கென்னலே. தலைமேலே கையாப் போறவ புள்ளையில்லே!" என்று அங்கலாய்த்துக் கொண்டார்.

"நீரு போரும். உம்மோட சோலியைப் பார்த்துக்கிட்டு; எனக்குத் தெரியும், எங்க பண்ணை வேலே."

— தமிழ்த்தென்றல்

பிள்ளைவாள் முறைத்தார். "என்னலே தெரியும். காமட்டிப் பயலே. நேத்து அந்த முதலியார் வயலுக்குத் தண்ணியை விட்டுப் போட்டு, நீ எங்கேலே தீவட்டியா புடிக்கப் போனே; சிவனேண்டி கிழட்டுப்பய தண்ணி பாச்சினுனும்; இவன் பார்த்துக்கிட்டு இருந்தானும்; பாரும் வே தேவரே. எப்படி கதைஇருக்கு?" என்று சீறினர்.

"நீங்க பேசி என்ன செய்ய; தண்ணீரை விலகினவன் மாமன்; இவனுக்குப் பொண்ணைக் கொடுக்கிறவன். அவன் வாமடை போடற போது, இவன் என்ன செய்வான் மூணுமனுசனு இருந்தா தடுக்கலாம். சாதி சனத்திலேயும் மாமம் பாருங்க."

"மாமனும் மருமகனும்! எவனு இருந்தா நமக்கென்னவே, தேவரே. வயலு வெடிப்பு ஓடி தண்ணித்தட்டு வந்திருக்கு. இந்தப் பயலுக்கு புத்தியிலே பட்டுதா. அன்னுடம் கொத்து மட்டும் வாங்கருன் கொத்து. நாலு படி நெல்லு. கிழிக்கிற வேலைக்கு."

காத்தான் குறுக்கிட்டான், "அட உமக்கென்ன; நாம் பாச்சிப் போடறேன் இன்னம் செண்டு தண்ணி இருந்தா பொதிப் பட்டம் வந்திடும். போருரு முதலியாரும் வயலை விளைய வைக்க வேண்டாமா?"

"நீ என்னடா தானுவதி அவரு வயலுக்கு!" என்றார் நில சொந்தக்காரப் பிள்ளைவாள்.

"அவன் என்ன செய்வான், நீங்ககொடுத்த இளக்காரம். வேளா, வேளைக்குக் கஞ்சித் தண்ணி ஊத்தி கூட நாலு மரக்கா நெல்லுன்னும் சோழமுன்னும் கொடுத்தா, அவன் அப்படித்தாம் பேசுவான்."

"இந்தாரும். உங்க தேவமாரு வழக்கமே ஊரை ரெண்டுபண்ணறதுதானே. சும்மா இருக்கிறவனை வம்பிலே இழுத்து விடறது" என்று அலுத்துக்கொண்டான் காத்தான்.

"டேய் சொல்லிப்போட்டேன். இன்னிக்கு ராவுக்குள்ளே 'குளங்குள்ளி' வயல் நாலும் தண்ணி பாய்ஞ்சிடணும். இல்லே, வேலையை விட்டு நின்னுக்கோ. மாமன் மச்சான் உறவை வீட்டுக்குள்ளே வச்சுக்கோ. சொல்லிப் போட்டேன் அப்பாலே புள்ளை இப்படி நடந்துக் கிட்டாரேருண்ணு ஆவலாதி சொல்லாதேப்பா." என்று எச்சரிக்கை கொடுத்து விட்டு, "வாரும் தேவரே போவலாம்" என்று ஒத்தடிப்பாதை வழியே நடந்தார். வழிநெடுக உடைமுள்ளும், நெருஞ்சியும் கொரண்டியும் தழைத்து மண்டிக் கிடந்தன. புது மழை பெய்திருந்ததால், பசும் புல் தலைதூக்கப் பயந்து பூமிக்குள் பம்மிக் கிடந்தது. கண்ணுக்கெட்டின இறவைகளிலே கமலை அடிப் போரின் ஓசையை விட அந்த உருளைகளின் கீரிச்சொலி எங்கும் அதிகமாக ஒலமிட்டன.

"நல்ல கொடுத்தீக பயலுக்கு. இப்படிக் கொடுக்கலே இந்த வருடம் வயலிலே மாகாணிப்படி நெல்லைக் காண முடியாது" என்று தாபம் போட்டு வந்தார் தலையாரித் தேவர்.

பாலசுப்ரமணியர்

மார்க்கு

நயம் சூடன்

தயாரிப்பவர்:—

அ. சொ. பூ. வன்னிய நாடார்,

14, வெங்கலக் கடைத் தெரு, மதுரை.

எங்களிடம், 1, 2, 3 தோலா சூடன் டின் & அட்டைப் பெட்டிகளும், ¼ ராத்தல் & பிரஸ்சூடன்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும். எப்பொழுதும் எங்கள் ரிஜிஸ்டர் டிரேட் மார்க்கைக் கவனித்துப் பார்த்து வாங்கி உபயோகியுங்கள்.

Telegrams: COOPFIRE. Telephone: 4361.

The Co-operative Fire & General Insurance Society Ltd.,

MADRAS, 1.

President: Sri. T. M. CHINNAYYA PILLAI M. A., B. L.

Transacts

Fire Insurance of all description and

Motor Vehicles Insurance.

For Particulars — Apply to:—

P. SHUNMUGAM, B. A.,

POST BOX NO. 1249 **MADRAS, 1.**

"ஏம்வே, சிவனாண்டிக்கும் நம்ம காத்தானுக்கும் என்ன அப்படி உறவு ?"

"நீங்க என்னத்தைக் கண்டீக. சிவனாண்டி மவ முருகாயி இருக்குதே குட்டி நல்ல குட்டி. மூக்கும் முழியும் அப்படி. பாலீஸ் போட்ட கருங்காலி பீரோ மாதிரி...அத் தோட வய வேலையிலே துடி. பத்தாள்வேலையை பம்பரமா பார்க்கும். நீங்க பார்த்தது இல்லே?"

"பாத்திருக்கேன். நம்ம இறவையிலே மூளவாய் பழம் எடுக்க, கத்தரிக்கு களையெடுக்க வருமே கருவலா........"

"அதேதான். அது சிவனாண்டி மவ. உங்க அடியான் காத்தான் கட்டப் போறான்."

"ஓகோ! அதனாலே, மாமன் தண்ணீர் விலகிப் போனா போகட்டும், முதலியார் நெல்லை அறுத்துப் போவார்; இந்த இளிச்சவாய் புள்ளை தீவை கொண்டு வருவார், இதுதான் இந்தப் பய நெனைப்பு."

"நீங்க கொடுத்த இடம். நாலு விடு விட்டு வையுங்க. மாமன்—மருமகன்னு, அவுங்க அவுங்க வீட்டுக்குள்ளே. நம்ம புழைப்பு சிங்கி அடிச்சுப் போவாது."

"வாஸ்தவம் வே. நல்ல வேளையா நீரு சொல்லலே நாங் கவனிச்சிருக்க மாட்டேன்."

"ஐயாவுக்கு என்ன தெரியும். நானு மேலக் காட்டுக்குப் போறேன். இருசால் டயம் பாருங்க."

"சரி போம்."

தலையாரித் தேவர் காலைத் தேய்த்தார். பிள்ளைவாள் தன் தலையைத் தடவ ஏதோ ஒரு பொருள் கேட்கப் போவதை உணர்ந்து, "என்ன?" என்றார்.

"ஒண்ணுமில்லே. உங்க இறவையிலே, நாலு இளநீர் வேணும். ஐயாகிட்டே சொல்லி, பறிக்கலாமின்னு கேக்கிறேன்."

"பறிச்சுக்கும். நாலுக்கு மேலே பறிச்சிடாதேயும்வே. காத்தானைப் பறிச்சுப் போடச் சொல்லும்."

"சரி. நானு வரட்டுமா ஐயா."

தலையாரித் தேவர் கும்பிட்டு விடை பெற்றுப் போய் விட்டார். வாய்க்கால் கரை மேடேறி ஆவுடையப்ப பிள்ளை குளித்து முழுக, தெப்பக் குளம் பக்கமான தடத்திலே இறங்கினார்.

– 2 –

மனம் போனபடி மண்டிச் செழித்துக் கிடந்த ஆவாரஞ் செடிகளிலே தங்கக் குமிழிகள் போல பூக்கள் மலர்ந்து கிடந்தன. கொத்துக் கொத்தான தங்க ரசக் குண்டுகளை கையில் கிள்ளி, 'வண்டிப் பாரம்' தலையில் வைத்துக்கொண்டாள் முருகாயி. காலையில் இன்னும் உலராத கொரண்டிப் பூக்களையும் இரண்டொன்று செருகினாள். மஞ்சளும் வெள்ளையுமாக காட்சி தந்த அந்த கரிய கூந்தலின் கட்டு இன்னும் கவர்ச்சியாய் இருந்தது. பாதையை அடுத்து நின்ற சோளக் காட்டில் ஒரு தட்டையை வளைத்து கதிரை

ஒடித்தபோது, "அது யாரு ஏ...அது யாரு" என்று தொலைவிலிருந்து குரல் கொடுத்தான் காத்தான். அவள் பயப்படாமல் இன்னும் இரண்டு கதிர்களை ஒடித்து கஞ்சிக் கலயத்துக்குள் போட்டுக் கொண்டு பாதையில் நடக்க ஆரம்பித்தாள்.

"அட அது யாரு புள்ளே. நாம் பாட்டுக்கு கத்தறேன். திருட்டுத்தனமா அது யாரு?" என்று உழுகின்ற எருமை மாடுகளை அமர்த்தி விட்டு குறுக்கே புகுந்து வந்து அவள் எதிரே நின்றான். அப்போதுதான் அவள் யாரெனத் தெரிந்தது. தன் வருங்கால மனைவி!

"அடி ஆத்தாடி ரெண்டு கதிரு ஒடிச்சதுக்கு இம்மாங் கூச்சல் போடறயே!" என்று அலட்சியமாக சோளத்தை உதிர்த்துக் கொரித்தாள். சோள மணிகள் சவைக்கப்பட்ட இதழ் கடையில் வெண்ணிறப் பால் ஒட்டிக்கொண்டிருந்தது.

"ஏது, ஏது, அப்பனும் மகளும் கூடிப் பேசி எம் பொளைப்புக்கு மண் வைக்கணுமின்னு தீர்மானுச்சிப் போட்டீங்களா?"

"என்ன? என்ன? என்ன சொன்னே?"

"இல்லே அப்பனும் மகளும் கூடிப்பேசி என்னைக் கெடுக்கத் தீர்மானிச்சுப் போட்டீக."

"இந்தாப்பா. உங்க தோட்டக் கதிரை பறிச்சு நாங்க கோபுரம் கட்டலே" என்று தரையில் வீசினாள்.

சோழக் கதிர் அவன் காலடியில் வீழ்ந்து, இரண்டொரு மணிகள் தெறித்தோடின. முருகாயி கோபத்தோடு நடந்தாள். காத்தான் ஓடி தட்டுமறித்து, "ஏங் கோபம் இப்படி பத்ரகாளிக்கு வர்ற மாதிரி வருதாம் ? இன்னம் நாலு வேணுமின்னாலும் ஒடி. கேட்டு ஒடி" என்று பாதி கெஞ்சலும் பாதி கொஞ்சலுமாகச் சொன்னான். அவன் முகத்திலே அசடு படியச் சிரித்தான். ஊடலுக்கு எல்லை கண்ட முருவாயிபுன்னகைபூத்து, "பின்னே என்னமோ அதிசயமாத்தான் சோளக்கதிர் பயிரிட்ட மாதிரி பேசறயே. எங்க இறவையிலே இன்னம் 'பால்' கட்டலே பிஞ்சுக் கதிரா இருக்கு" என்று கோணியும் நாணியும் நடந்தாள். இன்னும் நாலு கதிர்களை ஒடித்து பானையைப் பிடுங்கி அதற்குள் போடப் போனான். அவள் திமிறவே ஒரு கையால் பிடித்துக் கொண்டு, அவள் கண்களைக் கூர்ந்து பார்த்தான். அவனுடைய இரும்புப் பிடியிலே கருங்குவளை மலர் போன்ற அவள் கையை மீட்க முடியுமா? பிடியிலிருந்து நழுவ முடியாமல் உடலை நெளித்தாள்.

"எம்மேலே கோவிச்சுக்காதே முருவாயி. நேத்து உங்க அப்பன் குளங்குள்ளி வயலுக்குத் தண்ணி விலக வந்தாரு. நான் விட்டுப் போட்டேன், எதுக்காக ......?"

"பயந்துக்கிட்டு!" அவள் சிரித்தபோது மூக்கிலே கிடந்த கத்திலே ஒளிபட்டு எங்கும் 'டால்' அடித்தது.

"அட சிரிப்பைப் பாரு! சிரிப்பை. இந்த ஆம்பிளே சிங்கம் ஒரு போடு போட்டேன்னு, உங்க அப்பன் தெற்கே, வண்டி மறிச்சான் சாமி கிட்டேபோய் மண்ணைக் கவ்வி விழுவாரு!"

"அட என் சூரப்புலியே!" அவன் முதுகில் விளையாட்டாகத் தட்டினாள். அவனுக்கு உடம்பு புல்லரித்தது. ரத்தநாளங்கள் விண்ணென புத்துயிர் பெற்று முகத்திலே நாணத்தைக்கொண்டுவந்துபுகுத்திற்று. சிலுசிலுத்த உடம்பும்,சலசலவென ஆவாரம் காட்டு காற்றும் அவர்களுக்குப் பண் இசைத்தன. அது காடு! அக்கம் பக்கம் மக்கள் இனமே கிடையாது என்ற நினைப்பும் ஓடிற்று. தன்னருகே இழுத்து நெஞ்சோடு சேர்த்துக் கொள்ள முயன்றான்.

"சே. சே. அத்தானே உதவாது!" என்று பிடியிலிருந்து நழுவுவது போல நழுவ முயன்றாள்; நழுவ மனம் வருமா? ஆவரம்பூவும் கொரண்டிப் பூக்களின் மணமும் அவன் நெஞ்சைத் தீய்த்தன. "நிசமா சொல்லறேன் முருவாயி. நேத்து உம் முகத்துக்காக உங்க ஐயா கிட்டே வம்புக்குப் போகாம, வந்திட்டேன். எங்க நயினரு இப்போ ரொம்ப ரொம்ப கோபங் கொண்டாரு. கண்டிசனா சொல்லிட்டாரு, இன்னிக்கு தண்ணி பாய்ச்சி ஆகனுமுன்னு. நீ சொல்லிப் போடு உங்க அப்பங்கிட்டே, வயல் பக்கம் வர வேண்டாமின்னு" என்று தழுதழுத்த குரலில் சொன்னான். தலையிலிருந்த பூக்கள் அங்கே சிதறி விட்டன. அவள் முடியை எடுத்து கொண்டை போட்டுக்கொண்டாள். ஆதவன் கதிர்கள் அவளுடைய பருவத் துடிப்புகள் மீது படர்ந்து ஒளிக்கின. அவன் நெஞ்சையும் நினைவையும் மறந்தான்.

"அட விடு மச்சான். அடுத்த வெள்ளியிலே கலியாணம். ஊரிலே என்ன சொல்லும். உறை முறை என்ன நினைக்கும்."

"சொன்னுங்க!" என்று அவள் கையைப் பற்றி சோளக் கொல்லையின் வரப்பிலே நடக்க ஆரம்பித்தான். அங்கங்கே வெடித்து நின்ற பயற்றஞ் செடியில் காய் பறித்து ஈஞ்சிக்கொண்டு அவள் நடந்தாள். தென்னைமரங்கள் சூழ்ந்து நின்ற கிணத்தடிப் பக்கம் வந்தார்கள். வெயிலின் மறைப்புக்கு ஒரு குடிசை போல் காட்சி தந்தது சிறிய இடம். இரட்டைத் தென்னோலைத் தடுக்கு அங்கே கிடந்தது. கீழே உட்கார்ந்தால் கமலைக் கிடங்கு மணல் குத்தாமல் இருக்க, தென்னோலைத் தடுக்கு ஒரு மெத்தையாக மாறிவிடும்.

தடுக்கை எடுத்துப் போட்டான். குடிசைக்குள் நுழைந்தான். முருவாயி திடுக்கிட்டாள். அவன் கஞ்சிக் கலயத்தை எடுத்துக்கொண்டு வந்து வைத்தபோது அவளுக்கு மூச்சு வந்தது. "நானு கிணத்திலே உடம்பு தேய்ச்சு குளிச்சு வர்றேன். நாலு முளகாய் கிள்ளி வா; அந்த நாலாவது பக்கத்திலே ரெண்டு வெங்காயமும் போர்த்து எடுத்தா" என்று கிணற்றுக்குள் இறங்கினான், உடம்பை சுத்தி செய்ய. அவள்

உயர்ந்த ரகம் ! குறைந்த விலை !!

ராஜன் பார் சோப்

எங்களிடம் மஞ்சள், நீலம் சலவை பார் சோப்புகளும், கேக் சோப்புதினுசுகளும் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

வாடிக்கைக்காரர்களின் சௌகரியத்தை முன்னிட்டு கீழ்க்கண்ட ஊர்களில் சேல்ஸ் டிப்போக்கள் ஏற்படுத்தியிருக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

சேல்ஸ் டிப்போ: மதுரை: தூத்துக்குடி: திண்டுக்கல்.

விபரங்களுக்கு:— ராஜன் சோப் ஒர்க்ஸ்,
சோப் தயாரிப்பாளர்கள், விருதுநகர்.

பச்சை மிளகாயும், வெங்காயமும் தேடப் புறப்பட்டாள்.

நேரம் போய்க் கொண்டிருந்தது. கஞ்சிக் கலயமும், காணத் துவையலும் அவனுக்கு அமிர்தமாக இருந்தன. அன்றைய உபசரிப்பு அவன் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. ஆனால் உள்ளம் நிறைந்த பின்பு உணவு எப்படிச் செல்லும். இருவரும் ஏதேதோ உப்புச் சப்பின்றிப் பேசிக்கொண்டே கஞ்சி குடித்தார்கள். காதலியின் பேச்சிலும், காட்சியிலும் ஏரை விட்டு அவிழ்க்காமல் இரு எருமைகளையும் விட்டு வந்ததை மறந்துபோனான் காத்தான். பாவம், எருமைகள் நின்ற இடத்திலேயே 'தவம்' செய்தபடி நின்றன. இருவரும் அன்னியம் என்ற உணர்வு நீங்கி, ஒருவருக்காக ஒருவர் பிறந்ததாகவும், இதைக் கிடைத்தற்கரிய அரிய பேருகவும் எண்ணிவிட்டார்கள். கும்மாளமாகப் பேசிக் கொண்டே போய் தங்கள் எல்லையைக் கடந்த நிலையில் பேச்சையும் ஆரம்பித்து விட்டார்கள்.

அவர்கள் பல நூற்றாண்டு ஒருவரை ஒருவர் அறிந்தவர் போல, பேசிப் பழக ஆரம்பித்து புருஷனும்—மனைவியுமாக மாறி விட்டார்கள்.

குடிசைக்கு வெளியே அவள் மான் போல மருண்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். யாருமில்லை. புதிதான வெட்கம் அவளைப் பிடுங்கித் தின்றது. அவசர அவசரமாக கலைந்த புரண்ட தலையை அள்ளிச் சொருகி, சொல்லாமல் கொள்ளாமல் அவள் புறப்பட்டாள். குடிசைக்குள்ளிருந்து வெளியே வந்தபோது அவள் விறுவிறென ஓட்டமும் நடையுமாகப் போய்க் கொண்டிருந்தாள். கறிக்கு நாலு கத்தரியும், நாலு பச்சை மிளகாயும் கொடுத்து விட வேணும் என்று எண்ணியவன், தன் மறதியை நினைத்து கூப்பிடுவதா வேண்டாமா என்று தயங்கினான். அவள் இறவைத் தோட்டத்தின் தொண்டைத் தாண்டி, அங்கு நின்று புதிய நாணத்தால் முகம் மலரச் சிரித்தவள், மறுகணம் ஓடியே விட்டாள். அவன் தோட்டத்து சர்வே கல்லில் ஏறிநின்று வாய்க்கால்கரை வழியே போவதை நெஞ்சம்துடிக்கப் பார்த்துவிட்டு, மேல்திசையில் பார்த்தபோது தான் நெஞ்சு திகில் அடித்தது. நாலு மணி நேரமாக, ஏரில் பூட்டப்பட்ட எருமைகள் அவிழ்த்து விடப் படாமல் நின்று கொண்டிருக்கின்றன. அடித்த வெயிலெல்லாம் அவை தலையில்பட்டன. "சை! என்ன மறதி!" என்று ஓடினான். உடம்பில் ஏற்பட்ட புதிய சோர்வு காரணமாக அவன் நினைத்தபடி வேகமாக ஓட முடியவில்லை.

தன் பண்ணைக்காரர் ஆவுடையப்ப பிள்ளைவாளுக்கு நாலு மணி நேரம் உழுத மாடுகள், நாலு மணி நேரம் கடும் வெயிலில் நின்றது. இது தெரிந்தால்? அப்பால் அவன் அந்த இடத்தை விட்டு விலகிக் கொள்ள வேண்டும், முருகாயி தன்னறிவையே குறையாடி விட்டாள். இனி கவனமாக நடக்க வேண்டும் என்ற நினைப்பில் மாடுகளை அவிழ்த்து விட்டு, ஏரைத் தூக்கிக் கொண்டு

கமலைக் கிடங்கில் கொண்டு வந்து மாடுகளைப் படுக்கப் போட்டான். பாவம்! இவன் நெஞ்சமும் நினைவும் குளிர்ந்திருந்த நேரத்தில் அவைகள் பொசுக்கும் வெயிலில் உலர்ந்து கருகின. அன்றைய வெயில் பட்டு, அவை அதிக கருப்பாக மாறி விட்டதாகக் கூட அவன் கண்களில் தோற்றந் தந்தன. மாடுகளுக்கு அதிகப்படியான கவனம் செலுத்தி தீனியும் தேய்ப்பும் கொடுத்தான்.

இன்னும் இரண்டு மணி நேரத்தில், குளங்குள்ளிவயல்பக்கம், தான் போக வேண்டும் என்ற நினைப்பு வரவே, அவன் மண்வெட்டியுடன் தன் பண்ணைக்காரர் வீடு நோக்கி நடந்தான். அன்று ஏற்பட்டிருந்த புத்துணர்ச்சி அவனுக்கு நடையிலும், பார்வையிலும் தனியான உணர்ச்சியைத் தந்தன.

அவன் போய்க் கொண்டிருந்தான்.

3

அந்திப்பொழுது, மதவக்குறிச்சிக் கிராமத்தில் பார்க்க வேண்டிய பொழுது. பல்லாயிரக் கணக்கான பனைமரங்களுக்கும், குடைகுடையாகப் பறந்து நிற்கும் ஆயிரக் கணக்கான உடை மரங்களுக்கும் அப்பால் மாலைச் சூரியன் நாடகமாடிக் கொண்டிருந்தான். ரத்த மயமான அந்தக் காட்சிக்கும், ஆயிரக் கணக்கான ஏக்ராபூமியிலே பச்சைக் கம்பளம் விரித்தாற்போல பசிய வயல்கள் காற்றிலே அலைமோதிக் கொண்டிருப்பதும், காணவேண்டிய கண் காட்சிகள். மானூர் குளத்துத் தண்ணீர் எப்போதும் கட்டுப்பாட்டுக்குப் பேர் போனது. பஞ்சம் அங்கே தண்ணீர் பட்ட பாடு. அதிக உற்பத்திக்கு ஆசைப்பட்டு, ஒவ்வொருவரும் சக்திக்கும், வருண பகவான் கருணைகரும் அப்பாற்பட்டு நடவு செய்திருந்தார்கள். இதனால் அந்தப் பிராயந்தியத்தில் தண்ணீர் விலகுவது என்பது, குலமுறைகள் கிளர்த்துப் படலமாக முடியும். புல்லுக்கும் ஆங்கே வாய்க்கால் வழியோடித் தண்ணீரை பொசியுமுன், கிராமத்திலே உள்ள செல்வாக்கு, ஆள் படை, அம்பலத் தன்மைகளைப் பொறுத்துத்தான் . நடைபெறும். அன்று மாலை, மாப்பிள்ளை முதலியார் வயலுக்கு, சிவனாண்டி தண்ணீர் விலகி, வாமடையில் மண்வெட்டியைச் சாத்தியபடி வரப்பிலே முடக்கியிருந்தான்.

வயலுக்குள்சலசலவென தண்ணீர் 'ஒரு சுருதி' யில் ஓடிக்கொண்டிருந்தது, வரவர சலசலப்புக் குறையவே எழுந்தான். மேற்கே தலைச் சனில் யாரோ வெட்டிக் கொண்டிருந்தார்கள். அதனால்தான் வரவேண்டிய சலசலப்புக் குறைந்து தண்ணீர் தட்டுத் தடுமாறிற்று. சிவனாண்டிக்குக் கோபம். இன்னும்நாலு மணி போனால் எல்லா வயலும் தண்ணீர் அலைமோதி நிற்கும். அதற்குள் எந்தப் பயல் மடையைத் திருப்புகிறான்; அவன் மென்னியைத் திருப்பினால் என்ன ?

எழுந்து நடவரப்பில் நடந்தான். நாலு வயற்கடப்புக்கு அப்பால் வரும்போதே விலகின ஆள் யாரெனத் தெரிந்து விட்டது. தன்னுடைய

வருங்கால மாப்பிள்ளை காத்தான், விரைவாக அங்கே வந்தான்.

"இது என்ன நியாயம்? பாயற தண்ணி ஒரு முட்டா பாஞ்சுட்டுப் போகாம; இடையிலே இப்படி தடுத்தா இது என்ன நியாயம்?"

காத்தான், "இன்னிக்கு புள்ளை வயல் பாயட்டும்; அவரு கன்னு பின்னுன்னு இட்டுதாரு. நானே உங்க முதலியார் வயல் பாயட்டும். நானே நின்னு பாச்சிப் போடுதேன், உமக்கு சிரமமில்லாமே!" என்றான். பேச்சோடு பேச்சாக வரப்பை நல்ல வெட்டித் தறித்து மடை போகாமல் தண்ணீர் அப்படியே தன் வயலுக்குள் ஓடிப் பாய வழி செய்தான்.

"நீபாட்டுக்கு வந்தே; எங்கிட்டேஒரு மருவாதைக்குகேக்காமே மடையை வெட்டி உன் வயலுக்குப் போடரே" என்று வாய்க்காலுக்குள் இறங்கினான்.

"நேத்து நீரு கேட்டதுக்கு நாஞ் சரி சொன்னேன். நேத்தே எங்க முறை."

"எங்க வய மேட்டுப் பக்கத்துப் பாசானம். உங்க வயல் பள்ளத்து வய, நாலு வாரம் ஈரம் காக்குமே. விடு விடு" என்று அவன் குறுக்காக அடைத்த அணையை, மண்வெட்டியால் ஒரு வெட்டு வெட்டினான். அடுத்த வெட்டு அணையில் விழுமுன் காத்தான் இடது கையால் மண்வெட்டியைப் பிடித்துக் கொண்டான். அந்த பிடியை, பாவம் வயசான சிவனாண்டியால் கீழே தணிக்கவோ, மேலே உயர்த்திப் பிடுங்கவோ முடியவில்லை!

"என்ன உடல் திமிருன்னு செய்யறயா?" என எடுத்த எடுப்பிலே சிவனாண்டி கேட்டான். அவன் ரோசத்துக்கு காரணம் இருந்தது. அடுத்த வாரம் மகள் முருவாயி கலியாணத்திற்கு முதலியார் நூறு ரூபாய் இனாமும், நூறு ரூபாய் கடனும்தருவதாகச் சொல்லி இருக்கிறார். அந்த பாசத்தால் அவன் அவ்வருடம் மேட்டுப் பாங்கான வயலையும் விளைவித்து விடப் பாடு படுகிறான். வயல் விளைந்து போனால் கடனையும் தள்ளிக் கொடுத்து விடுவார் என்பது அவன் நம்பிக்கை. வயல் விளைச்சலுக்கு, குறுக்காககாத்தான் நிற்கிறது அவனுக்குப் பிடிக்கவில்லை நிற்பதோ மகளைக் கட்டப்போகும் மருமகன் என்பதையும் மறந்து, "விடு, மண்வெட்டியை. குறை வயலும் பாஞ்சுதான் உங்க புள்ளை வயல் பாயணும்" என்று மண்வெட்டியைப் பறிக்க நினைத்தான். முடியாமற் போகவே கையினால், மண்ணைப் பெயர்த்து காலில் திருப்பினான். பிள்ளைவாள் வயலுக்குள் தேங்கிய தண்ணீரும் வாய்க்காலில் பிய்த்துக்கொண்டு ஓடவே, காத்தான், "சே! என்ன நாஞ் சொல்லறேன். போயிடு பெரிய மனுஷன். நமக்குள்ளே சண்டை வேண்டாம். சமாதானமாகப் போவோம்" என்று தடுத்து கையைப்பிடித்தான். அவன் கைப்பிடியை திமிறிக் கொண்டு, சிவனாண்டி அணையை பறித்தான். தண்ணீர் தாராளமாக ஓட ஆரம்பித்தது.

"அடசே, சொல்லறேன் போ" என்று காத்தான் சற்றுப் பலமாகத்

— தமிழ்த்தென்றல்

சென்னை-600 008

மதுரைமாநகரில்

சகலவித இங்கிலீஷ் ஆயுர்வேத
மருந்து வகைகள் டாய்லெட் தினுசுகள்
நயமாக குறைந்த விலையில்
கிடைக்குமிடம்:

ஓரியண்டல் மெடிகல் மார்ட்

31 மேலக் கோபுரத் தெரு,
மதுரை.

நா. அ. மா. அண்ணாமலை செட்டியார்
அ. முத்தையா

கோடைகாலத்திற்கு குளுமை!
அடைமழை நேரத்திற்கு அரண்!

எங்கள் "சிங்க மார்க்" குடைகளே!

கோடை காலங்களிலும்
மழைகாலங்களிலும் நீங்கள் உபயோகப்படுத்துவதற்கு
சிறந்தகுடைகள் சிங்கம் மார்க் குடைகளே.

சிங்கம் மார்க் குடை கம்பெனி

ஷோரூம்:- 13. கீழாவணிமூலவீதி, மதுரை.
பாக்டரி:- 17. ஆட்டுமந்தைப்பொட்டல் 7 வதுசந்து, மதுரை

எமது ஷோரூமுக்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

— தமிழ்த்தென்றல்

தள்ளினான். இப்படித் தள்ளப் போவதை எதிர்பாராத சிவனாண்டி நிலைதவறி, அடுத்த வயல் சேற்றில் புரண்டு எழுந்தான். தள்ளிவிட்டான் என்ற ஆத்திரம்; விழுந்து விட்டோம் என்ற அவமானம்; உரிமையைப்பறிப்பதாக எண்ணிய ஏக்கம்—எல்லாம் சேர்ந்து கோபம் வந்தது. காத்தான் வாய்க்காலில் ஓடிய தண்ணீரை மறித்து மீண்டும் பிள்ளைவாள் வயலுக்குள் போக, குனிந்து அணை தேக்கிக் கொண்டிருந்தான். சிவனாண்டி கோபம் தாங்காமல், "என்னடா சின்னப்பயலே!" என்று முதுகில் ஓங்கி ஒரு அறை வைத்தான். சேறு சகதியுமாக ஐந்து விரலும் காத்தான், முதுகில் பதிந்தன. காத்தான் "போ பெரிய மனுசன்; அடிச்சா அடிச்சிட்டுப்போ" என்று தன் வேலையில் ஈடுபட்டு தண்ணீரைப் பாய்ச்சினான்.

சிவனாண்டிக்கு கோபம் வந்து, தன் மண்வெட்டியால் மீண்டும் அணையை உடைக்க வந்தான். "சீ! எட்டிப் போ. ஒரு தரம் சொன்னாத் தெரியலே. மனுசனா? மாடா?" என்று மண்வெட்டியைப் பிடுங்கி தலையைச் சுற்றி எறிந்து விட்டான். சிவனாண்டிக்கு கோபம் வந்தும் பலனில்லை. இரண்டு வயலுக்கு அப்பால் மண்வெட்டி போய் விழுந்து கிடக்கிறது. "பேசிக்கிறண்டா. எங்க முதலியார் ஒண்ணும், உங்க புள்ளைக்கு இளைச்சவர் இல்லேடா" என்று வர்மம் கூறினான்.

"போ. போ. எங்க வேணுமானாலும் போ" என்று அங்கேயே உட்கார்ந்து விட்டான் காத்தான்.

கடைமையை, தான் உண்ணும் உப்பை நினைத்து, தன்வாழ்நாளையே பாழ் படுத்திக்கொண்ட விபரம் அவன் யூகிக்க முடியவில்லை. மறுநாள் சரியாகி விடும் என்று நினைத்தான். மேலும் தன் கலியாணத்திற்கு ஆவுடையப்ப பிள்ளைவாள் முந்நூறு ரூபாய் இனாம் தருவதாகச் சொல்லி இருக்கிறார். அவருக்கு விளைச்சல் இல்லாவிட்டால், பணம் கொடுப்பாரா? அவருக்கு உழைத்துப் போட்டால்தானே தனக்குப் பணம். அந்த கரிசனையில் அவன் ஆழ்ந்து விட்டான்.

ஆனால், அவன் நினைத்தபடி மறுநாள் சிவனாண்டி வயலுக்குத் தண்ணீர் விலக வரவில்லை; இவன் சேரிக்குப் போனபோது கூட அவன் பேசவில்லை. முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"என்ன?" என்று பேச்சுக் கொடுத்தான்.

"எங்கிட்ட பேச்சுவேண்டாம்."

"அட, இதுவெல்லாம் ஒரு சண்டையா? வயலுச் சண்டை வயலே விட்டு வந்தாப் போச்சு."

"போவும் போவும்" என்று தலையைத் திருப்பிக்கொண்டு சிவனாண்டி போய் விட்டான். அவன் பின்னாக வந்த முருகாயி தலையைக் கவிழ்ந்தபடியே வந்தாள். அவளிடம் சரசமாக, "என்ன முருவாயி கொண்டையிலேமருக்கொழுந்தா?" என்று கேலி செய்தான். அவள் பேசவில்லை. அவள் முகம் களையிழுந்திருக்கவே, "ஏன் முருவாயி!" என்

றான். அவள் இவனைக் கடந்து போகவே, மறுபடியும் தட்டி மறித்தான். திரும்பிப் பார்த்த சிவனாண்டி, "எவண்டா காமாட்டிப் பயல். போடா அங்கனே. எம்மவ கிட்ட பேசினே ஒரே வெட்டா வெட்டிப் போடுவேன். போ முருவாயி" என்று கத்தினான். முருவாயி போய் விட்டாள்.

காத்தான் தலை சுழன்றது. கடமையைச் செய்யப் போக கலியாணம் கழன்று விட்டதா? அவன் பேந்தப் பேந்த விழித்தான். அவன் வாழ்விலே பாலைவனம் கண்ணூக் கெட்டிய தூரம் சுவடு விட்டுப் போவதை உணர்கிறான். முருகாயி தன்னவள் என்ற அந்த உரிமை அவனுக்குக் கிடையாதா? கிழவன் தன் வஞ்சனையை, தன் பழியை இப்படியா தீர்த்துக் கொள்ள வேண்டும்? "ஆனால், முருகாயி எப்படி ஒத்துக் கொள்வாள் பார்க்கலாம்" என்று நினைத்தான்.

அவன் நினைத்தபடி எதுவும் நடக்கவில்லை. பிள்ளைவாள் ரொக்கம் முந்நூறு ரூபாய் கலியாணத்திற்குக் கொடுத்தார். பயன்? யார் யாரோ சிபார்சு செய்தும், முருகாயியைக் கொடுக்கச் சிவனாண்டி மறுத்தே விட்டான். ஊரிலுள்ள பெரிய மனிதர்கள் சொன்னார்கள்; யாரையும் சிவனாண்டி பொருட்படுத்தாமல், பதினைந்து மைலுக்கு மேற்கேயுள்ள ஆலங்குலத்திலே கட்டிக் கொடுத்து விட்டான்.

"அட அவ என்னடா அப்படி ரதியா? போனாப் போகுது இன்னும் எத்தனை பொண்ணோ இருக்குது காத்தான்."

இதைப் பலரும் சொன்னார்கள். சொல்லுவார்கள். சோளக் காட்டு தென்னை மரங்களுக்கு ஊடாக அவன் வரும்போதெல்லாம் முருகாயி சிரிப்பதாகப் படும். குடிசைக்குள் ஓடி ஒளிவதாகக் காட்சி தருவாள். முந்தானையைச் சுருட்டிமடக்கிக் கொண்டு ஓடுவாள். எல்லாம் அவன் நினைவுக் கொப்பளங்கள். அவளை மறக்கமுடியவில்லை. அந்தக் குடிசையை நினைக்கும்போது, அவள் மறக்கும்படியா பழகினாள்?

மறு மாதம் முதல் அந்த ஊருக்குள் முருகாயி நடமாட்டமேயில்லை! அவள் அவன் நெஞ்சை விட்டுப் போய் விட்டாள்; பிறன் மனைவியாகப் போய்ச் சேர்ந்தாள். ஆலங்குளத்துக்காரியாகப் போயே விட்டாள்.

4

பருவகாலங்கள் மதவக்குறிச்சி கிராமத்திற்கு வந்து வந்து போய்க் கொண்டிருந்தன. கோடையும் குளிரும் வந்து போயின. காத்தான் மனசிலே பிறந்த முதற் காதல் மட்டும் இன்னும் அழிந்து பிறக்கவில்லை. அது வசந்த கால நினைவாகவே இருந்து விட்டது. கால வெள்ளத்திலே இரு வருடங்கள் ஓடி விட்டன.

அன்றொருநாள். மழைக் காலத்துப் பகல்.

தோட்டத்து இறவையிலே, மழையும் வானத்துக்கும் பூமிக்குமாக சரங்கோர்த்ததுபோல பெய்து

கொண்டிருந்தது. இடையிடையே மின்னல் பாய்ந்து சென்றது. மழையின் வேகம் தாங்காமல், அவன் குடிசைக்குள் நுழைந்து பதுங்கினான். வெளியே 'சோ' வென மழை கொட்டுகிறது. திடீரென யாரோ அதற்குள் வருவது போல உணர்ந்தான். மனத்தின் பழைய நினைப்போ யென்று கண்ணை மூடிப் பார்த்தான்; அவன் கனவு காணவில்லை. விழித்துப்பார்த்தான். சொட்டச் சொட்ட நனைந்துகொண்டு நின்றவள் முருகாயி!

"யாரு முருவாயா? நிசமாத் தானா?" அவன் உடம்பு குலுங்கிற்று; குரல் கரகரத்தது.

"ஆமாம்." நிதானமாகச் சொன்னாள்.

சற்று அமைதி; வெளியே மின்னிச் சாடிச் சென்ற மின்னல் கொடி ஒன்று, குடிசைக்குள்ளே ஒளிக் கீற்றைப் பதித்துச் சென்றது. அந்த ஒளியில் அவன் முகம் சுடர் விட்டுப் பிரகாசித்தது.

"புருசன் வீட்டிலே யிருந்து நடந்து வருகிற பாதையா?"

"ஆமா. குறுக்கு வழியா ஆலங்குளத்திலே யிருந்து அப்பனைப் பார்க்க காட்டுப் பாதையிலே வந்தேன். பாவிமழை புடிச்சுட்டுது! நீ குடிசையிலே இருப்பேன்னு நினைக்கலே, இங்கே ஒதுங்க வந்தேன்."

"நான் இருந்தா என்ன? முழுங்கிடுவேனா! பேயா பிசாசா? புலியா?"

"என்ன இருந்தாலும், நீ..." என்றவள் எதையோ நினைத்துக் கொண்டு, "உனக்கு இன்னும் கல்யாணமாவலையா?" என்று கேட்டாள்.

"பொண்ணு யாருகொடுப்பா?"

"பொண்ணுக்கா பஞ்சம்?" என்று கேட்டாள், புடவையின் ஈரத்தைப் பிழிந்தபடியே.

"இனிமே கல்யாணம் ஏது?"

"இப்படிச் சொன்னவங்க எத்தனையோ பேரு."

இன்னும் மழை ஓயவில்லை. மனிதன் மனசிலே சந்தர்ப்பங்கள் பயங்கர விளையாட்டு விளையாட ஆரம்பிக்கும். அப்படித்தான் காத்தான் நினைத்தான். எட்டாக் கலியாகப் போய்விட்டவள், அடைக்கலமாக வந்து நிற்கிறாள். தனிமையான இடம். அவன் குளிர்ந்த உடல், திடீரென வியர்வையால் கொதித்தது.

இருந்தவன் எழுந்தான். புரிந்து கொண்டாள் முருகாயி.

"மச்சான் வேண்டாம், பழி பாவம் பாரு."

"அட சரித்தாம் முருவாயி. என்னமோ புதிசா பேசறயே."

அவன் பிடியிலிருந்து விடுபட்டாள். "இது அடுக்குமா? வேண்டாம்; என்னை விட்டுப்போடு" என்று அவன் காலைப் பிடித்தாள்.

"நாம் புதிசா சந்திக்கலே. முன்னாலே ஒருதரம் இதே குடிசையிலே இருந்தோம்."

"ஆமா."

"பின்னே என்ன பத்தினியாட்டம்."

— தமிழ்த்தென்றல்

இந்தியக்
குடிசைத் தொழிலின்
முன்னேற்றத்தின் எடுத்துக்காட்டு



"கோபுர மார்க் தீப் பெட்டிகள்"

என்றும் எந்நிலையிலும் எல்லா தட்ப வெப்பங்களிலும் உத்தரவாதம் அளித்து தமிழகத்தில் பெயரும் புகழும் கொண்டது.

தீப்பெட்டிகளின் சைடு மருந்து தண்ணீரில் கலைவதில்லை. குச்சி மருந்து 40 டிகிரி பாரன் ஹீட்டில் கழிவில்லாமல் தீப்பற்றக்கூடியது.

SIMCO. SIVAKASI.

— தமிழ்த்தென்றல்

" சீ. வாயை மூடு." என்னை என்ன நினைச்சுப் போட்டே?"

" பொம்பளை !"

அவன் கையைத் திமிறி விட்டு நின்றாள், ரோசமுள்ள பெண் புலி போல.

" அட சரித்தாம்மா. பெரிய பத்தினிதான்."

" நிறுத்து."

" முன்னாலே இங்கே இருந்தது மறந்துபோச்சா?"

" மறக்கலே. அப்போ நான் கன்னிப் பொண்ணு."

" இப்போ மட்டும்?"

" இப்போ இன்னொருத்தன் பெண்சாதி. கட்டினவனுக்குத் துரோகம் செய்யலாமா?"

அவன் திடுக்கிட்டான். அவள் பழைய கன்னிப்பெண் அல்ல; இன்னொருவன் மனைவி! அடுத்த கணம் இன்னொரு மின்னல் அங்கே மின்னி அவள் உடலெங்கும் தெளிந்தது. மழையும் சோவென பாட்டமாகப் பிடித்தது. அவள் அங்கிருந்து நகர்ந்தாள்.

" நீ போக வேண்டாம் மழையிலே, உள்ளே இரு."

" இல்லை. போக வேணும்."

" வேண்டாம். என் மீது பயமாக இருந்தால் நான் போய் விடுகிறேன் " என்று சொன்னவன், அவளை குடிசையில் விட்டு விட்டு, அந்தக் கொட்டுகிற மழையில் அங்கிருந்து ஓட்டம் பிடித்தான்.

வானத்திற்கும் பூமிக்கும் சங்கிலி பொறுத்திய மாதிரி மழை பொழிந்து கொண்டிருந்தது. அவள் நிம்மதியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.



— தமிழ்த்தென்றல்

கிராமத்தின் புனிதம்

வீவீயார்

உலகத்தில் வாழும் மக்கள் போர்க்கோலம் பூணுவதைக் கண்டான் கதிரவன். " ஞான வெளிச்சத்தால் இம் மக்கள் பயன் அடைவதாகத் தெரியவில்லை—இருட்டில் ஆழ்ந்து கிடக்க லாயக்குள்ள மாந்தர்கள் தான் இவர்கள் "— என்று வெகுண்டு மேற்கு மலையில் மறையும் நேரம்.

நல்லூர் சின்னஞ்சிறு பட்டிக்காடு. ஐம்பத்திரண்டு வீடுகளும் சேரிகளும் உண்டு. மக்கள் எண்ணிக்கை 432. சுற்றி தோட்டங்களும் புஞ்சைகளும்; ஆடுமாடு, கழுதை தண்ணீர் குடிப்பதற்குச் சிறிய ஊருணி இருந்தது. கரையைச் சுற்றிலும் சேமித்துவைக்கப்பட்ட குப்பை மேடுகள். ஊருக்கு மத்தியில் மந்தை வெளி. இங்குதான் எல்லா வண்டிகளும் நிறுத்தப் பட்டிருக்கும். ஏர்க் கலப்பைகளும் கிடக்கும். மேற்கு வரிசையில் கம்பம் புல்லால் வேயப்பட்ட சாவடி. சுமார் ஐம்பது பேர் தாராளமாய் படுத்து உருளலாம். முன்னால் அடர்ந்த வேப்பமரம். முற்பகலில் நல்ல நிழல் கொடுக்கும். மரத்தைச் சுற்றி ஆடுகளைக் கட்டியிருப்பார்கள். புழுக்கைதான் எங்கும்.

இரண்டு கிடா கட்டிய கயறுடன் சண்டை போடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார் திருவேங்கட நாயக்கர். நெற்றியில் பிரகாசித்த நாமம் அவர் பரம வைணவ அன்பர் என்பதைக் காட்டியது. வயதும் எழுபதுக்குக் குறையாமலிருக்க வேண்டும். ஆனால் மனிதனைப் பார்த்தால் 45 வயது ஆள் மாதிரிதான் உடம்பிருக்கிறது.

ஏரை இழுத்துக்கொண்டு வருகிற சத்தம் கேட்டது. வடமேற்கு மூலையிலிருந்து வந்தது அந்த ஒலி. கையில் சாட்டையுடன் தலையில் கலயத்தை வைத்துக்கொண்டு மாடுகளைத் தன் போக்கிலே ஓட்டிக் கொண்டு வந்தான். திருவேங்கட நாயக்கர் தலையைத் திரும்பிப் பார்த்தார்.

— தமிழ்த்தென்றல்

"ஏ, மாப்பிள்ளை, ஏன் இவ்வளவு நேரம், அதென்னப்பா, அந்தச் செங்காளை கால் நொண்டுது. ஒத்தையா ரூபா 298 க்கு வாங்கினதில்ல."

"ஆமா, மாமா. அவ்வளவு பணம் போட்டதுதான். கால்ல ஒண்ணுமில்ல. எவனோ இன்னிக்கி ஜீப்கார்ல வாரானுமில. ஓடைப்பாதையில் கல்லை, இங்கிட்டு அங்கிட்டுமா பொரட்டிப் போட்டிருக்காங்க பயகள். அந்த ஊருணிக் கரை மேட்டில ஏறும்போது, ஒரு ஊசிக் கல் தட்டிட்டது. கொஞ்சம் ரத்தம் வந்தது. அவ்வளவுதான்."

"ஏ, சும்மா சொல்லாதே, என்னவானும் நோயிருக்கோ, என்னமோ? ஏமாந்து வாங்கிட்டு வந்து, கல் அடிச்சுட்டதுன்னு ஏமாற்றப் பார்க்கிற."

"மாமா உங்களுக்கு என்ன, எப்போவும் கேலிதான். உங்க வீட்டில் மருந்து மிச்சம் கிச்சம் இருக்காயில்லையா?"

"கொட்டத்திலே உங்க மச்சான் குருவா ரெட்டி யிருப்பான். கேட்டு வாங்கிப் போடு. இரண்டு நாளைக்கு மாட்டை அவிழ்க்காதே. சீக்கிரம் குளிச்சிட்டு, கஞ்சியைக் குடித்துப்பிட்டு வா. ஏழுமை மணிக்கெல்லாம்........."

என்ன மாமா, இன்னிக்கி ஏதாவது திருபானந்தவாரி பேச்சுண்டா" என்று கேட்டான் சதாசிவ ரெட்டி.

"நீ, நல்ல பயலடா! சரி சரி. அதைத் தன்னு; இப்பத்தான் வரப்போதுல்ல, ஓட்டு. டவுனிலிருந்து......மாறிமாறி கலர் சட்டையைப் போட்டுகிட்டு வருவாங்கல்ல. இன்னிக்கு ஒரு வேசம்—போய் சீக்கிரம் வா."

* * *

நல்ல இருட்டு — ஊரிலே ஒரே விளக்கு—மந்தைவெளியிலே தென்வரிசையில் ஒரு குத்துக்கல். அதன் தலையில் ஒரு குழி. ஊரார் ஆளுக்கு ஒரு கரண்டி எண்ணெய் கொண்டு வந்து ஊற்றுவார்கள். யாராவது ஒருவர் மாறி ஒருவர் அதை "வாடா விளக்காய்" பார்த்துக் கொள்வார்கள். குடியானவர்கள் வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு சாவடியில் படுத்துக் கொள்வாரு முண்டு. பழுத்த பழங்கள் அங்கும் இங்குமாகக்கிடக்கும். பலகைக் கல்லில் முடக்கிக் கொள்வார்கள். யாராவது அம்மானை வாசித்தால் கூட்டம் அதிகமாகயிருக்கும். வாலிபர்கள் "டவுனுக்கு" போய் வரும்போது ஏதாவது பத்திரிகை வாங்கி வந்திருந்தால், உலகமெல்லாம் தெரிந்ததுபோல், அளந்து விடுவார்கள். ஒவ்வொரு வேளை இவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டு முற்றுகிற நிலைமை வரும். பெரியவர்கள் சிரித்துக்கொண்டே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இந்த வாலிபக் கூட்டத்தில் கொஞ்சம் பெரியதனம் பண்ணுகிறவன் திருவேங்கட நாயக்கர் மகன் பார்த்தசாரதி. அவனுடைய நண்பன் பொன்னுரங்கத் தேவர். இவன் அடக்கமாயிருப்பான். இவர்களுக்குப் போட்டி சிங்கராயன். குறும்பாகவும் நக்கலாகவும் பேசுவான்.

இவர்களுக்கு ஆதாரமாகப் பேசுகிறவர்கள் இவர்களைத் தவிர வேறு ஆள் கிடையாது அந்தப் பட்டிக்காட்டில். இருந்தாலும் தத்தம்கட்சியைச் சளையாமல் சொல்லிக் கொண்டே திரிவார்கள்.

* * *

கூட்டமும் சுமாராக இருந்தது, ஆணும் பெண்ணுமாக இருநூறு பேராவது இருக்கலாம். "பாம் பாம்" என்று ஒரு ஜீப்கார் வந்து நின்றது. "ஜே இந்த்—வந்தே மாதரம்" என்ற சத்தத்துடன் ஒருவர் இறங்கினர். "ஜே இந்த். வாங்க நாராயணசாமி" என்று அழைத்து வந்தான் பார்த்தசாரதி.

"ஜே இந்த்—மகாத்மா காந்திக்கி" என்று ஆரம்பித்தான் நாராயணசாமி, ஒருவரும் 'ஜே' போடாததைப் பார்த்ததும் வருத்தமடைந்தான். மறுபடியும் "மகாத்மாவுக்கு" என்ருன்.

கூட்டத்திலிருந்த குப்பன் "அதானய்யா காந்தியைத்தான் கொன்னுட்டிங்களே—இப்ப என்ன?" என்று சாடை பேசினன்.

நாராயணசாமிக்கு கொஞ்சம் நாணம் உண்டாயிற்று. "நாமெல்லோரும் இந்நாட்டு உரிமைபெற்ற மக்கள். இந்நாட்டு மன்னர்கள் என்று பாரதியார் சொன்ன வாக்கு பலித்து விட்டது. எல்லோரும் இக்கொடியின் கீழ் வந்து விட்டோம்,"

மூலையிலிருந்த மூக்கன் "அதென்ன கொடி—சர்க்கார் கொடியில,"

நா: "ஆமாம். தாயின்மணிக்கொடி. நமது அரும்பெரும் தலைவர் நேருஜீ டில்லி செங்கோட்டை மீது பறக்கவிட்ட கொடி. எல்லோரும் வணக்கஞ் செய்ய வேண்டிய கொடி."

மூ: "சர்க்கார் கொடியினு—உயரப் பறக்கணுமுனு சொல்வாங்களே—நீங்கள் ஒரு குச்சியில மாட்டிக்கிட்டு கையிலே வைச்சிருக்கீயளே!"

நா: தேசத்துக் கொடியைப் பற்றி அவமரியாதையாப் பேசக் கூடாது."

மூ: அதைத்தானே நானுஞ் சொல்றேன். கூட்டத்திலே பேசறதற்கு உங்க கொடி யெங்கே? கட்சி சொல்ல வந்தா, உங்க கொடியை நாங்களும் பார்த்தாத்தானே நினைவிருக்கும், கைராட்டை போட்டிருக்குமாமலே."

நா: "நாங்கள் அடி பட்டு—சுடுபட்டு—கொல்லப்பட்டு — காப்பாற்றிய கொடி. தேசத்துக்கு விடுதலை வாங்கித் தந்த கொடி."

சிங்கராயன்: "அவர்கள் கொடியின் சாயம் வெளுத்து விட்டது. இருட்டிலேதெரியாது. அதான் இதைக் கொண்டு வந்திருக்காங்க,"

நா: (கோபத்தை அடக்கிக் கொண்டு) "மற்ற கும்பல்களெல்லாம் சுயநலத்திலிருந்தபோது, நாங்கள் எல்லாவற்றையும் தியாகஞ் செய்து, கடைசியாக வெள்ளையனை விரட்டினேம்."

சிங்க: "ஆமாம், அவன் இருந்த இடத்தில் நீங்கள் இருக்கிறீர்.

கள். வெள்ளை போய் கருப்பு வந்திருக்கிறது. அவ்வளவுதான்."

பார்த்தசாரதி: வெளியூரிலிருந்து வந்தவர் சொல்வதை நாம் முதலில் கேட்க வேண்டும். குறுக்கே பேசுவது நல்லதல்ல. அவர் பேசி முடித்த பிறகு வேண்டுமானால், பொன்னுபேசலாம். சிங்கராயன்—நீயும் பேசு."

நா: (புன்முறுவலுடன்) "கூட்டத்தை இவ்வளவு அழகாகவும் ஒழுங்காகவும் நடத்தும் ஸ்ரீமான் பார்த்தசாரதியின் அறிவு மெச்சத்தக்கது. அவரைப் பாராட்டி நன்றியும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

பெரிய பெரிய ராஜாக்களையும், ஜமீன்தார்களையும் ஒழித்துக் கட்டியது எங்கள் கட்சியென்பது உங்கள் எல்லோருக்கும் தெரியும். எத்தனை சமஸ்தானங்களில் குடிகள் வெறும் அடிமைகளாக வாழ்ந்து வந்தனர். இப்பொழுது நம்மைப் போல் சுதந்தர மக்களாகி விட்டனர். எல்லோரும் ஒரே பாரதநாட்டு மக்கள் என்ற உணர்ச்சி வந்துவிட்டது. ஜமீன் நிலங்களில் நீங்கள் உழைக்கின்றீர்கள். ஆனால் நிலம் உங்களுக்குச் சொந்தமில்லை. உழுது பயிரிட்டு விளைந்ததில் பாதிக்குமேல் ஜமீன்தாருக்கு கொடுத்து வந்தீர்கள். அப்படியிருந்தும் உங்கள் நிலைமை எப்படியிருந்தது? யோசித்துப் பாருங்கள். இனிமேல் எல்லாவித நன்மைகளும் வரப் போகின்றன. சர்க்கார் பெரிய பெரிய திட்டங்கள் வகுத்திருக்கின்றார்கள். பொறுத்திருக்க வேண்டும், இப்பொழுது உடனடியாகத் தீர்க்க வேண்டியது உணவுப் பிரச்சினை.

கோடியிலிருந்த குப்பன்: "சண்டை நடக்கிறப்பகூட வெள்ளைக்காரன் 16 அவுன்சு கொடுத்தான்........அப்ப ஏதுங்க பிளாக் மார்க்கட்? இப்ப என்னடான்னா... "ஏழவுன்சு!—எட்டவுன்சுன்னு—" டவுனில—நார்ராங்க;"

நா: "மழை இத்தனை வருடங்களாக இல்லாமல் போய்விட்டதே"

மூக்கன்: "சீனுவில் பஞ்சம் பஞ்சமுனு உங்களைப் போல முந்தி வந்தவரு சொன்னாரே—இப்போ அங்கிருந்து அரிசி வருதாமல—அதெப்படியா?"

நா: "நீங்கள் எல்லோரும் ஒத்துழைத்தால் முடியும். அதைத்தானே சொல்ல வந்தேன். ஒவ்வொரு கிராமத்தாரும் தன் தன் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்."

திருவேங்கடநா: "அப்பா—நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆனா, கிராமங்கள அதன்பாட்டுக்கு விட்டுடுங்க. நீங்க ஏன் தலையிடுறீங்க. எங்க பாடு எங்களோடங்க. நீங்க மட்டும் சாக்கைத் தூக்கிக்கிட்டு அளக்கிறதற்கு வந்திராதீங்க!"

பார்த்தசாரதி: "உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். பெருக்கி நமக்கு வேண்டிய ஒரு அளவு வைத்துக்கொள்ளலாம், மிஞ்சியதை தேவையான பகுதிக்கு அனுப்ப வேண்டுமல்லவா?"

திருவேங்: "உணவு பெருக்கணும்—பெருக்கணும்னு— எங்கிருந்து

பெருகும். நீதான் அலஞ்சு பார்த்தில—இரும்புப் பட்டாவுக்கு ஒரு ஊருக்கு—தக்டுக்கு இன்னொரு ஆபீசு—குழாய்க்கு இன்னொரு அதிகாரி—ரெண்டு வேண்டுமானா, இன்னொரு டிபார்ட்மெண்டு—என்னைக் கிடா உருப்படியாகிறது."

குருவாரெட்டி: "ஆமா, தாத்தா—கிணறு வெட்டறதற்கு பணம் இல்லேன்னு கேட்டா—முதல்ல பாதி ரூபா, லஞ்சம் கொடுக்கணும்—இந்த மாதிரியிருந்தா—என்ன பெருகும்—வயிறுதான் பெருகும்!"

பொன்னுரங்க தேவர்: "நிலத்தைப் பங்கிட்டு, ஒரு நபருக்குப் பன்னிரண்டு ஏக்கர் வீதம் கொடுத்து நல்லாவிளைவிக்கச் சொல்லலாமே."

திருவேங்: "அந்த ஏக்கர், பத்து ஏக்கர் என்னு வாங்கினாங்களே! அவங்க உழுகிறாங்களா? யாராரோ வாரதுக்கு எடுத்துக்கிட்டுதானே பார்க்கிறாங்க."

வெளியூர் போயிருந்த வீரப்பன்: "அப்பச்சி! மந்திரிகளும் நிலம் வாங்கி யிருக்காங்களாமல."

குப்பன்: "ஆமாம், அடுத்த வருசமுல்லாம் வேலையிருக்காதாமல்ல; அப்பத்தான் நிலத்தை உழுவாங்க."

நாரா: "அப்படியெல்லாம் இல்லை. நம்ம மந்திரிகளே மீண்டும் வந்து விடுவார்கள். பயப்பட வேண்டியதில்லை."

வீரப்பன்: "பயமில்ல. ஆனா, சந்தேகந்தானுங்க."

பொன்னு: "எதிலும் சந்தேகம் வேண்டாம். நிலத்தை உழுகிறவனுக்கே கொடுக்கப்படும். ஆனால் யாவும் தேசத்தின் மயமாகி விடும். செலவுகளைக் குறைப்பதற்காக முதலில் சம்பளத்தைக் குறைக்க வேண்டும். யாருக்குமே மாதம் 500 க்கு மேல் சம்பளம் கிடையாது; நூறு ரூபாய்க்குக் குறையாது."

திருவேங்: "ரயில்சார்ச்சைக் கூட்டினாங்க—சந்தோசமினு சொன்ன; அதுசரி. இப்போ ரயில்ல வேலை செய்றவங்களுக்கு சம்பளம் கூட்டணும்; இல்லாட்டா வேலை நிறுத்துனுமிங்கிற. சார்சை கூட்டினா. ஆனா, இப்ப சனங்க சுமக்குது. நீ உம்பாட்டப் பார்க்கிறே—மற்றவங்கள நினைக்கிறயா; அட போப்பா."

வீரப்பன்: "அப்பச்சி!—அவன் சக்கரமும் தலப்பையுமாக வேலை செய்றவன்ல."

நா: "தம்பி—நீ யாரப்பா—தாராசு கையில் பிடித்தவன் போலிருக்கிறதே! வியாபாரிதானே—இனி தனி மனிதர்கள் கொள்ளை லாபம் அடிக்கும் காலம் போய் விட்டது. இனிச் சட்டங்கள் கடுமையாக வரப் போகின்றன: கருஞ் சந்தையினரும் பதுக்கல் பேர்வழிகளும் ஒழிந்தே தீருவார்கள்."

குப்பன்: "நீங்க சொல்றது சரிங்க. அப்படித்தான் செய்யணும். லஞ்சமும், சிபார்சும், டவுட்டு வேலையும் பெருகிப் போச்சுங்க. கடவுளுக்குப் பயந்து நடப்பாரைக் காணுமுங்க! மேலதிகாரி தெரியும், மேலிடம் தெரியும்னுதான் சொல்றாங்க. மேலேயிருக்கிற ஆண்டவனை மறந்திடுறாங்க!"

நா: "கோயில்முந்திரை சாட்சியாகச் சொல்கிறேன். நாட்டில் நம்பிக்கை போய் விட்டது. மக்களுக்கு தெய்வ பக்தியுண்டாக வேண்டும். சபரிமலை அய்யப்ப சாமிகள் ஊர்வலம் வந்துபோனது மக்களுக்குள் நல்ல உணர்ச்சி வந்து விட்டது. வடக்கே கிருஷ்ண பரமாத்மா உடலை விட்டெறிந்த இடத்திலே—சோமநாத் ஆலயம் வெகு விமரிசையாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள்."

வீரப்பன்: "மதச் சார்பற்ற சர்க்கார் இதற்கெல்லாம் உடன்படுதாங்க? நம்மலெயெல்லாம் மூடளுக்கவும், முட்டாளாக்கவும்தானுங்க—இந்த வேலையெல்லாம்; வெறும் பித்தலாட்டமுங்க."

குருவா ரெட்டி: "இங்க, ஒரு பள்ளிக்கூடமில்லேங்க; ஆஸ்பத்திரி இல்லேங்க. அதென்னமோ ஆகாசத்திலிருந்து பேசுமாம்ல—ரேடியோன்னு சொல்றுங்க—அதுவுமில்லேங்க. அதெல்லாம் விட்டிருங்க. இப்ப நீங்க வந்தீங்களே—அந்த ரோடு எப்படி இருக்கு—முதல்ல அதைப் போடச் சொல்லுங்க."

நா: "எல்லாம் மந்திரிகளின் கவனத்துக்குக் கொண்டுவரப்படும். நான் இன்று கிராமத்தார்களாகிய உங்கள் மத்தியில் பேச வந்தது ஒரு செய்தி என்னவென்றால், நிலத்திலே வேலை செய்கிறவர்களுக்கு கூலி நிர்ணயஞ் செய்ய வேண்டியதாயிருக்கிறது. பட்டணங்களிலே, தொழில் ஆலைகளிலே வேலை செய்கிறவர்களுக்கு நேரமும் கூலியும் வரையறுக்கப் பட்டிருக்கின்றன. அதே போல் இங்கும்........"

திருவேங்: "வந்துட்டீங்களா—இதில்லயும் கைவைக்க. சும்மாயிருக்க மாட்டீங்க போலிருக்கே. விவசாயத்தையும் குட்டிச்சுவராக்கத்தான் போறீங்க........"

நா: "அப்படிச் சொல்லப்படாது. பட்டணங்களில் யாரும் எட்டு மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டும். மத்தியில் ஒரு மணி நேரம் ஓய்வு. வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறை........"

சிங்கரா: "எல்லோரும் உழைக்கணும். உழைப்புக்குத் தகுந்த கூலியும் வாங்கணும். யாரும் சோம்பலாயிருக்கப்படாது. ஒன்று சேர்ந்து உழைத்தால்தானே எல்லாம் பெருகும்."

திருவேங்: "ஆமடா. ஆமா பெருகும்—நீ பொல்லா சுத்தியும் அரிவாளும் போட்டு அடிக்கிறவன்ல. உன்கையில ராச்சியத்தைக் கொடுத்தாப் போதும்—ஆட்டு மந்தை மாதிரி கெட்டி மேச்சிக்கிட்டிருப்ப. ஒருவனை ஒன்று சொல்லவிட மாட்ட—சொன்னாலும் கேட்க மாட்ட. நீ சொல்றது சரியினு 'கப்சிப்னு' வேலை செய்யணும். அவனவன் பழக்கப்படியும் மனசுப்படியும் வேலை செய்யாவிட்டாத்தானே, கூத்தாடிக் கொண்டு வேலை செய்வான். எங்கும் மங்களமாயிருக்கும். நீ இழவு வீடு மாதிரியிருக்கணுமினு சொல்ற."

சிங்கரா: "அப்படியில்ல; நீங்க தப்பா நினேச்சிருக்கீங்க. விபரமாச் சொல்றேன்; அப்புறம் சொல்லுங்க."

பார்த்தசாரதி: "சாமி, பேசி முடித்து விடட்டும். கடைசியில் நீ நல்லா பேசலாம். பேசுங்க சாமி."

நா: "பட்டணத்தில் இருப்பவர்கள் குறிப்பிட்ட வேளையில் குறித்த வேலையைச் செய்து விட்டு, ஓய்வான நேரத்தில் தங்கள் சொந்தச் சோலிகளைப் பார்த்துக் கொள்வதற்கு எவ்வளவோ சவுகரியமிருக்கிறது. ஊருக்குப் போய் வரலாம். சினிமாப் பார்க்கலாம். மற்றப்படி வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகளும் செய்து கொடுக்கப் பட்டிருக்கின்றன. கவலையேயில்லை."

திருவேங்: "ஆமாம்—உங்களுக்கு எதுக்குக் கவலை? நாங்க வெய்யிலிலும், மழையிலும், காற்றிலும், சளைக்காமல் வேலை செய்து தானியத்தைச் சேர்க்கிறோம். நீங்க குறிப்பிட்ட நேரத்தில் குறித்த வேலையைச் செய்து விட்டு—சினிமாக்குப் போவ—ஊருக்குப் போவ—கவலையில்லாமலிருக்கிறீங்க — கொடுத்து வச்சவுங்க!"

வீரப்பன்: "நாம வில்லுப் பாட்டும், பொம்மலாட்டமும், காளியாத்தா கரகமும் பார்க்கலாம்ல."

குருவா ரெ: "ஏஞ்சாமி—குறித்த நேரத்தில் குறித்த வேலை செய்யணுமிங்கிறீளா — களத்திலே கதிர் கிடக்கும்—மழை வந்திட்டா "எனக்கு குறித்த நேரமில்லையே இப்போ" —என்று இருந்தால்......"

வீரப்பன்: "என்னப்பா இது கேள்வி. உன் உடம்புக்கு—நல்லதுக்கு—ஓய்வுனு; ஓய்வுதான் எடுக்கணும்."

குப்பன்: "போட்டுஞ் சாமி. காலையிலே ஆறு மணிக்கு ஏறு பிடிச்சா வெய்யில் உச்சிக்கு வர்றதுக்குள்ள பாதி வேலை முடியும். நீங்க சொல்றுப்பல எட்டு மணிக்கு பிடித்து 12 மணிக்கு விடணும், 1 மணிக்குப்பிடித்து 5 மணிக்கு விடணுமுனு; வேலை எப்படி நடக்கிறது? எத்தனை ஏறு விடறது? கூலி என்னாகும்? கணக்குப் பார்த்தீங்களா—சாமி."

வீரப்பன்: "சாமி, கோயில்ல கூட இல்லீங்கிருங்க; நீ, சாமி–சாமினு; அது கிடக்கட்டும். எந்தக் காலத்தில் ஏர் பிடிப்பது—தண்ணீர் இறைப்பது, பாத்தி கட்டுவது—நாத்து நடுவது—களை பிடுங்குவது—எல்லாம் நிலத்திலே வேலை செய்கிறவன்களுக்குத்தான் தெரியுமா? இல்ல ஜீப் காரிலே சுற்றுகிறவன்களுக்குத் தெரியுமா? வெய்யில்ல என்ன வேலை செய்யணும்—மழைக்குறி என்ன—மழை வந்தால் என்ன செய்யணும் என்பதல்லாம் நடக்குத் தெரியுமா? இல்ல கோட்டைக்குள் குந்திக் கொண்டிருக்கின்றவர்களுக்குத் தெரியுமா?"

மூக்கன்: "நமக்கு இங்கு கிடைக்காத சாமான்களை இந்த ஐயாட்ட சொன்னா—வாங்கித் தருவார்ல—உற்பத்தியைப் பெருக்கணும்னு........"

சதாசிவ: "பட்டை, தகரம், குழாய், செமண்டு—இதெல்லாம்

எங்கங்க வாய்க்கறுது—இவருக் கேத் தெரியுமோ என்னமோ? இப் பக் கேட்டா—அடுத்த பட்டத்துக்கு வந்திடும்—அதுவும் ஞாயப்பாடுதான்!"

நா: "சந்தேகம் வேண்டாம்: இப்பொழுது ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக பெரிய பெரிய அதி காரிகளைப் போட்டிருக்கிறார்கள். உடனுக்குடன் கவனித்துச் செய் வார்கள்."

திருவேங்: "ஆமா. அதிகாரி பெருத்தது சரி; வேலையும் பெரி சாச்சு. ஒரு மந்திரி வந்து போனால் ஒரு வாரம் வேலை கெட்டுப் போறது நம்ம துரைகளுக்கு. ஒரு மந் திரியை ரயிலில் ஏத்திட்டு வந்தா மறுநாள் காலையில் மண்டபத்தில் ஒரு மந்திரி வந்திறங்குவாரு. இதே வேலைதான் போ. மந்திரி வந் தான்னா? நம்ப அண்ணா—இல்லாட்ட —மச்சான்தானே! வரப்ப அதிகாரி கள் போய் சந்திக்கலாம். அதுவும் வேற வேலையிருந்தா விஷயத்தை எழுதி விடறார். அல்லது அவச ரம்னா மந்திரி கூப்பிட்டுக் கொள்ள லாம். அதை விட்டுப்பிட்டு பின் னாலே நிழல் மாதிரி ஓடறாங்கன்னு— வேலைதான் கெடும்—அன்றுட வேலை யைப் பார்த்து நமக்கு எதை எப்போ கொடுக்க போகிறார்கள்—அன்றுட அந்தந்த வேலையை எப்படி பார்க்கப் போறாங்க."

சதா: "மாமா, இந்த ஐயா என்னமோ சொன்னாரே கூலியை ...."

திரு: "ஆமா—மாப்பிள்ளை— வாயைப் பிளந்துகிட்டு இரு, உனக் குக் கிடைக்கறுதிது—நாம் எல்லாம் உழைத்தால்தான்........"

வீர: "தபால்காரருக்கு மாதம் 85—கலக்டர் ஆபிஸ் வேலைக்கு 55."

நா: "அதெல்லாம் சமன்படுத் தலாம். உற்பத்தியைப் பெருக்கி னால்—விலைவாசிகுறையும்—செலவை யும் குறைக்கலாம். உழவுத் தொழி லில் இன்ன கூலி என்று......"

திரு: "போய்யா — போ — நான் வேலை செய்றேன்—என் பொண்டாட்டி வேலை செய்றா—மரு மகன் கூட வேலை செய்றான்—பால் பார்த்தசாரதியும கூடதான். காலை யில் 5 மணிக்கு எழுந்து சதாசிவம் மாட்டுக்கு விதை ஆட்ட ஆரம்பிக் கிறதிலிருந்து மாலை 6 மணி வரைக் கும் எல்லோருக்கும் வேலைதான். அப்படிப் பார்க்காட்டா—குப்பை மேடாகும், நிலமெல்லாம்; காலா காலத்திலே—நேரம்பொழுது பார்க் காமல் எல்லா வேலையும் எல்லோ ரும் செய்யறோம். மருமகன் மண் அள்ளிப் போடுவான்—நான் வண்டி ஓட்டிப் போவேன்—குருவா ரெட்டி யும் அவன் பொஞ்சாதியும் குப்பை யைச் சிதறுவாக. எங்க வீட்டில் கஞ்சி காச்சறும் — காட்டுக்குக் கொண்டு வரறும்—களையும் எடுக் கறார்—இதில் யாருக்கு எந்தவேலை— எவ்வளவு நேரம்—என்ன கூலி—எப்ப டியப்பா கணக்குப் போடறது? பட்ட ணத்தைப் பாழாக்கினது போதும்—பட் டிக்காட்டுப் பக்கம் வர வேண்டாம்— ஐயா! நீங்க கேட்கிற சாமானை மாத்திரம் காலத்தில் கொண்டு வந்து கொடுங்க. பிறகு

— தமிழ்த்தென்றல்

எதிலும் தலையிட வேண்டாம். தன் னாலே பெருகும் பாரு, எல்லாம். சரி, சரி, போதும், போதும்—வா— சாப்பிடலாம்—கூட வந்த வேலைக் காரனை எங்கே—கூப்பிடுங்க." (திரு வேங்கிட நாயக்கர் எழுந்தார்.)

நா: "உங்கள் அன்புக்கு நன்றி—வருகிறபோது "சப்பாத்தி யும் ஓவலும்" சாப்பிட்டு வந்தேன்— கொஞ்சம் 'பசும்பாலும் பழமு'மிருந் தால் போதும்—தோழர்களே— ஜேய் இந்த்!"

[எல்லோரும் கூட்டத்தில் நடந்த விவகாரங்களைக் கவனித்துக் கொண்டிருந்து விட்டதால், குத்துக் கல் விளக்கைத் தூண்டிவிட மறந்து விட்டார்கள். எண்ணெய்யும் வற்றி விட்டது. ஒரே ஒளியும் மறைந்து விட் டது. நகரத்தாருக்கு ஒரே இருள் மயமாகத் தெரிந்தது.]

ஓர் இரவில் உன்னத சாதனை

ஒரே ராத்திரிக்குள் ரோடு போடு வதை சாத்தியமாக்கும் நூதன இயந்திரமொன்று தற்போது பிரிட் டனில் செஸ்டர் நகரில் உபயோ கத்திற்கு வந்துவிட்டது. 90 அடி நீளமும் 50 டன் நிறையுள்ளது மான இப்பொறி பெரிய பெரிய பாறைகளை கப்பிகளாகஉடைத்து மணிக்கு 40 டன் வீதம் லாரிகளில் ஏற்றியும் விடுகிறது! இதை இயக்க மூன்று நபர்கள் தான் தேவை. "கோலியாத்" என்பது தான் இதற்குப் பெயர்.

கலர் வைரங்கள் :

பர்மிங்ஹாம் சர்வ கலாசாலை யிலுள்ள 300 டன் பெரிதான சைகுளோட்ரான் என்ற அணு சக்தி ஆராய்ச்சி இயந்திரத்தில் சாதாரண வைர கற்கள் விதவித மான கலர்களில் மாற்றப்படுகின் றன. இவ்வாறு கலர் பெற்ற வைரங்கள் மிக மிக அழகு கொடுக்கின்றனவாம்.



— தமிழ்த்தெ

காலத்தின் கோலம்

[32-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

உலகத்தில் நடைபெறும்

பல்வேறு ஆட்சியில் சட்டத்துக்கும், ஒழுங்குக்கும், அமைதிக்கும் மீறி நடப்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கும் வழிகளில் தூக்குத்தண்டனை ஒன்று. இத்தண்டனை சட்டத்துக்குட்பட்டதுதான். பிறப்பும் இயற்கை; இறப்பும் இயற்கை. எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். மனித உற்பத்தியைத் தடுப்பதற்கு செயற்கைமுறைகளை சிலர் ஆதரிக்கின்றார்கள். இதை எதிர்ப்பவர்கள் "இயற்கையைத் தடுக்கலாமா" என்று ஆத்திரமடைகின்றார்கள். இறந்துவிட்டால் இயற்கை எய்தினான் என்று ஆறுதல் அடைகிறார்கள். பிறப்பை செயற்கையில் தடுக்கப்படாதென்றால், இயற்கையாக ஒருவன் மரணமடையலாமே ஒழிய, யாரும் கொல்லலாமா? கொல்வது குற்றம், சட்டப்படியும், அறநெறிப்படியும். ஆனால் அதைத்தண்டிக்குமுகத்தான், தூக்கிலிட்டுக் கொல்வது சட்டம் இடங்கொடுத்தாலும், அறநெறியாகுமா? ஆகாதென்றே சொல்கிறோம்.

ஆகவே ஐதராபாத்தைச் சார்ந்த தெலுங்கானாப் பகுதியில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த பன்னிரண்டு கம்யூனிஸ்ட் கைதிகளின் தண்டனைகளை ஆயுட்த் தண்டனையாக மக்களாதிபன் ராஜன்பாபு மாற்றியதைக் குறித்து பெரும் மகிழ்ச்சியடைகிறோம். ஒருவன் செய்யும் குற்றத்துக்கு பெரும்பாலும் காரணமாக இருப்பது என்ன? சுற்றுச்சார்பும் சூழ்நிலையும். முதலில் அதனைச் சீர்படுத்த வேண்டாமா?

அடிப்படை உரிமை விதிகளின்படி

யாருக்குமே சமநீதியும், நேர்மையான, வெளிப்படையான விசாரணையும் உண்டு என்று சொல்லப்படுகிறது. அதற்காகத்தான் தனிப்பட்ட அங்கமாக நீதிமன்றங்கள் விளங்குகின்றன. ஆனால் லஞ்சம் போன்ற சில குற்றங்களை விசாரிப்பதற்குத் தனி ட்ரிபூனல் ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தின் முடிவுகள் சர்க்காருக்கு அனுப்பப்பட்டு அவர்கள்தான் இறுதியான தீர்ப்புக் கொடுப்பவர்களாகயிருக்கிறார்கள். குற்றங்களை பூர்வாங்கமாக விசாரிப்பதும், குற்றத்தைச் சாட்டி வழக்குத் தொடர்வதும் அரசாங்கத்தின் சிப்பந்திகள். விசாரிக்கும் மன்றத்தின் அங்கத்தினர்கள் அரசாங்கத்தாரால் குறிப்பிட்ட காலத்துக்கு நியமிக்கப்பட்டவர்கள். இறுதியான முடிவுக்கு வருகிறவர்கள் அரசாங்கத்தார்.

இது நேர்மையான முறையில்லையென்றே கருதுகிறோம். மேலும் யாராவது பொய்க் கைச்சாத்திட்டு ஒரு புகார் அனுப்பினாலும் அதைப் பற்றி விசாரணை கிளம்பிவிடுகிறது. சரி, எப்பேர்ப்பட்டவர் வருகிறார்? பத்துநூறு ரூபாய் சம்பளம் வாங்குகிற நிரந்தர அதிகாரியைப் பற்றி ஒரு நூற்றிஐம்பது வாங்

— தமிழ்த்தென்றல்

கும் 'காயமாகாத' ஆசாமி விசாரிப்பார்,' தெருவிலும், திண்ணையிலும் கிளப்பிலும், சாலையிலும். குற்றத்தை விசாரித்துத் தண்டிக்க வேண்டியதுதான். உறுதியாகச் செய்ய வேண்டும். ஆனால், கொஞ்சம் மரியாதையாக நடக்க வேண்டாமா? இல்லையேல், உண்மையோடு உழைக்கும் சிப்பந்திகளிடமும் உற்சாகக் குறைவும், வேதனைப்பட்ட வாழ்க்கையையும்தான் காண முடியும். அரசாங்கம் கவனிக்க வேண்டுமென விரும்புகிறோம்.

இந்தியாவுக்கு அமெரிக்காவிலிருந்து

கோதுமை வரும் வரும் என்று மாதக் கணக்காகப் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது. ஏதாவது சாக்குப் போட்டு ஒரு முடிவுக்கும் வராமலிருக்கிறார்கள், அந்நாட்டு ஆட்சியாளர்கள். இதற்கிடையேபாகிஸ்தான், பர்மா கோதுமையும், அரிசியும் வந்து விட்டது. சீனா அரிசியும் வருகிறது. ரசியாநாட்டு கோதுமை திட்டமாக வரப்போகிறது. இந்த நாடுகள் எல்லாம் மரியாதைக் குறைச்சலான நிபந்தனைகளில்லாமல் உணவுப்பொருள்கள் நமக்கு அனுப்புகின்றன. அது அமெரிக்கர்களை நாம் வெறுக்கும் வண்ணம் செய்யும் சூழ்ச்சியாக இருக்கலாம். சூழ்ச்சியோ இல்லையோ, சரக்கு வருகிறது. ஆனால் அமெரிக்கா வெறும் வாய்வீச்சிலேயிருக்கிறது. நகைப்புக்கிடமாக நிபந்தனைகளும், சால்சாப்புகளும் சொல்லிக் கொண்டிருக்கிறது. பிறநாட்டார்களில் நம்மீது உண்மையான பற்றுதல் உள்ளவர்கள் யாரென்றால், ஆங்கிலேயர்களைத்தான் சொல்ல வேண்டும். நம்மை அடிமைப்படுத்தி ஆண்டவர்கள் என்பதற்காக அவர்களின் உள்ளக் கிடக்கையை மறுக்கக் கூடாது. இப்பொழுது அவர்கள் வலிவிழந்து திண்டாடிக் கொண்டிருக்கலாம். எனினும் எந்த ஆபத்துக் காலத்திலும் நாம் ஆங்கிலேயர்களை நம்பலாம்என்பதுதான் எமது எண்ணம். காலந்தான் சொல்ல வேண்டும்.

— தமிழ்த்தென்றல்

புலி வருகிறது! புலி வருகிறது!!

என்பது போல, வகுப்புவாரி உரிமையைப் பற்றி என்னமோ வரப் போகிறதென்று காத்திருந்தோம். தில்லி போய்வந்த மந்திரி ஒவ்வொருவரும், தினுசு தினுசாக பல்லவி பாடுகிறார்கள்.

"அரசியலைத்திருத்ததில்லி தயாராகயில்லை. சென்னைத் தீர்மானம் சென்னையிலேயிருக்கிறது" என்று சொல்கிறார் கனம் சீதாராம ரெட்டியார்.

"வகுப்புவாரிஉத்தரவு அமல்நடத்தப்படமாட்டாது. அரசியல் சட்டத்தைத் திருத்தும் மசோதாவும் இப்போது வராது" என்று கைவிரித்து விட்டார், நமது நிதி அமைச்சர் கோபால் ரெட்டியார்.

"இந்தியசர்க்கார்மசோதாநிறைவேறியதும் வகுப்புவாரி உத்தரவுக்குப் பதிலாக சென்னை சர்க்கார் புது உத்தரவு ஒன்று பிறப்பிக்கும்." இது

கனம் பக்தவத்சலம் அவர்கள் கூற்று.

“இந்திய சர்க்காரின் இறுதி முடிவு தெரிந்த பிறகே புது சட்டதிட்டம் தயாரிப்போம்” என்று முதலமைச்சர் ராஜா எச்சரிக்கிறார்.

வகுப்புவாரி உரிமைநீதி அமலில் இருக்கும்படி சட்டத்தைத் திருத்தவும்முடியாது, செய்யவும்மாட்டார்களென்று முன்னமே எழுதியிருக்கிறோம்.

“வகுப்புவாரி உத்தரவுபற்றிய நமது கோரிக்கையை நேரு, ராஜாஜி அனுதாபத்தோடு கேட்டனர்” என்று ராஜா அவர்கள் திருப்தியடைகிறார்கள். ஆனால் நமக்கு வெட்கமாகத் தோன்றுகிறது. சென்னையின் நிலைமை நன்கு தெரிந்த அனுபவசாலி, ராஜாஜி. வெறும் அனுதாபங் காட்டுவதால் யாருக்கு பிரயோசனம் என்று கேட்கின்றோம்.

இவர்களைக் குறை கூறிப் பயன் என்ன! வருகிறது தேர்தல். காங்கிரசே பெரும்பாலும் வெற்றியடைந்து விடுமென்று சொல்லிக் கொள்கிறார்கள், எனினும், பொதுமக்கள் தங்கள் உறுதிப்பாட்டைத் தெரிவித்துக்கொள்ள ஒரு வழியிருக்கிறது. காங்கிரசாரால் நிறுத்தப்படும் நபர்களில் வகுப்புவாரி உரிமைக்கு எதிரிகள் எனத் தெரிந்தவர்களை எந்த உபாயத்திலும் தோற்கடித்து விடுவதோடு, உரிமைக்குப் பாடுபடும் பண்புகொண்டயாராவது தேர்தலில் நிற்க முன்வந்தால் கட்சியைப் பார்க்காமல் அவர்களை வெற்றிபெறும்படி செய்ய வேண்டும். “தவறானவர்களைத் தேர்ந்தெடுத்தால் நாட்டுக்கு பெரும் நஷ்டம் ஏற்படும்” என்று நாட்டுக்கு அதிபதி எச்சரித்திருக்கிறார்.

ஆட்டைக் கடித்து
மாட்டைக் கடித்து
துருத்தியைக் கடித்தது

போலிருக்கிறது, தில்லி “யூனியன் சர்க்கார் தர்பார்!” உள்நாட்டில் அமைதிக்கு பங்கம் வராமலிருப்பதற்கும், வெளிநாட்டிலிருந்து அபாயம் வராமல் தடுப்பதற்கும், நாடெங்கும் ஒரேவித நாணயக் கொள்கை நிலவவேண்டுமென்பதற்காகவும், மத்திய அரசாங்கத்துக்கு சில குறிப்பிட்ட அதிகாரங்கள் தேவையென்று சொல்லப் பட்டது. அவ்வாறே கொடுக்கப்பட்டது.

ஆனால் ஏதாவது ஒரு சாக்கு சொல்லப்பட்டு மாகாணங்களின் உரிமைகளும் சுதந்திரங்களும் பறிபோய்க் கொண்டேயிருக்கின்றன. அனாவசியமாக பலவகையில் தலையீடு அதிகமாய் வருவதால், நாட்டைப் பாழ்படுத்தி விடுவதோடல்லாமல் குரோதமும், வெறுப்பு உணர்ச்சியும் சீக்கிரம் வளரும்படி செய்து விடுவார்களென்றே அஞ்சுகிறோம்.

எரிகிற நெருப்பில் நெய் வார்த்தது போலிருக்கிறது தில்லி சமஸ்தான இலாக்காவின் போக்கு. முன்பு சுதேச சமஸ்தானங்களாக இருந்தவைகளை ‘பி’ பிரிவு மாநிலங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

— தமிழ்த்தென்றல்

இந்தப் பிரிவுகளில் தலைவர்களாக அதாவது ரா.ஜ பிரமுகர்களாக இருப்பவர்கள் முன்னாள் குட்டி அரசர்கள். முதலில் இந்த பிரமுகர்கள் தங்கள் ராச்சியத்தைவிட்டு வெளியே போவதென்றால் தில்லி அமைச்சரிடம் அனுமதி வாங்கிக்கொள்ள வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். பிற்பாடு அந்த ராச்சியங்களின் மந்திரிசபையில் மாறுதலேதேனும் ஏற்பட்டால் தில்லியார் அங்கீகாரம் பெற்றுத்தான் செய்யவேண்டுமென்று தெரிவித்து விட்டார்கள்.

இப்பொழுது கடைசியாக ஒரு அநியாய வேண்டுகோளாம். என்னவென்றால்: ராச்சியத்தின்உயிர்நாடியான வேலைகளாகிய முதல் காரியதரிசி, நிதிகாரியதரிசி, ரெவின்யூ போர்டு அங்கத்தினர் பதவிகளை நிரப்புவது சம்பந்தமாக தில்லி தேவதையை ஆலோசனை கேட்டுக்கொள்ளல் வேண்டுமாம். அக்கிரமத்திலும் அக்கிரமம்! காங்கிரசார், மத்தியத்தில் அரசாங்க அதிகாரத்தை குவிக்கப்படாதென்று (முன்பு) கத்தியவர்கள் சனநாயக முறையில் தழைத்தவர்கள். நிர்வாகம் அறிந்தவர்களாம்!

‘பி’ பிரிவு ராச்சியங்களுக்கு ஏற்பட்ட கதியே ‘ஏ’ வகுப்புக்கும் வந்தால் சென்னையின் கதி என்னவாகும் என்பதை கண் இருந்தும் குருடர்களாயிருந்தாலும் கொஞ்சம் பகுத்து அறிந்தால் விளங்காமல் போகாது.

“ஐக்கோர்ட் நீதிபதிகளை ஒரு காணத்திலிருந்து அடுத்த மாகாணத்துக்கு மாற்ற வசதி செய்துகொள்ளப் போவதாகத் தெரிகிறது. அதுவும் வந்துவிட்டால் போதும். **நஞ்சின் கடைசித் துளியும் தொண்டைக்குள் செலுத்தி விட்டது போலாகி விடும். பின்னர் நாமெல்லோரும் நடைப் பிணங்கள்தான்.**

— தமிழ்த்தென்றல்

ஆகவே இந்நிலைமையில்,

32 வது
மாகாண மாநாடாக
நடைபெற வேண்டியது

17 வது மாநாடாக அசல் ஜஸ்டிஸ் கட்சியின் கூட்டம் அண்மையில் சென்னையில் கூடிற்று. அக்கட்சியின் அசையாத வீரர் திரு B. இராமச்சந்திர ரெட்டியார் தலைமை வகித்து நடத்தியிருக்கிறார். ஜஸ்டிஸ் கட்சியும் தேர்தலில் போட்டி போட வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். இத்தீர்மானத்தை வரவேற்கிறோம்.

ஏழைமக்களின் காங்கிரசாக இருந்தது, அரசாளும் ஆணவம் படைத்ததாகமாறிவிட்டது. எனினும் தேர்தல்செலவுக்காக நான்குகோடி ரூபாய் திட்டம் போட்டிருக்கிறது. ஆகையால் ஜஸ்டிஸ் கட்சியாளரும் மக்கள் அதாவது ஓட்டர்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய தேர்தல் திட்டத்தை வகுத்து, காலந்தாழ்த்தாது கட்டியங் கூற வேண்டும். காங்கிரசை பொதுமக்கள் வெறுக்கின்றார்கள் என்பது கண்கூடு. ஆனால் அந்த உணர்ச்சிமட்டும் போதாது. அதைத் திரட்டி உருவகப் படுத்த வேண்டும்.

"தமிழ், தெலுங்கு, கன்னடம், கேரளம் ஆகிய மொழிவாரியாகிய மாகாணங்கள் பிரிக்கப்பட்டு இவைகள் தென்இந்தியர் நலனைப் பாதுகாத்துக் கொள்வதற்காக ஒரு தென் இந்திய சம்மேளனமாக இயங்க வேண்டுமென்று" தீர்மானித்திருக்கிறார்கள்.

நிர்வாகத்தில் அனுபவமும், ஆற்றலும் மிகுந்தவர்களாகவும், அரசியல் நடவடிக்கைகளில் நல்ல நிதான போக்குள்ளவர்களாகவுமுள்ள தலைவர்களைக் கொண்ட ஜஸ்டிஸ் கட்சி இப்படிப்பட்ட தீர்மானமான முடிவுக்கு வந்ததென்றால், டில்லி அரசாங்கத்தாரின் போக்கு எப்படியிருக்கிறதென்று, யூகித்துக் கொள்ளலாம். தீர்மானத்தை உருவாக்கி நிறைவேற்றிய தலைவர் இராமச்சந்திரரைப் பாராட்டுகிறோம். ஆதரிக்கிறோம்.

நடு இடத்திலிருந்து கொண்டு கவனிக்க வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்க, வீணாக மாகாண காரியங்களில் மாட்டிக் கொள்வது நல்லாட்சிக்கு வழியில்லையென்று எச்சரித்துக் கொள்ள விரும்புகிறோம்.

இன்னும் ஒன்றரை ஆண்டில்
இந்தியாவில் பெனிஸிலின் உற்பத்தி

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் இலவசமாக அளிக்கப்படும்

ஐக்கிய நாடுகளின் உதவியைக் கொண்டு இரண்டு கோடி ரூபாய்ச் செலவில் இந்தியாவில் நிறுவப்போகும் பெனிஸிலீன் தொழிற்சாலை இன்னும் ஒன்றரை வருஷத்திற்குள் வேலை செய்யத் தொடங்கிவிடும் என எதிர்பார்க்கிறார்கள்.

இதற்கு வேண்டிய தொழில்நுட்ப உதவியை அளித்து, இந்தியர்களுக்கு அத்தொழிலில் பயிற்சி அளிப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் முன் வந்துள்ளது. இவ்வேலைக்கு 17½ லட்சம் ரூபாய் பிடிக்கும்.

தொழிற்சாலைக்கு வேண்டிய இயந்திர சாதனங்களுக்கு 42½ லட்சம் ரூபாய் செலவாகும். இத்தொகை ஐ. நா. சர்வதேசக் குழந்தைகளின் அவசர நிதியிலிருந்து கிடைக்கும்; இதற்குப் பதிலாக இந்திய அரசாங்கம் இந்தியத் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் 42½ லட்சம் ரூபாய் பெறுமான பெனிஸிலீன் மருந்துகளை இலவசமாகக் கொடுத்து உதவ ஒப்புக்கொண்டுள்ளது. (யூனிஸ்)

தமிழ்நாடு ... நூலகம்
சென்னை-600 008

தமிழ் ... !

தமிழ்த்தென்றல்
1951, ஆண்டு மலர்

ஆனி முதல் நாளில் அரும்பிப் பூக்கும்

- ✳ கண்கவர் வனப்பில் சித்திரங்கள்
- ✳ கருத்தைக் கிளரும் கட்டுரைகள்
- ✳ கலை விளக்கங்கள்
- ✳ மறுமலர்ச்சி கருத்தோவியங்கள்
- ✳ சீர்திருத்த சிறு கதைகள்
- ✳ சிறப்பு மிக்க இலக்கிய நுணுக்கங்கள்
- ✳ சீரிய பிறமொழி தமிழாக்கங்கள்
- ✳ இனிய கவிதைகள்
- ✳ இங்கிதமுறையில் நாடக, திரைப்பட குறிப்புகள்

— மற்றும் —

- ✳ எண்ணிறந்த ருசி மிக்க அம்சங்கள்

நூதன முறையில் தயாரி

ஒன்றுக்கு நான்கு கிரவுன் அ

விலை ரூபாய் ஒன்றரை

சந்தாதாருக்கு ரூபாய் ஒன்றேகால்

உங்கள் வர்த்தகமும் கைத்தொழிலும் வளர்ந்து செ

ஆண்டு மலரில் விளம்பரம் செய்யு

விளம்பர விகிதம்:	உள் பக்கம் 1 க்கு	ரூபாய்	
	உள் அட்டை பக்கம்	,,	1
	வெளி அட்டை பக்கம்	,,	2

"தமிழ்த் தென்றல்" விரு

தென்றல் செய்திகள் சிந்தனையைக் கிளறும்!

பேபி காப்பி விருதுநகர்.

அசல் புஷ்பராகங்கள், நவரத்தினங்கள், இதர ரெங்கூன் கமலங்களுக்கு
பிரசித்தி பெற்ற ஸ்தாபனம்

சிவ. ப. ராஜரத்தின நாடார் & பிரதர்ஸ்

நகை வியாபாரம், விருதுநகர். பிராஞ்சு: கீழாவணிமூலவீதி, மதுரை

உயர்தர என்லார்ஜ்மெண்டுக்கும் அழகிய போட்டோ படங்களுக்கும்
கலை சிறந்த இடம்

"அமர்ஜோதி ஸ்டுடியோ"

விருதுநகர்.

கெங்கா ஸ்டோர்ஸ்

தெப்பம் வடக்குத் தெரு, விருதுநகர்.

உள்ளத்திற்கு உற்சாகம்: உடலுக்கு உரம்: குழந்தை வளர்ப்புக்கு ஆதாரமான உணவு
உயர்தரமான பிஸ்கட், கேக் தினுசுகள் விலை சகாயமாகக் கிடைக்கும்.

சந்திர பவான் பாம்பே பீடா

இந்நகரில் 15 வருடங்களாக சேவை செய்கிறது. ஸ்தாபிதம்: 1936.
புரோப்ரைட்டர்: P. A. K. பழனிச்சாமி & சன்ஸ், ஆஞ்சநேய ஹோட்டல்
விருதுநகர்.

எதற்கும் அறிமுகம் அவசியமே!

புத்தகங்கள், பத்திரிகைகள்
விற்பனையாளர்கள்
தமிழ்ப்பண்ணை
யாழ்ப்பாணம் - இலங்கை.